# கோகுலம்

GOKULAM

டிசம்பர்'86 ரூ. 2.



# வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



**காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.**

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.




## 23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

| | |
|---|---|
| புரதம் | [illegible] |
| கொழுப்பு | [illegible] |
| கார்போ | [illegible] |
| ஹைட்ரேட் | [illegible] |
| கால்ஷியம் | [illegible] |
| பாஸ்பரஸ் | பென்டோதெனேட் |
| சோடியம் | கோலின் |
| குளோரைடு | [illegible] (பி₂) |
| (ஸி வடிவில்) | வைட்டமின் (பி₁₂) |
| பொட்டாஷியம் | போலிக் அமிலம் |
| இரும்புச்சத்து | வைட்டமின் ஸி |
| அயோடின் | வைட்டமின் டி |
| வைட்டமின் 'ஏ' | வைட்டமின் ஈ |
| வைட்டமின் 'பி' | வைட்டமின் கே |

பால் சேர்த்திடத் தேவையில்லை.



**காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு**

B84. GLC. 120 Tm



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்

# கோகுலம்

**1986 டிசம்பர் மாத இதழ்**
**மலர் 4 இதழ் 11**
**தனிப்பிரதி ரூ. 2/–.**
**ஆண்டுச் சந்தா ரூ. 24/–**
**கௌரவ ஆசிரியர்:**
**அழ. வள்ளியப்பா**



புகைப்படம்: கோவை சீதாராம்.

## அருமைச் சிறுவர் சிறுமியரே,

ராஜாஜி மேற்கு வங்க கவர்னராயிருந்தபோது, கல்கத்தாவில் சிறுவர்களுக்கு ஒரு விருந்து வைத்தார். அந்தச் சிறுவர்கள் எல்லோருக்கும் எல்லையில்லாத மகிழ்ச்சி. 'கவர்னர் மாளிகையில், கவர்னரே நமக்கு விருந்து வைக்கிறாரே!' என்று களிப்படைந்தார்கள்.

சிறுவர்கள் அறுசுவை விருந்து உண்ணும் போது ராஜாஜி ஒவ்வொருவர் அருகிலும் சென்று, சிரித்துப் பேசி மகிழ்ந்தார். அப்போது ஒரு சிறுவனின் காதைப் பிடித்து மெதுவாகத் திருகினார். திருகிக் கொண்டே ''தம்பி, நான் உன் காதைப் பிடித்து முறுக்குகிறேனே. இதைப் பற்றி நீ உன் மனசுக்குள் என்ன நினைக்கிறாய்? நான் இப்படிச் செய்வது அஹிம்சையா? அல்லது ஹிம்சையா?'' என்று கேட்டார்.

உடனே அந்தச் சிறுவன், ''இது அஹிம்சையுமில்லை; ஹிம்சையுமில்லை. நீங்கள் என்னிடம் காட்டும் அன்பு, அன்பு, அன்புதான்!'' என்று பளிச்சென்று பதில் கூறினான்.

இதைக் கேட்டு, சிறுவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். ராஜாஜி; அச்சிறுவனைப் பாராட்டி வாழ்த்தினார்.

டிசம்பர் 10 ஆம் தேதி ராஜாஜி பிறந்த நாள். அவர், தமக்குச் சிலை வைப்பதையோ, பிறந்த நாளைப் பெரும் செலவில் கொண்டாடுவதையோ, விரும்பியதில்லை. அவர் உங்களுக்காக ஏராளமான குட்டிக் கதைகளையும் எளிய நடையில் இராமாயணம், மகாபாரதம் போன்ற உயர்ந்த நூல்களையும் எழுதியிருக்கிறார். அவற்றையெல்லாம் நீங்கள் படிப்பதோடு, அவரது வாழ்க்கை வரலாற்றையும் தெரிந்து கொள்ளுங்கள். அவரைப் போலவே நாட்டுக்கும், மொழிக்கும், கலைக்கும் தொண்டாற்ற முயற்சி செய்யுங்கள். நீங்களும் சிறந்து விளங்குவீர்கள்.


தீபாவளி வாழ்த்து அனுப்பிய அனைவருக்கும் நன்றி. உங்கள் அனைவருக்கும் அச்சாரமாக எங்களது கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

—அழ. வள்ளியப்பா

# இந்த இதழ் எழுத்தாளர்கள்



இ. ஜே. தீன்




வெஸ்ஸ்



ந. இரவிப்பிரகாஷ்


# பிருந்தாவனக் கவிஞர்கள்



டி. எம். பார்வேஸ்



ஓ. சாரதா தேவி



பா. வெற்றிச் செல்வம்



வ. அருள்சாமுவேல்

# பிருந்தாவனக் கதாசிரியர்கள்



ஆர். பத்மநாபன்




ந. செந்தில்குமார்

வண்ண அட்டைப்படம்: சரஸ்வதி சத்தியமூர்த்தி



# ராஜாஜி வாழ்விலே



* சேலம் மாவட்டத்தில் தொறப்பள்ளி என்ற ஊர்—மிகுந்த புண்ணியம் செய்த ஊர். அந்த ஊரில்தான் 'நல்லான் சக்கரவர்த்தி' வம்சத்திலே ராஜாஜி பிறந்தார்.


* இவருடைய தந்தையார் கிராம முன்சீப்பாக இருந்தார். நன்கு படித்தவர். சாஸ்திரங்களைக் கற்றவர்.

* ராஜாஜி மாணவராயிருந்தபோது, ஒரு புத்தகத்தை ஒருமுறை படித்தாலே போதும்; அப்படியே அதிலுள்ள வரிகள் மனப்பாடம் ஆகிவிடும்!

* திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமம் அமைத்து, கதர் உற்பத்தி, தீண்டாமை ஒழிப்பு, சேரிகள் சீர்திருத்தம், மதுவிலக்கு, ஏழை மாணவர் மாணவிகளின் கல்விக்கு உபகாரச் சம்பளம் அளிப்பது போன்ற உருப்படியான பணிகளைச் செய்து வந்தார்.

* 'விமோசனம்' என்ற மாதப் பத்திரிகையை நடத்தி மதுவின் தீமைகளை எடுத்துக் கூறினார். கிராமம் கிராமமாகச் சென்று மதுவினால் ஏற்படும் தீமைகளைப் படங்கள் மூலம் விளக்கினார். மது அரக்கனை ஒழிப்பதற்காக இந்தியாவிலே முதல் முதலாக வெளிவந்த பத்திரிகை 'விமோசனம்' தான்.

* வக்கீல் தொழிலில் இவர் பெற்று வந்த ஏராளமான வருவாயையும், புகழையும், செல்வாக்கையும், சுக வாழ்க்கையையும் உதறித் தள்ளிவிட்டு, மகாத்மா காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். வக்கீல் தொழிலை இப்படி உதறி விட்டுத் தேசத் தொண்டில் முதல் முதலாகச்



சென்னை மாகாணத்தில் ஈடுபட்டவர் ராஜாஜி தான்!

* சென்னை மாகாணப் பிரதமராக இருந்த போது மதுரை மீனாட்சி அம்மன் கோயில், பழநி முருகன் கோயில் ஆகிய இரண்டு பெரிய ஆலயங்களையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டார். மாகாணம் முழுவதும் மதுவிலக்குக் கொண்டு வந்து, பல ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்றினார். விவசாயி களின் கடன் பளுவைக் குறைக்கச் சட்டம் கொண்டு வந்தார். இவரது திறமையான ஆட்சி யைக் கண்டு ஆங்கிலேயரே ஆச்சரியப்பட்டனர்.

* 'என் மனச்சாட்சியின் பாதுகாவலர்' என்று காந்திஜி இவரைப் பல முறை பாராட்டியிருக் கிறார்.

* மேற்கு வங்க கவர்னராயிருந்த ராஜாஜியே கவர் னர் ஜெனரல் பதவி வகிக்க வேண்டுமென்று தலை வர்கள் விரும்பினார்கள். இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாக விளங்கிச் சிறப்பித்தார், ராஜாஜி.

* இவர் சிறந்த எழுத்தாளர். பல நூல்களைத் தமி ழிலும் ஆங்கிலத்திலும் எழுதியவர். எளிய நடையில் உவமைகளும் குட்டிக் கதைகளும் கூறுவ தில் வல்லவர். குழந்தைகளுக்கு வானொலி மூலம் வாராவாரம் பல வாரங்கள் கதைகள் கூறி மகிழ் வித்து வந்தார்.

* சிபாரிசு, சலுகை என்று எவரேனும் ராஜாஜி யிடம் சென்றால், சீறி விழுவார். லஞ்சம் என்ப தற்கே இடமில்லாமல் செய்து வந்தார். மிக நேர் மையான ஆட்சி, தூய்மையான ஆட்சி என்று பலராலும் பாராட்டப் பெற்றது, ராஜாஜியின் ஆட்சி.

# மின்மினிக் கதைகள்



## போகாமல் வந்தேனே!

"நானோ ஏழை, ஆனாலும், நாலு வீட்டில் அரிசி, பருப்பு வாங்கி தினமும் ஏழெட்டுச் சிவனடியார்களுக்குச் சாப்பாடு போடுகிறேன்" என்று கூறி ஒருவன் தினமும் காலையில் ஒவ்வொரு வீடாகச் சென்று அரிசியும் பருப்பும் வாங்கி வருவான். ஆனால், யாருக்கும் ஒருநாள் கூட அவன் வீட்டில் சாப்பாடு போட்டதில்லை. அவனும் அவன் மனைவியுமே வயிறு முட்டச் சாப்பிடுவார்கள்.

இதை அந்த ஊரில் இருந்த ஒரு புத்திசாலி தெரிந்து கொண்டான். ஒருநாள் அவன் சிவனடியார் போல வேடம் போட்டுக் கொண்டு அவனுடைய வீட்டுக்கு வந்தான். "இன்று எனக்கு உங்கள் வீட்டில்தான் சாப்பாடு" என்றான்.

இதைக் கேட்ட வீட்டுக்காரன் திடுக்கிட்டான். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, சிவனடியார் வேடத்தில் வந்தவனைத் திண்ணையில் உட்கார வைத்து விட்டு, மனைவியிடம் போய் ரகசியமாக ஏதோ பேசினான்.

பிறகு, திண்ணையில் இருப்பவன் காதில் விழும்படி, "என்ன! இதுவரை எட்டு சிவனடியார்கள்தானே இன்று சாப்பிட்டார்கள். அதற்குள் சாப்பாடு தீர்ந்து போய்விட்டது என்கிறாயே! அரிசியும் இல்லை என்று கைவிரிக்கிறாயே! அடிப் பாவி! இந்தச் சிவனடியாருக்கு என்ன பதில் சொல்வது? உன்னைச் சும்மா விடக் கூடாது" என்று சொல்லிவிட்டு, ஒரு தடியை எடுத்து 'மட், மட்' என்று தூணிலும் சுவரிலும் ஓங்கி ஓங்கி அடித்தான். அவன் மனைவி, "ஐயோ! அடிக்காதீங்க! அம்மா! அப்பா!" என்று கத்தினாள்.

திண்ணையிலிருந்தவன் சன்னல் வழியாக மெல்ல எட்டிப் பார்த்தான். எல்லாம் நடிப்பு என்பதைப் புரிந்து கொண்டான். மெதுவாக எழுந்து, கொல்லைப் பக்கமாக வந்து மறைவாக நின்று கொண்டான்.

வீட்டுக்காரன், திண்ணையில் சிவனடியாராக வந்தவனைக் காணோம்

என்றதும், ''அடியே, எப்படி நம்ம நாடகம்? உன்னை நான் நோகாமல்தான் அடிச்சேனே!'' என்றான்.

''நான் ஓயாமல்தான் அழுதேனே!'' என்றாள் அவன் மனைவி.

''நானும் போகாமல்தான் வந்தேனே!'' என்று கூறிச் சிவனடியார் வேஷம் போட்டவன் உள்ளே வந்துவிட்டான். வேறு வழியின்றி அவனுக்கு அன்று சாப்பாடு போடும்படியாகி விட்டது!

# எல்லாம் நன்மைக்கே

இரத்னபுரி அரசருக்கு ஒரு மந்திரி இருந்தார். அவர் மிகவும் நல்லவர். அரண்மனையில் எது நடந்தாலும், 'எல்லாம் நன்மைக்கே' என்று சொல்லுவார்.

ஒருநாள் அரசர் கொட்டைப் பாக்கைப் பாக்குவெட்டியால் சீவும் போது, அவரது ஒரு விரலைப் பாக்கு வெட்டி நன்றாக வெட்டிவிட்டது. இரத்தம் வழிந்தது. உடனே, அரண்மனை வைத்தியரை மந்திரி அழைத்து வந்து காயத்துக்கு மருந்து போட ஏற்பாடு செய்தார்.

பிறகு, ''எல்லாம் நன்மைக்கே'' என்றார் மந்திரி. அரசருக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்ன! நான் விரலை வெட்டிக் கொண்டது நன்மைக்கா? எந்தச் சமயத்தில் என்ன சொல்வது என்றே தெரியாத நீரும் ஒரு மந்திரியா?'' என்று சீறினார். உடனே, மந்திரிக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை விதித்தார்.

மறுநாளே அரசர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். எப்போதுமே மந்திரியுடன்தான் வேட்டைக்குச் செல்வார். இப்போது தனியாகச் சென்ற அவர், ஒரு மானைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்று விட்டார். அப்போது, சில காட்டு மிராண்டிகள் அவரைப் பிடித்துக் கொண்டு போய், காளி கோயிலில் பலி கொடுக்க ஏற்பாடு செய்தார்கள்.

உடலில் எந்த விதக் காயமும் இல்லாதவரைத்தான் அவர்கள் பலி கொடுப்பது வழக்கம். அரசரது கைவிரலில் காயம் இருப்பதைக் கண்ட அவர்கள் அரசரை விட்டு விட்டார்கள்.

அரசர் தப்பி ஓடிவந்து அரண்மனை சேர்ந்தார். 'எல்லாம் நன்மைக்கே' என்று மந்திரி சொன்னது அப்போது அவரது நினைவுக்கு வந்தது. உடனே மந்திரியை விடுதலை செய்தார்.



''எனக்கு வெட்டுக் காயம் பட்டது நன்மைக்கே என்று அன்றைக்குச் சொன்னீர். அது நன்மையாகவே முடிந்தது. நான் உயிர் தப்பினேன். உம்மைச் சிறையில் அடைத்தது தவறுதான்'' என்றார் அரசர்.


அப்போதும் அந்த மந்திரி, ''எல்லாம் நன்மைக்கே'' என்றார்.

''என்ன! உம்மை நான் சிறையில் அடைத்ததும் நன்மைக்கா!'' என்று வியப்புடன் கேட்டார் அரசர்.

"ஆம், அரசே, இல்லாதபோனால், உங்களுடன் நானும் வேட்டைக்கு வந்திருப்பேன். காயம் பட்டதால் உங்களைப் பத்திரமாக அனுப்பிவிட்டு, என்னைப் பலி கொடுத்திருப்பார்களே! எல்லாம் நன்மைக்கே" என்றார் மந்திரி.

"ஆம். எல்லாம் நன்மைக்கே!" என்று அரசரும் திருப்பிச் சொன்னார்.

# இரண்டு எத்தர்கள்



தஞ்சாவூர் எத்தன் துணியால் சுற்றிய கட்டுச் சாத மூட்டையுடன் திருச்சியை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தான்.

நடுப்பகலில் எதிரே ஒருவன் கட்டுச் சோற்றுமூட்டையுடன் வருவதைக் கண்டான்.

"அண்ணே எந்த ஊருக்குப் பயணம்?" என்று கேட்டான்.

"தஞ்சாவூருக்கு!"

"எனக்கு நாலு நாளா நல்ல காய்ச்சல். ஆனாலும் பாருங்க. என் சம்சாரம் பழைய சோத்தைக் கட்டித் தந்திருக்கிறாள். காய்ச்சல் அதிகமாயிடுமோன்னு கவலையாயிருக்கு" என்றான் தஞ்சாவூர் எத்தன்.

"அடடே! அப்படியா! என் சம்சாரம் சாம்பார் சாதம் பண்ணித் தந்திருக்கிறாள். நீங்க இந்தக் கட்டுச் சாத மூட்டையை எடுத்துக்குங்க. நான் உங்களுடைய மூட்டையை எடுத்துக்கிறேன்" என்றான், அந்த மனிதன்.

மூட்டைகள் கைமாறின. உடனே இருவரும் தாங்கள் போக வேண்டிய திசையை நோக்கி நடந்தார்கள்.

சிறிது தூரம் போனதும், தஞ்சாவூரை நோக்கிச் சென்றவன் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். பழைய சாதத்தைக் கண்டதும், அப்படியே சட்டியில் கையை விட்டுச் சோற்றை அள்ளினான். வாயில் போடுவதற்கு முன்னால், அடியிலே ஏதோ இருப்பது தெரிந்தது. "என்ன இது! அடடே, ஒரே களிமண்! களிமண்ணை முக்கால் பங்கு போட்டு, அதுக்கு மேலே பழையதைப் பரப்பி வைத்திருக்கிறானே!" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே,

"என்ன தம்பி, இப்படியா முக்கால் பங்கு மணலைப் போட்டு, மேலே சாம்பார் சாதத்தைப் பரப்பி வைக்கிறது? இந்தத் தஞ்சாவூர் எத்தனிடமே உன் கைவரிசையைக் காட்டிப்பிட்டியே!" என்று கேட்டுக் கொண்டே திரும்பி வந்தான், தஞ்சாவூர் எத்தன்.

"அடடா! நீங்கதான் தஞ்சாவூர் எத்தனா! நான் யார் தெரியுமா? நான்தான் திருச்சி எத்தன்! இனிமேல் நாம ஒருத்தரை ஒருத்தர் ஏமாத்தப் படாது."

"அத்தோடே மத்தவங்களை ஏமாத்தற வேலையையும் விட்டுட்டு உழைச்சுப் பிழைப்போம்" என்றான் தஞ்சாவூர் எத்தன். "அதுதான் சரி" என்றான் திருச்சி எத்தன்.



# என் குழந்தைப் பருவம்

— மயிலை சிவமுத்து

முதுபெரும் புலவர் மயிலை சிவமுத்து அவர்கள் தமிழாசிரியர்களுள் தலைசிறந்த ஒருவர் எனப் புகழ் பெற்றவர். ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மாணவர்களுக்குத் தமிழ்த் தேர்வும் கலைப் போட்டியும் நடத்திப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கிவரும் மாணவர் மன்றத்தின் உயிர்நாடியாகத் தமது கடைசி மூச்சு இருக்கும்வரை (1968) விளங்கியவர். பல்லாண்டுகள் அம்மன்றத்தின் தலைவராக இருந்து பல்கலைக்கழகம் போல வளர்த்தவர். குழந்தைகளிடம் மிகவும் அன்புடையவர். பாடநூல்களும் குழந்தை இலக்கியங்களும் எழுதுவதில் வல்லவர். குழந்தைகளுக்காகவே இவர் எழுதிய 'முத்துப் பாடல்கள்' என்னும் பாடல் தொகுப்பு மத்திய அரசின் பரிசு பெற்றது. இவருடைய சீரிய தொண்டினைத் திரு.வி.க., மறைமலை அடிகள், கல்கி போன்ற தமிழ்ப் பெருமக்கள் பலவாறு பாராட்டியுள்ளார்கள். அறிஞர் பெருமக்கள் இவருக்குத் 'தமிழ்நெறிக் காவலர்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியுள்ளார்கள். இவர் எழுதிய 'திருக்குறள் — இனிய எளியவுரை' தலைசிறந்த இலக்கியமாகப் போற்றப்படுகிறது. இவரது குழந்தை இலக்கியத் தொண்டினைப் பாராட்டிக் குழந்தை எழுத்தாளர் சங்கம் இவருக்குக் கேடயம் அளித்துப் பாராட்டியது.

என் பிறந்த நாளை நினைவில் வைத்துக் கொள்வது எல்லோருக்கும் எளிதான செயல். நான் பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளாகிய மாட்டுப் பொங்கல் நாளில் பிறந்தேன். (1892 இல்). என் தந்தையார் 46ஆம் வயதில்தான் திருமணம் செய்து கொண்டார். முதலில் அவருக்குப் பெண் குழந்தையே பிறந்தது. பிறகு ஐந்தாண்டுகள் கழித்து நான் பிறந்தேன். அதனால் என் பெற்றோர் என்னைச் செல்வமாக வளர்த்து வந்தனர். நான் மயிலாப்பூரில் பிறந்தேன். என் பெற்றோர் இட்ட பெயர் முத்துக் குமாரசாமி. என் தாயார் பெயர் விசாலாட்சி. தந்தையார் சிவானந்தம். என் பெயர் 'முத்து' எனச் சுருங்கி, ஊர்ப் பெயரோடும் தந்தையார் பெயர்ச் சுருக்கத்தோடும் இணைந்து **மயிலை சிவ முத்து** என மாறிவிட்டது.

சிறு வயதில் எனக்கு விளையாட்டில் மிகவும் விருப்பம். என் தம்பியை முதுகின் மேல் தூக்கிக் கொண்டு 'உப்பு வாங்கலையோ உப்பு!' என்று விளை



யாடி இருக்கிறேன். ஒருவர் பின்னால் ஒருவர் நின்று ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டு 'குப்குப்' என்று சொல்லிப் புகை வண்டி ஆட்டம் ஆடி இருக்கிறோம். எங்கள் விளையாட்டுக்கு இரண்டு மரக்கட்டைப் பொம்மைகள் — ஒரு தகர டப்பா போதும். இவைகளை வைத்துக் கொண்டே பல விளையாட்டுக்களை விளையாடினோம். வாத்தியார் விளையாட்டு, காய்கறி விற்கும் விளையாட்டு — இப்படியெல்லாம் விளையாடினோம். எங்கள் பெற்றோர்கள் எங்கள் விளையாட்டுக்காக எந்தச் செலவும் செய்ததில்லை. தென்னை ஓலையைக் குழல் போல் செய்து, ஊதி விளையாடினோம். கையில் கோலை வைத்துக் கொண்டு ஓடி ஓடிக் குரங்காட்டமும் ஆடியிருக்கிறோம். எங்கள் கீழ் மாணவர்களுக்குச் 'சடுகுடு' ஆடுவதில் மிகவும் விருப்பம். சாமி தூக்கும் விளையாட்டிலும் எங்களுக்கு விருப்பம் உண்டு.

என் தந்தையார் அந்தக் காலத்திலிருந்த விஜய நகர மன்னர் பெண்கள் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார். நானும் அவரைப் போல் சாதாரண ஆசிரியராக இல்லாமல் ஒரு பெரிய விஞ்ஞானியாக வர வேண்டுமென்று விரும்பினார். அவர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டறிந்த செய்தியையும் ஜேம்ஸ் வாட் என்னும் சிறுவன் நீராவியின் சக்தியைக் கண்டறிந்த செய்தியையும் மற்றும் பல விஞ்ஞானச் செய்திகளையும் கதை போலச் சுவையாகக் கூறுவார்.

என் பிற்கால வாழ்க்கையைப் பற்றி என் தந்தையார் சிந்தித்தபடியே இருப்பார். அதற்குத் தகுந்தபடி எனக்குப் பல புத்திமதிகள் கூறுவார். "நான்தான் கிழவனாகி விட்டேன்: பல நோய்கள் என்னைத் துன்புறுத்தியபடியே இருக்கின்றன. நீயாவது இந்த வயதிலிருந்தே சிந்தித்துப் படி. உன்னால் உலகத்துக்கு ஏதாவது ஓர் உதவியைச் செய்ய முடியும்!" என்று அடிக்கடி கூறுவார்.

நான் மூன்றாம் வயதிலேயே பள்ளிக்குச் சென்று படிக்கத் தொடங்கினேன்; ஐந்தாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை 'வெஸ்லியன் மிஷன்' கிறித்தவ உயர்நிலைப் பள்ளியில் படித்தேன். அந்த வகுப்புக்களில் தமிழ்ப் பாடத்தைத் தவிர மற்றப் பாடங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே நடந்து வந்தன. ஏழாம் வகுப்பில் நான் நளன் சரிதை, அரிச்சந்திரன் கதை முதலியவைகளைச் சுவைத்துப் படித்திருக்கிறேன். அப்போது நா. கதிரைவேல் பிள்ளை என்னும் பேரறிஞர் எனக்குத் தமிழாசிரியராக இருந்தார். அவரால் அந்த இளம் பருவத்திலேயே பல தமிழ்ப் புத்தகங்களைப் படித்துக் கொள்ளும்படியான திறமை எனக்கு ஏற்பட்டது. அன்றியும் என் தந்தையார் அடிக்கடி எனக்குக் கற்பித்து வந்த தமிழ்ப் பாடங்களும் எனக்குப் பேருதவி புரிந்தன. நான் கற்ற அந்த அடிப்படைக் கல்விமுறையே மேன்



மேலும் தமிழையும் ஆங்கிலத்தையும் எவர் உதவியும் இல்லாமல் படிக்கும் படி செய்தது.

என் தந்தையார் ஓய்வு பெற்றதும் என்னை மேலும் படிக்க வைக்க முடியவில்லை. அதனால் அவர் எழும்பூரில் உள்ள சித்திரக் கலாசாலையில் சேர்த்தார். சேர்த்த சில மாதங்களில் அவர் மண்ணுலக வாழ்வை நீத்தார். எங்கள் குடும்பத்தில் வறுமைப் புயல் வீசத் தொடங்கியது. நான் விடியலில் ஐந்து மணிக்கே மயிலாப்பூரிலிருந்து புறப்பட்டு ஆறரை மணிக்குள் நடந்தே எழும்பூரில் உள்ள சித்திர கலாசாலைக்குச் சென்று வந்தேன்.

என் தாயார் தாம் அணிந்திருந்த நகைகளையெல்லாம் விற்று எங்களைக் காப்பாற்றி வந்தார். அந்த நகைகளும் தீர்ந்துவிட்டன. மயிலையில் ஒரு வீடும் தோட்டமுமே இருந்தன. அவற்றை மாதம் ஏழு ரூபாய் குடிக்கூலிக்கு விட்டு என் அன்னையார் சென்னைப் பெத்துநாய்கன் பேட்டைக்கு எங்களை அழைத்துச் சென்றார். வறுமைத் துன்பத்தால் சிறிது காலம் கழித்து அந்த வீட்டையும் தோட்டத்தையும் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர், ஒருவருக்குக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டோம்.

நாங்கள் இராப் பட்டினி பகல் பட்டினி கிடந்த நிலையிலும் நான் என் தந்தையார் கூறியபடி தமிழையும் ஆங்கிலத்தையும் கற்றுக் கொள்ளப் பாடுபட்டேன். என் பதினான்காம்






வயதில் ஓர் ஆசிரியரிடம் புத்தகம் இல்லாமலேயே தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியவைகளையெல்லாம் இசையோடு பாடக் கற்றுக் கொண்டேன். தாயுமானவர், பட்டினத்தார் பாடல்களையும் பாடத் தொடங்கினேன்.

எதையும் ஆராய்ந்து பார்ப்பதில் எனக்கு விருப்பம் அதிகம். எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இருந்த செடி கொடிகளின் இலை, வேர் இவைகளின் அமைப்பைக் கூர்ந்து கவனிப்பேன். சுவைத்துப் பார்ப்பேன். நல்லவேளையாக நச்சுத்தன்மையுடைய இலைகளையும் வேர்களையும் நான் சுவைக்கவில்லை.

சித்திரக் கலாசாலையில் இருந்த போது பாரிப்பாக்கம் கண்ணப்பாவின் தொடர்பு எனக்குக் கிடைத்தது. அவர் மூலமாகப் பூவை அஷ்டாவதானம் கலியாணசுந்தர யதீந்திரரிடம் பழக நேர்ந்தது. நான் அடிக்கடி எழுதிய பாடல்களை அவரிடம் காட்டினேன். அவரும், "இப்படியே பாடிவா; பிறகு நீ பாட்டுக் கட்டுவதில் சிறந்தவன் ஆவாய்" என்று எனக்கு ஊக்கம் அளித்து வந்தார். அவர் தந்த ஊக்கத்தினால் நான் சிறிய வயதிலேயே பல பாடல்களைப் பாடிப் பலருடைய பாராட்டையும் பெற்றேன்.

சித்திர கலாசாலையில் நான் நீண்ட நாள் பயிற்சி பெற முடியவில்லை. இரண்டே ஆண்டுகளில் அப்பயிற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க நேர்ந்



தது. நானும் என் தம்பியும் அச்சகங்களில் வேலை செய்தோம். வறுமை தான் காரணம்.

அச்சக நேரம் தவிர, மற்ற நேரங்களில் நாங்கள் எங்கள் அத்தான் தணிகாசலம் அவர்கள் வைத்திருந்த வெற்றிலை பாக்குக் கடையில் வேலை செய்தோம். என் தங்கைமார்களும் அவருக்கு உதவியாக இருந்தார்கள். நான் மாலை நேரத்தில் அத்தானின் கடையிலிருந்து உரத்த குரலெடுத்துத் தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல் முதலியவைகளை இசையோடு தாளம் போட்டுப் பாடுவேன். என் பாட்டைக் கேட்டு அங்கே மக்கள் வந்து கூடுவார்கள். அதனால், எங்கள் கடையில் விற்பனை அதிகமாகும்.

'கடையில் இருக்கும்போது புத்தகம் படிக்கக் கூடாது' என்பது எங்கள் அத்தானின் கட்டளை. ஒருநாள் அவர் கட்டளையை மீறிப் படித்ததனால் கடையை விட்டே நின்றுவிட நேர்ந்தது. மேலும் மேலும் படிப்பதில் என் ஆர்வம்சென்றது. சரவண முதலியார் என்பவரிடம் சோதிட நூல்களைக் கற்று அதிலும் தேர்ச்சி பெற்றேன். அவரிடமிருந்த ஆங்கில நூல்கள் எனக்கு மிகவும் பயன்பட்டன.

அந்தக் காலத்தில் என் நண்பர் கண்ணப்பரும் நானும் சேர்ந்து 'பால சைவ சபை' என்று ஒரு சிறுவர் சங்கத்தை அமைத்தோம். பூவை அஷ்டாவதான கலியாண சுந்தரர், I.M. நல்லசாமிப் பிள்ளை, மணி திருநாவுக்கரசர் திரு வி. கலியாணசுந்தரனார், சச்சிதானந்தம் பிள்ளை முதலிய தமிழ்ப் பேரறிஞர்கள் எங்கள் சங்கத்துக்கு வந்து எங்களைப் பேசப் பழக்கினர்கள்.

ஒருசமயம் நான் கூட்டத்தில் பேசத் தொடங்கினேன். அந்தக் கூட்டத்துக்குப் பேரறிஞர் பலர் வந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் எனக்கு அச்சம் மேலிட்டது. இரண்டு மூன்று வாக்கியங்கள் பேசுவதற்குள் கைகால்கள் நடுக்கமெடுத்தன. நான் பேச நினைத்தவையெல்லாம் மறந்துவிட்டேன். என்னால் நிற்கவே முடியாத நிலையில் நான், "பெரியோர்களே, எனக்கு உடல் நலம் இல்லாமையால், நான் என் பேச்சினை இவ்வளவோடு நிறுத்திக் கொள்கிறேன். அடுத்த கூட்டத்தில் கண்ணப்ப நாயனாரைப் பற்றி விரிவாகப் பேசுவேன்" என்று சொல்லிவிட்டு உடனே உட்கார்ந்து கொண்டேன். அதுகேட்ட பூவை கலியாண சுந்தரர், "இந்தத் தம்பியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். பல செய்திகளைப் பற்றி அருமையாகப் பேசக் கூடியவன். பல ஆங்கில மேதைகள் முதலில் பேசும்போது இப்படித்தான் அஞ்சினர்கள். நம் தம்பி கூட்டத்தில் பேசுவது இது முதல் முறை. ஆதலால், அச்சம் ஏற்படுவது இயற்கையே" என்று ஆறுதல் கூறினர்.

கூட்டம் முடிந்ததும் இருக்கம் ஆதிமூல முதலியார் என்னைத் தனியே அழைத்து, "தம்பி, நீ கூட்டத்தில் பேசுவதற்கு முன்பாக எங்கள் வீட்டிற்கு ஒருமுறை வந்து செல். நான் பேசுவதற்குக் கற்றுக் கொடுக்கிறேன்" என்றார். அவ்வாறே நான் அவரிடம் சென்று பேசப் பழகினேன். திரு.வி.க. போன்ற தமிழ்ப் பெரியவர்களின் பேச்சையும் அடிக்கடி கேட்டு என் பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டேன்.

எங்கள் சபையில் மணி திருநாவுக்கரசர் என்னும் இளைஞர் ஒருவர் இருந்தார். அவர் தமிழிலக்கியங்களை ஐயம் திரிபு அறக் கற்ற பெரும்புலவர். அவரிடம் பாடம் கேட்குமாறு நல்லசாமிப் பிள்ளை என்னும் பெரியவர்

கூறினார். மணி திருநாவுக்கரசர் எங்களை விட இரண்டு ஆண்டே வயதில் மூத்தவர். எனவே, பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரும் நானும் அவரிடம் பாடம் கேட்கத் தயங்கினோம். மணி திருநாவுக்கரசர் இதைக் குறிப்பாக உணர்ந்து, ''நீங்கள் என்னிடம் பாடம் கேட்க வேண்டாம். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து படிக்கலாம்' என்று சொல்லியே பாடம் கற்பிக்க ஆரம்பித்தார். நாட்கள் செல்லச் செல்ல மணி திருநாவுக்கரசரின் கடல் போன்ற கல்வி அறிவும் கற்பிக்கும் ஆற்றலும் பிற அருங்குணங்களும் எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அந்தச் சபையில் இருந்த இருபது பேரும் அவரை ஆசிரியராக ஏற்றுக்கொண்டோம்.

நாங்கள் பல சங்க நூல்களையும் காவியங்களையும் கற்றுத் தேறினோம். அவர் எதையும் மிகவும் எளிய முறையிலே கற்பிக்கும் ஆற்றல் உடையவர். நாங்கள் ஒரே இடத்தில் பாடம் கேட்டதில்லை. கடற்கரை, ஆற்றங்கரை, பூந்தோட்டம் முதலிய இடங்களுக்குச் செல்லும்போதெல்லாம் அவரும் எங்களோடு வந்து பாடம் கற்பிப்பார். இலக்கிய நயங்களை எல்லாம் இனிதாக எடுத்துக் கூறுவார். அவரிடம் கற்ற கல்வி கல்மேல் எழுத்துப் போல என்றும் என் உள்ளத்தில் நிலைத்துவிட்டது.

என் எண்ணமெல்லாம் பலப்பல ஆங்கில நூல்களைக் கற்று விஞ்ஞானத் துறையில் சிறந்து நம் நாட்டுக்கே—ஏன் இந்த உலகத்துக்கே அரிய பெரிய உதவிகளைச் செய்து என் தந்தையாரின் எண்ணத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பதே ஆகும். அதற்காகப் பள்ளி நூல் நிலையத்திலிருந்து பல விஞ்ஞான நூல்களை எடுத்துப் படிப்பேன். ஓய்ந்த நேரங்களிலெல்லாம் எங்கள் பள்ளி விஞ்ஞான ஆசிரியரிடம் எனக்கு ஏற்படும் ஐயப்பாடுகளையெல்லாம் கூறித் தீர்த்துக் கொள்வேன்.

எனக்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் இருந்த ஆர்வத்தைக் கண்டும் அப்போதிருந்த சூழ்நிலையை உணர்ந்தும் அவ்விஞ்ஞான ஆசிரியர், ''தம்பி,



விஞ்ஞானத்துறையில் ஒன்றைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதான செயல் அன்று. உன் போன்ற கல்லூரிப் படிப்பைப் பெறாத இளைஞர்களுக்கு இந்த வகையிலே ஊக்கமளிக்க நம் நாட்டிலே போதிய வசதிகளும் இல்லை. ஆயினும், உன்னால் இயன்றவரையில் முயற்சி செய். என்றேனும் ஒரு நாள், நீ உலகத்துக்கு ஏதாவது புதுமையைக் கண்டறிந்து தெரிவிக்கக் கூடும். நானோ முதியவனாகிவிட்டேன். நெடு நாட்கள் இருந்து உன் விஞ்ஞான அறிவை என்னால் வளர்க்க முடியாது. என்றாலும் நீ பல ஆண்டுகள் விடாது முயன்றால் வெற்றி பெறுவாய். இதுவே நான் உனக்குக் கூறும் அறிவுரையாகும்'' என்று கூறினார். அவர் இவ்விதம் கூறிய இரண்டொரு மாதத்தில் பள்ளியைவிட்டே விலகி வேறோர் ஊருக்குச் சென்றுவிட்டார்.

எனினும், நான் அவர் கூறிய பொன்மொழிகளை மறக்கவே இல்லை. நான் புதுமையான ஒரு பொருளைக் கண்டுபிடிப்பது என்று சிந்தித்தபடியே இருந்தேன். 'நெருப்பு எல்லாப் பொருள்களிலும் உண்டு. அந்த நெருப்பினை வெளிப்படுத்தும் முறையினைக் கண்டறிய வேண்டும்' என்று எண்ணினேன். என் சோதனைக்குரிய பொருளாக ஓர் இரும்பு உருண்டையைத் தேர்ந்தெடுத்தேன். 'அந்த இரும்பு உருண்டையிலுள்ள நெருப்பினை வேண்டும்போது வெளிப்படுத்த வேண்டும். வேண்டாதபோது.

ஒரு விசையைக் கொண்டு நிறுத்திவிட வேண்டும்' என்று எண்ணி, அதற்காக அதனை நெருப்பிலிட்டுக் காய்ச்சியும் தண்ணீர் விட்டுக் குளிரச் செய்தும் மற்றும் பலவிதமாக முயற்சி செய்தும்பார்த்தேன். என் உடனிருந்த நண்பர்கள் என் முயற்சிகளைக் கண்டு எள்ளி நகையாடினார்கள். "இப்படியே இருந்தால் உனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்" என்று பயமுறுத்தினார்கள். அவர்கள் நட்பு என்னை எதையும் சிந்திக்க விடாமல் தடை செய்து விட்டது.

எனக்கு வாய்த்த பெற்றோர்கள் நான் சமுதாயத்தில் தலைசிறந்தவனாக விளங்க வேண்டுமென விரும்பி வளர்த்தவர்கள். எனக்குக் கிடைத்த ஆசிரியர்களும் என் நல்வாழ்வில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்கள். என்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர்களும் அன்பு நிறைந்தவர்கள். இந்த வாய்ப்பினை எண்ணி எண்ணி நான் பெருமைப்படுகிறேன்; பெருமிதமடைகிறேன்.

தொகுத்து எழுதியவர்:
நல்லாசிரியர் கவிஞர்
தணிகை உலகநாதன்.








# பேச்சுக் கலையும், ஓவியக் கலையும்

சென்னையிலுள்ள ரோட்டரி சங்கங்களின் கூட்டுறவோடு, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி இரண்டையும் **பிலிப்ஸ் இந்தியா** சிறப்பாக நடத்தி, குழந்தைகளின் திறமைகளை வளர்த்து வருகிறார்கள். இந்த ஆண்டு லயோலா கல்லூரியில் 8.11.86 இல் நடந்த போட்டிகளில் கலந்து கொண்ட சிறுவர் சிறுமியர் எண்ணிக்கை என்ன தெரியுமா? பேச்சுப் போட்டியில் 60 பேர், ஓவியப் போட்டியில் 450 பேர்! இரு போட்டிகளுக்கும் எந்த எந்தத் தலைப்புகள் என்பதை ஒரு மணி நேரம் முன்புதான் அறிவிப்பார்கள். உண்மையான திறமை இருந்தால் ஒழியப் போட்டிகளில் வெற்றி பெறுவது கடினம். வெற்றி பெற்றவர்கள்:

தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு: வி. ஆர். பாஸ்கர், (சாந்தோம் மேல்நிலைப்பள்ளி).


ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு: சௌமியா கிருஷ்ணசாமி, (சிஷ்யா).

6 — 9 வயதினருக்கான ஓவியப் போட்டியில் முதற் பரிசு: வி. ஆர்த்தி (சிஷ்யா).

10 — 14 வயதினருக்கான ஓவியப் போட்டியில் முதற் பரிசு: என். சசிகுமார் (ரயில்வே மிக்ஸட் மேல்நிலைப் பள்ளி)

பரிசு பெற்றோர், பங்கு கொண்டோர் அனைவருக்கும் இப்போட்டிகளை ஆர்வமுடன் நடத்தும் பிலிப்ஸ் நிறுவனத்தினருக்கும், சென்னை ரோட்டரி சங்கத்தினருக்கும் கோகுலத்தின் பாராட்டுக்கள்.

இன்சுவைக்கு ரஷ், களிப்பூட்டுவதற்கு ரஷ்,
மனமகிழ்வுக்கு ரஷ், சேர்ந்திடுவீர் ரஷ் அணியில்






everest/d86/MDR/295 Tam

Rush

சுவையும் மணமும்மிக்க
ஆரஞ்சு பானம்

McDowell

Artificially [illegible]ured. Contains no fruit juice or fruit pulp.




# பண்பை வளர்க்கும் பாலபவனம்

நல்ல நல்ல பயிற்சி கொடுத்து, நல்ல நல்ல பிள்ளைகளின் நல்ல நல்ல பண்புகளை வளர்க்கும் நல்லதொரு நிறுவனமாகச் சென்னையில் இயங்கி வருகிறது ஜவகர் பாலபவனம்.

அதிக விளம்பரம் இல்லை; ஆடம்பரம் இல்லை; அழகான சொந்தக் கட்டடம்கூட இல்லை! ஆனால் ஆக்கப் பணிகளோ ஏராளம்!

துள்ளித் திரியும் பள்ளிப் பிள்ளைகள் 1128 பேர் இந்த ஜவகர் சிறுவர் இல்லத்தில் அங்கத்தினர்களாகப் பயிற்சி பெறுகிறார்கள். அனைவரும் சென்னை மாநகரில் உள்ள வெவ்வேறு பள்ளிகளில் மாணவ மாணவியர். ஐந்து முதல் பதினாறு வயதுக்கு உட்பட்டவர்கள்.

பள்ளிகளின் கல்வி நேரம் தவிர, மற்ற நேரங்களில் காலையிலோ, மாலையிலோ மனம் விரும்பித் தாமாகவே ஆர்வத்துடன் இந்த இல்லத்திற்கு வந்து கலைப் பயிற்சி பெறுகிறார்கள். முற்பகல் 9 மணி முதல் 12 மணி வரையிலும், பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையிலும் பயிற்சி உண்டு.

இந்தப் பயிற்சிக்குச் சம்பளம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. பெயரளவுக்கு மிகக் குறைந்த சேர்க்கைக் கட்டணம் ஆண்டுக்கு ஒரு ரூபாய். இந்த இல்லத்தில் பேருந்து ஒன்று தினந்தோறும் வெவ்வேறு பள்ளிகளிலிருந்து மாணவ மாணவிகளை ஏற்றிக் கொண்டு வந்து பயிற்சி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேருந்துக் கட்டணம் ஆண்டு முழுவதற்கும் பத்தே ரூபாய்தான். குறைந்த செலவில் நிறைந்த பலன் பெறுகிறார்கள் சிறுவர்கள்.

இந்தியக் குடியரசின் முதல் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மானியம் வழங்கி நாடெங்கும் ஜவகர் பால பவனங்கள் தொடங்கப் பெற்றுள்ளன. அவைகளில் ஒன்றாகச் சென்னையில் 1979ல் இந்த இல்லம் உருவாகியுள்ளது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறையுடன் இணைந்து இயங்கி வரும் தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனமே ஜவகர் சிறுவர் இல்லம். இந்த இல்லத்தின் தலைவர் மாண்புமிகு . கல்வியமைச்சர் அவர்கள்.

சென்னை அண்ணாசாலையில் இராஜாஜி மண்டபத்திற்கு அருகில் காந்தி இல்லத்தில் இந்த ஜவகர் சிறுவர்

**புத்தனேரி சுப்பிரமணியம்**

இல்லம் அடைக்கலம் புகுந்துள்ளது. அதனால்தானோஎன்னவோ,காந்தியடிகளைப் போலவே எளிமையாக வலிமையான கலைப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

இந்த அமைதியான இல்லத்தில் நுழையும்போதே மிருதங்க நாதமும், சலங்கை ஒலியும் சுகமாக நம் செவிகளைக் கவர்கின்றன.

இடம் இல்லாத குறையினால், இல்லத்தின் வாசலிலேயே நடனப் பயிற்சி, வராந்தாவில் தாள வாத்யப் பயிற்சி; மாடிப் படிக்குக் கீழே இசைப் பயிற்சி; உள் அறையில் கைவினைப் பயிற்சி; மற்றோர் அறையில் கம்ப்யூட்டர் பயிற்சி; கட்டடத்திற்கு வெளியே உள்ள மைதானத்தில் நாடகப் பயிற்சி, கராத்தே மற்றும் ஜிம்னாஸ்டிக் பயிற்சி' கள்; இப்படியாகச் சிறிய இடத்திலேயே பெரிய பயிற்சிகள் நடக்கின்றன.


மாணவர்களின் ஒளிமயமான எதிர்கால, நல்வாழ்வுக்கு வெறும் படிப்பு மட்டும் போதாது. செயல்திறன், கலையார்வம், ஆராய்ச்சி, விளையாட்டு, நூலக அறிவு, கைத்தொழிலில் தேர்ச்சி முதலான பல துறைகளில் குழந்தைகளின் நாட்டம் அறிந்து, பயிற்சி கொடுப்பது அவசியம். இந்த வகையில் அருமையான பயிற்சியளித்து இலட்சியக் குழந்தைகளை உருவாக்கி வருகிறது ஜவகர் சிறுவர் இல்லம்.

கலைப்பயிற்சிகொடுக்கும்ஆசிரியர்கள் பதினாறு பேர். அனைவரும் பகுதி நேர ஊழியர்களே. இவர்களையெல்லாம் ஒருங்கு இணைத்து, உற்சாகமாக இல்லத்தை நடத்தி வருபவர் இயக்குநர் செல்வி. தை. மரிஸ்டெல்லா. கல்வித்துறைஅலுவலராகநீண்டஅனுபவம் பெற்ற இந்தச் செல்வி அத்தனை குழந்தைகளையும் தாய்ப் பாசத்தோடு அரவணைத்துப் பேணுகிறார்.

நடனப் பயிற்சி மட்டுமல்லாமல், நட்டுவாங்கம், பக்கவாத்யம்,'போன்ற கலைகளிலும் மாணவ மாணவிகளை ஈடுபடுத்தி உற்சாகம்காட்டுகின்றனர். கிராமிய நடன ஆசிரியர் திரு. கே.வி. சீனிவாசனும் பரதநாட்டிய ஆசிரியை புஷ்கலாவும்.

* 'தியாகுவின் தேசபக்தி' நாடகக் காட்சி.





* மாணவிகளின் கிராமிய நடனம்.

இந்த இல்லத்தில் பயிற்சிபெறும் சிறுவர்கள் கலைத்துறையில் சாதனையாளர்களாக வளர்ந்து வருகிறார்கள். அண்மையில் அமெரிக்க நாட்டில் நியூயார்க் நகரில் நடைபெற்ற உலகச் சிறுவர் விழாவிற்கு அகில இந்திய அளவில்தேர்ந்தெடுக்கப்பட்டஎட்டுக் குழந்தைகளில் இந்த இல்லத்தைச் சேர்ந்த சிறுமி ரஜனியும் ஒருவர். பாட்டு,பரதநாட்டியம்,கரகம்,காவடி, மயிலாட்டம், ஒயிலாட்டம், குறத்தி நடனம், முதலான கலை நிகழ்ச்சிகளை லண்டன், நியூயார்க், ஆஸ்லோ ஆகியநகரங்களில்சிறுமிரஜனிஆடிப் பெரும் புகழ் பெற்றுத் திரும்பியுள்ளார். பதினைந்து வயதுச் சிறுமிக்கு இத்தகைய இனிய வாய்ப்பு அளித்த பெருமை ஜவகர் சிறுவர் இல்லத்



இயக்குநர் மரிஸ்டெல்லாவும் கரகம் ஆடும் மாணவரும்.



• ஜெயஸ்ரீ ராஜனி

திற்கே உரியது.

நடனம் பயிலும் அத்தனை சிறுவர் சிறுமியரும் மிகவும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் இருப்பதை நேரில் கண்டு வியந்தேன்.

''இந்த ஆண்டு குடியரசு தின அணி வகுப்பில் இந்த இல்லத்தின் குழந்தைகள் ஆடிய ஆதிவாசிகளின் நடனம் மேதகு ஆளுநரிடம் இரண்டாம் பரிசு பெற்றது'' என்று பெருமையுடன் குறிப்பிட்டார் இயக்குநர்.

அஸ்ஸாம் மாநிலத்தில் திப்ருகார் நகரில் நடத்தப்பட்ட 'அனைத்து இந்தியக் குழந்தைகளின் விழாவில், தனி நடிப்பு, வண்ண ஓவியம், ஓரங்க நாடகம் ஆகிய மூன்று போட்டிகளில் இந்தச் சிறுவர் இல்லத்தின் எட்டுக் குழந்தைகள் கலந்து கொண்டு முதல், இரண்டு, மூன்று பரிசுகளையும் தட்டிக் கொண்டு வந்ததும் தமிழ்நாட்டிற்குப் பெருமை என்று பெருமிதம் எய்தினார் இயக்குநர்.

மற்றும், தில்லி, சிக்மகளூர், காஷ்மீர் முதலான இடங்களில் நடந்த போட்டிகளிலும் ஜவகர் சிறுவர் இல்லக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளுக்குத் தனிப் பெருமை கிடைத்துள்ளது. தில்லியில் தேசிய கலாச்சார விழாவில் பங்குபெறும் வாய்ப்பும் இந்த இல்லத்தின் குழந்தைகளுக்குக் கிடைத்துள்ளது.


கராத்தே மாஸ்டர் பா. விசய குமாரே நாடகப் பயிற்சியும் அளிக்கின்றபுதுமையைக்கண்டேன். இருபது மாணவ மாணவியரை வரிசையாக நிற்க வைத்து, அத்தனை குழந்தைகளும் ஒவ்வொரு தொடராக நாடக வசனத்தை உச்சரிக்கச் செய்யும் பயிற்சிமுறை கச்சிதமாக உள்ளது. இவர் தயாரித்த 'தியாகுவின் தேச பக்தி' என்ற ஓரங்க நாடகம் அஸ்ஸாம் வரை சென்று வெற்றிக் கொடி நாட்டியுள்ளது.

கே. கௌரி (வாய்ப்பாட்டு) கே.எஸ்.எஸ்.மணி (மிருதங்கம்), பிரட்ரிக் ரூபின் (ஆர்மோனியம்), சாம் சுதாகர் (கிடார்), லூயிஸ் (டிரம்ஸ்), மனோகர் (பாண்டு) முதலான ஆசிரியர்கள் இசைப் பகுதியில் இளம் உள்ளங்களைக் கவரும் வண்ணம் பயிற்சி தருகின்றனர்.

குழந்தைகளின் கைவண்ணத்தில் ஓவியங்கள் உருவாகச் செய்கிறார் ஓவிய ஆசிரியர் ஆதிகேசவலு.

நூற்றுக்கணக்கான கைவினைப் பொருள்களைப் படைக்கும் ஆற்றலைக் குழந்தைகளிடம் வளர்த்து வருகிறார் கல்யாணி.

இவ்வண்ணம் பகுதி நேர ஆசிரியர்களின் மிகுதியான ஒத்துழைப்பு, இந்தச் சிறுவர் இல்லத்துக்குக் கிடைத்துள்ள பேறு என்றே சொல்ல வேண்டும்.



அஸ்ஸாம் மாநிலத்தில் குழந்தைகள் விழாவில் பெற்ற கேடயங்கள்.

அண்மையில் குழந்தை எழுத்தாளர் குழுவை உருவாக்கி, பத்துக் குழந்தைகள் எழுத்தாளராகப் பயிற்சி பெறவும் வழிவகுத்துள்ளனர். இது ஒரு புது முயற்சி.

இந்த இல்லத்திலும் வெளியிடங்களிலும் நடக்கும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் குழந்தைகள் குதூகலமாகப் பங்குபெறுவதற்கு வழிவகுப்பவர் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் தி.ஓ. ரங்கநாதன், எந்தப் போட்டியில் இந்த இல்லத்துக் குழந்தைகள் கலந்து கொண்டாலும் ஏதாவது பரிசு பெறாமல் திரும்பமாட்டார்கள்! அவ்வளவு கலைத்திறமை இவர்களிடம் வளர்ந்து வருகிறது.

புதிது புதிதாக ஏதாவது கலை நிகழ்ச்சியைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆர்வம் இயக்குநரிடமும் ஆசிரியர்களிடமும் குழந்தைகளிடமும் பொங்கித் ததும்புகின்றது.

நேரு மாமா கனவு கண்ட லட்சியக் குழந்தைகள் ஜவகர் சிறுவர் இல்லத்தில் உருவாகிறார்கள் என்று சொன்னால் அது மிகையல்ல.



# உண்மையே பேசுவோம்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

மகாத்மா காந்தி சத்தியத்தைக் கடவுளாக நினைத்தார். 'சத்தியமே வெல்லும். சத்திய வாழ்க்கையில் தான் வெற்றி உண்டு' என்று நம்பினார்.

அதன் காரணமாகத் தமது இந்திய விடுதலைப் போராட்டத்தைச் சத்திய வழியிலேயே நடத்தினார். சத்தியத்தின் முன்னால் ஆங்கிலேயர்களின் இராணுவம், அதிகாரம், அகங்காரம் எதுவுமே நிற்கவில்லை. கத்தி இன்றி இரத்தமின்றிச் சத்தியத்தின் வழியிலேயே நமது பாரத நாட்டிற்குக் காந்தியடிகள் விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

சத்தியம் என்பது சொல்லிலும் செயலிலும் இருக்க வேண்டும். சத்தியமான வாழ்க்கையில்தான்; அதாவது உண்மையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வாழ்க்கையில்தான் மன அமைதி இருக்கும். உண்மைக்குப் புறம்பான பொய் வாழ்க்கையில் அமைதி இருக்காது. ஏனென்றால், ஒவ்வொருவருடைய மனச்சாட்சியும் உண்மையின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. பிறருக்குத்தெரியாமல் ஒருவர் தெரிந்தே தவறுகள் செய்வாராயின், அவரது மனசாட்சி அவரைக் குத்திக் கொண்டே இருக்கும். சில நாட்கள் வேண்டுமானால், மறைவாகக் காரியங்கள் செய்ய முடியும். ஆனால், உண்மை ஒருநாள் வெளிப்பட்டுவிடும். பொய்யான வழிகளில் கிடைத்த புகழெல்லாம் உண்மை வெளிப்படும்பொழுது ஒரே அடியாக மறைந்து போய்விடும்.

பொய்யாவது, சமூக வாழ்க்கையை இயங்காமல் செய்துவிடும். எந்தச் செயலையும் சமூகம் தன்னுடைய தலைவன் ஆணையால் உடனே ஏற்றுக் கொள்கிறது. ஒருமுறை பொய்யென்று தெரிந்துவிட்டால், சமூகம் எச்செயலையும் ஏற்றுக் கொள்வதில்லை. அந்தத் தலைவன் அதன் பிறகு உண்மையான செயலைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்வதில்லை. சமூக வாழ்க்கை ஸ்தம்பித்து விடுகிறது.

பொய்யின் அடிப்படையில்நிகழும் செயல்கள், நாட்டின் ஒரு தலைமுறையை ஒன்றுமில்லாமல் செய்துவிடும். ஆகவே தனி வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் பொய்யே இருக்கக் கூடாது.

உண்மை வாழ்க்கை வாழ்தலில் முதலில் சிறிது கஷ்டம் இருக்கும். ஆனால், தொடர்ந்து வாழ்ந்துவிட்டால், அதுவே மிக எளிமையான அமைதியான வாழ்க்கையாக மாறிவிடும்.

பொய் வாழ்க்கை வாழ்வதற்கு முதற் காரணம் அச்சமே. ஆகவே, அச்சத்தை நீக்கிவிட்டால், உண்மை வாழ்க்கை நமக்குப் புலப்பட்டுவிடும். அதனால்தான் மகாகவி பாரதியார் 'அச்சம் தவிர்' என்றார். மகாத்மா காந்தி அடிகளும் நம் மக்களை பயமில்லாமல் வாழுங்கள் என்றார்.

பசியின் காரணமாக உணவைத் திருடக் கூடாது என்று கூறுகிறோம்.

ஆடம்பர வாழ்க்கைக்குப் பணம் திருடுவது குற்றம் என்கிறோம். அதைவிடக் கொடுமையான குற்றம் ஒன்று இருக்கிறது. அதாவது பிறருடைய நல்ல பெயரைத் திருடுவது. ஒவ்வொருவரும் தம் சொந்த முயற்சியில் வாழ வேண்டும்; புகழ் பெற வேண்டும். முயற்சி இல்லாத சிலர், புகழ் பெற்ற தம் தந்தையார் அல்லது உறவினர் பெயரைப் பயன்படுத்தி வாழ்வர். இது மிகவும் தவறு. திருடுவதை விடக் கேவலம். இதை நாம் அனைவரும் உணர வேண்டும். நம் முயற்சியால் நாம் உயர வேண்டும்.


உண்மையான சத்தியமான வாழ்க்கைக்கு விரோதமானவை அச்சமும் பொறாமையுமே ஆகும். பெரும்பாலோருடைய பொய்யான வாழ்க்கைக்கு பொறாமையே, அடிப்படையாக இருக்கிறது. பொறாமை பிடித்தவனும், அவனைச் சார்ந்தவர்களும் உண்ணவும் உடுக்கவும் இன்றித் திண்டாடுவார்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார். நமது மனத்திலிருந்து பொறாமையை ஒழித்துக் கட்ட வேண்டும்.


சத்தியமான வாழ்க்கையில் தேவையில்லாத கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தேவையில்லை. நாமும் தேவையில்லாத கேள்விகளை கேட்கக் கூடாது. நமது தகுதியை உணர்ந்து விட்டால் நாம் பிறரைப் பார்த்து அச்சமோ, பொறாமையோ கொள்ள மாட்டோம். இனிமேல் எளிமையான சத்திய வாழ்வை மேற்கொள்வோம்.

திருக்குறள் :

வாய்மை எனப்படுவது யாதெனில்
யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

# ஓவியராகலாம்





# புதையல் வீடு

டாக்டர் பூவண்ணன்



## 3. தாத்தாவின் கோபம்

முத்துசாமியும்சுமதியும்ஒன்ருக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சித்தி பத்மா பரிமாறிக் கொண்டிருந்தாள். சுமதி சாதத்தைப் பிசைந்தபடியே, ''சித்தப்பா! சோமு தாத்தா இருக்கிற வீட்டிலே புதையல் இருக்குன்னு ஊருக்குள்ளே பேசிக்கிருங்களே. உண்மையிலேயே சோமு தாத்தா வீட்டிலே புதையல் இருக்கா?'' என்று கேட்டாள்.

முத்துசாமி சுமதியைப் பார்த்தார்.

''ஊரிலே ரொம்ப வருஷமா இப்படிப் பலர் சொல்லிக்கிட்டிருக்காங்க. திடீர்னு ஒரு நாள் சோமு தாத்தா குடும்பம் விஜயமங்கலத்தை விட்டுப் போயிடும். அப்புறம் அவங்களைக் கோயமுத்தூரிலேயோ மதுரையிலேயோதான் பார்க்கலாம். அதுவும் லட்சாதிபதியா பார்க்கலாம். ஏன் தெரியுமா? கல் மண்டபத்திலே இருக்கிற புதையலை எடுத்துக்கிட்டுப் போயிடுவாங்களாம். இப்படிச் சொல்லிக்கிட்டே இருக்காங்க. பாவம், சோமு தாத்தா! அவர் எப்பவும் போல ஏழையாத்தான் இருக்கிருர். புதையலும் இல்லே! ஒரு மண்ணும் இல்லே!''

''அப்போ, புதையல் இருக்குன்னு ஊர்க்காரங்க ஏன் பேசிக்கிருங்க? இல்லாம பிறக்காது, அள்ளாம குறையாதுன்னு எங்க தாத்தா சொல்வார்.''

''சோமு தாத்தா ஊரை விட்டு விலகி அந்த வசதியில்லாத மண்டபத்திலேயே வாழ்ந்துக்கிட்டிருக்கிருர். எப்பவும் யாராவது அந்த வீட்டைக் காவல் காக்கறமாதிரி இருந்துகிட்டிருப்பாங்க. பத்து, பன்னெண்டு வருஷங்களுக்கு முன்னே, ஒரேயடியா மழை கொட்டி ஊரிலே வெள்ளம் ஓடிச்சு. ஊர்ப் பெரியவங்க சோமு தாத்தா வீட்டுக்குப் போய் அவரை ஊருக்குள்ளே வந்திருக்கும்படி அழைச்சாங்க. அவர் மகனை, மருமகளை, பேரனை அனுப்பினுரே தவிர தான் வரலே. அப்பத்தான் அங்கே என்னமோ புதையல் இருக்குன்னு எல்லாரும்பேசினுங்க. சுமதி! நீஏம்மா இதெல்லாம் கேக்கறே.''

சித்தப்பாவின் கேள்விக்குப் பதில் சொல்ல சுமதி முயன்ருள். அதற்குள், ''முதல்லே சாப்பிடுங்க. அப்புறம் பேசிக்கலாம்'' என்று தடுத்துவிட்டாள் பத்மா. சுமதி, சாப்பிட்டு முடித்ததும் சித்தப்பாவிடம், தான் செங்கோடன் வீட்டுக்குப் போனதையும், அங்கே ஒருத்தர் அந்த வீட்டை

இருபதாயிரம் ரூபாய்க்கு விலை பேச வந்ததையும் தெரிவித்தாள்.

''பழைய மண்டபங்க பாழடைஞ்ச நிலையிலே நாடு முழுதும் நிறைய இருக்கு. ஆடு மாடு மேய்க்கற பசங்க வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்க உபயோகப்படும். அதுமாதிரி ஒன்றிலே சோமு தாத்தா குடியிருக்கிறார். அதுக்குப் போய் இருபதாயிரம் கொடுக்கறவங்க யாரு?'' முத்துசாமி ஆச்சர்யப்பட்டார்.

அதே நேரத்தில் அதே செய்தியைச் செங்கோடன் சொல்லக் கேட்ட சோமு தாத்தா ஆச்சர்யப்படவில்லை. ஆத்திரமும் கோபமும் அடைந்தார். ''என் வீட்டை விலை பேசறவன் எவன்? விக்கிறதா சொன்னது யாரு? வரட்டும் இந்த ரங்கசாமி! ஏமாந்தா எனக்கே ஒரு விலை போட்டு வித்து, கமிஷன் எடுத்துக்குவான் போலிருக்கே'' என்று சத்தம் போட்டார்.

தரகர் ரங்கசாமி தம் வீட்டிலேயே காத்திருந்தார். ''சும்மா கொடுத்தாலும் யாரும் வாங்காத ஒரு கல் மண்டபத்துக்கு இருபதாயிரம் விலை கிடைக்கும்னு சோமு தாத்தா மூச்சு வாங்க ஓடி வருவார். அவருகிட்டே பேசினாத்துக்கு ரெண்டு ரூபாய் கமிஷன் எல்லாம் ஒத்து வராது. நமக்கு முழுசா ஐந்தாயிரம் கொடுத்தாத்தான் முடிச்சுத் தருவேன்னு சொல்லி, ஒரு மூவாயிரத்துக்கு இறங்கி வரலாம்'' என்று கற்பனை செய்து கொண்டிருந்தார்.

மாலை போய், இரவும் வந்துவிட்டது.

சோமு தாத்தா வரவில்லை.

தரகர் ரங்கசாமி அதற்கு மேலும் காத்திருக்க முடியாமல் புறப்பட்டார். ''ஈரோட்டிலிருந்து சோமு தாத்தா இன்னும் திரும்பி வரவில்லையோ?'' என்று நினைத்தார். என்றாலும் உறுதியாகத் தெரிந்து கொள்வதற்காக அந்த இருட்டிலும் சோமு தாத்தாவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

ரங்கசாமி, கல் மண்டபத்தை நெருங்கியபோது அவர் முகம் மலர்ந்தது. காரணம், சோமு தாத்தா மண்டபத்தின் படியில் உட்கார்ந்திருந்தது தான். உடனே வீடு திரும்பும் வண்டி மாட்டின் வேகத்தோடு நடந்து சென்ற ரங்கசாமி, ''சோமு தாத்தா! ஈரோட்டிலேருந்து இப்பத்தான் வந்தீங்கன்னு நினைக்கிறேன். இல்லேன்னா எங்க வீட்டுக்கு வந்திருப்பீங்களே'' என்று சொல்லிக் கொண்டே, தாத்தா உட்கார்ந்திருந்த படிக்கு அடுத்த படியில் உட்கார்ந்தார்.

''நான் மதியமே திரும்பிட்டேன்''

## தோழர்கள்

தி. பட்சிராஜன்



காலையில் கூவி நம்மை எழுப்பும்
சேவலும் நமக்குத் தோழன் ஆகும்!
வாலைக் குழைத்து வீட்டைக் காக்கும்
நாயும் நமக்குத் தோழன் ஆகும்!

இரவில் திருடும் எலியை ஒழிக்கும்
பூனையும் நமக்குத் தோழன் ஆகும்!
குரலில் இனிய தமிழைப் பேசும்
கிளியும் நமக்குத் தோழன் ஆகும்!

புல்லைத் தின்று பாலைப் பொழியும்
பசுவும் நமக்குத் தோழன் ஆகும்!
தொல்லை யின்றி யாவரும் வாழ்வோம்!
தூய அன்பில் கூடியே வாழ்வோம்!

சோமு தாத்தா சொன்னுர்.

"மதியமே திரும்பிட்டீங்களா? அப்போ, செங்கோடன் நான் வந்து போன விஷயத்தை உங்களிடம் சொல்ல மறந்துட்டானு?"

"என் பேரனுக்கு மறதி இல்லே. எல்லாம் சொன்னுன்."

ரங்கசாமி குழப்பமடைந்தார்.

"நான் வந்த விஷயம் தெரிஞ்சும் நீங்க வந்து பார்க்கலேயே, என்ன விஷயம்?"

"எல்லாம் உன் நன்மைக்குத்தான்!"

ரங்கசாமி மேலும் குழப்பமடைந்தார். "என் நன்மைக்கா? நீங்க என்ன சொல்றீங்க?"

சோமு தாத்தா படியிலிருந்து எழுந்து நின்றுர்.

"ஓய் தரகு ரங்கம்! என்னைக் கேக்காம, நான் உன்னிடம் சொல்லாம, என் வீட்டை விலை பேச உனக்கு எவ்வளவு துணிச்சல்? விஷயத்தைக் கேட்டபோதே உன்னைப் பார்த்திருந்தா, உதைச்சிருப்பேன். அதுக்குத்தான் உன்னைப் பார்க்க வரலே. இனிமே சொந்தக்காரர் அனுமதி இல்லாம எந்தப் பொருளையும் விலை பேசாதே..."

சோமு தாத்தா சொல்லிவிட்டுக் கோபத்தோடு மண்டபத்துள் போகத் திரும்பினுர்.

ரங்கசாமி அதிர்ச்சி அடைந்தார்!

"என்னங்க இது, என்னென்னவோ பேசிட்டு உள்ளே போறீங்க. இருந்து பேசுங்க."

சோமு தாத்தா இரண்டு படி ஏறி நின்று திரும்பிச் சொன்னுர்:

"இங்கே இருந்து திரும்பவும் நீ என் வீட்டை விலை பேசறதைக் கேட்டா, நிச்சயம் என் கை சும்மா இருக்காது. உன் உடம்பும் நான் குடுக்கறதைத் தாங்காது. இப்பவும் உன் நன்மைக்குத்தான் உள்ளே போறேன்."

தாத்தா உள்ளே போய்விட்டார்.

ரங்கசாமி பதறி எழுந்து நின்றுர். சோமு தாத்தாவுக்கு இவ்வளவு கோபம்வந்து அவர்பார்த்ததேஇல்லே. தாத்தா உள்ளே போனதும் பேரன் வெளியே வந்தான். அவனைக் கண்டதும், "செங்கோடா! என்ன உங்க தாத்தா இப்படி...." என்று சொல்ல ஆரம்பித்தவரை, செங்கோடன் ஒரு

அடுத்த இதழில்...

## என் குழந்தைப் பருவம்



M.O.H. ஃபரூக் மரைக்காயர்
(புதுவை முதலமைச்சர்)

விரலை உதட்டில் வைத்து, "உஸ்! ஒன்றும் பேசாம வாங்க" என்று எச்சரித்துவிட்டுப் படியிறங்கி முன்னே நடந்தான். ரங்கசாமி அவன் பின்னே சென்றுர். இருவரும் கொஞ்ச தூரம் சென்றபின், செங்கோடன் நின்றுன். தரகரும் நின்றுர்.

"மாமா! வீட்டுக்கு விலை பேசி நீங்க வந்ததா சொன்னதிலேருந்து தாத்தா கொதிச்சுக்கிட்டிருக்காரு. அவரு சொல்லாமே நீங்க விலை பேசலாமா?"

"ஏதோ நல்ல விலையாயிருக்கேன்னுதான் வந்தேன்."

"சரி, சரி, இதை இதோடு விட்டுடுங்க. இனிமே வீடு விற்கிற விஷயமா தாத்தாவிடம் வந்தீங்க, அப்புறம் என்ன நடக்கும்னு தெரியாது....சொல்லிட்டேன்."

செங்கோடன் சொன்னதைக் கேட்டதும் "ஐயோ, பதிமூணுயிரம் போச்சே!" என்று அவர் மனம் புலம்பியது. தாத்தாவிடம் கிடைக்கும் கமிஷன் மூவாயிரம், வீட்டை வாங்கப் போகிறவன் தருவதாகச் சொன்ன பத்தாயிரம் — மொத்தம் பதிமூன்றுயிரம் கைதவறிப் போனுல் யார்தான் வருத்தப்பட மாட்டார்கள்!

ரங்கசாமி மெல்ல நடக்க ஆரம்பித்தார். அவருக்குஒன்றுமட்டும்நன்றுகப் புரிந்தது. ஒன்றுமில்லாத ஒரு மண்ட

பத்துக்கு ஒருத்தன் இருபதாயிரம் விலை தருவானேன்? அதை முடிச்சுக் கொடுத்தா தனக்குப் பத்தாயிரம், பாதிக்குப் பாதி கமிஷன் தருவானேன்? இருபதாயிரத்துக்கு இந்த வெறும் மண்டபத்தை விலைக்குக் கேட்டா, லாபத்தை நினைச்சு சந்தோஷப்படாம, சோமு தாத்தா கோபப்படுவானேன்?

''ஆமாம்! ஊரார் சொல்றது உண்மை! சோமு தாத்தா வீட்டிலே புதையல் இருக்கு. அதனாலேதான் அவருக்கு அத்தனை கோபம்!''

ரங்கசாமி மனம் பலவாறு நினைத்தாலும் வழிமாறாமல் தன் வீடு நோக்கி நடந்தார்.

* * * * *

மறுநாள் காலை.

சுமதி பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டாள். பள்ளிக்கூடம் இருக்கும் தெருவில் அதைக் கடந்து நடந்தால் நெடுஞ்சாலை வரும். பள்ளிக்கூடத்துக்குக் கொஞ்சம் தள்ளிச் செங்கோடன் நிற்பது தெரிந்தது. அவன் அவள் வரும் திசையில் பார்க்காமல் எதிர்த் திசையில் பார்த்துக் கொண்டிருந்தான். சுமதி அவன் அருகே சென்றாள்.

''செங்கோடா!''

அவன் உடனே திரும்பிப் பார்க்கவில்லை. சுமதி மீண்டும் உரக்க அழைத்தாள். அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

''என்ன இப்படி வெற்றிடத்தை வெறிச்சுப் பார்த்துக்கிட்டு நிக்கறே?''

''ஒரு காரிலே ரங்கசாமி மாமா யாரோடையோ போகிறார். ஒருவேளை



அந்தக்கார்க்காரன்தான், எங்க வீட்டை விலை பேசின ஆசாமியா இருக்க லாம். வீட்டை விலைக்குக் கேட்டதைச் சொன்னதும் எங்க தாத்தா எவ் வளவு கோபப்பட்டார் தெரியுமா?''

செங்கோடன், நேற்று சோமு தாத்தா கோபம் கொண்டதையும் தரகர் ரங்கசாமியை விரட்டியடித்த தையும் சொன்னான்.

''சுமதி! எங்க வீட்டை வாங்க விரும்பறவரைப் பார்த்து எதுக்கு வாங்கறீங்கன்னு கேக்கணும்னு ஆசை. ஆனல், கார் இப்படிப் போயி டுச்சு.''

''அந்த ஆசாமியைப் பார்க்கணும் னு எனக்கும் ஆசையா இருக்கு. மெயின் ரோடு வரை போய்ப் பார்ப் போமா? அங்கே அவங்க இருந்தா லும் இருக்கலாம்.''

''சரி.''

இருவரும் வேகமாக நடந்தார்கள். அந்தத் தெரு நேரே சென்று வலப் பக்கம் வளைந்து நெடுஞ்சாலையோடு ஒன்று சேர்ந்தது. அந்தச் சந்திப்பில் ஒரு புளிய மரம். அதன் அடியில் ஒருவன் இளநீர் குவித்திருந்தான். அதற்கு அருகே மற்ரெரு புளிய மரத் தின் நிழலில் கருப்பு அம்பாஸிடர் கார் நின்றிருந்தது. அதன்மீது நாகரீக மாக உடுத்திக் கொண்டிருந்த ஒருவன் ஒய்யாரமாகச் சாய்ந்திருந்தான். அவனிடம் ரங்கசாமி, சீவிய இளநீரில் ஒரு ஸ்ட்ரா சொருகிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சுமதியும் செங்கோடனும் அம்பா ஸிடர் காரை நெருங்கிக் கொண்டிருந் தனர். அப்போது, ''இதோ பாரய்யா! எனக்கு அந்த மண்டபம் வேணும்.



வாங்கித் தர்ற உனக்குப் பத்தாயிரம் கமிஷன் தர்றதாச் சொல்லி ஆயிரம் ரூபாய் நேத்தே கொடுத்துட்டேன். இப்போ அதெல்லாம் வாங்க முடியாதுன்னு சொன்ன எப்படி?'' என்று கார்க்காரன் கேட்டது, காதில் விழுந்தது. இருவரும் நின்றனர். நின்ற இடத்தின் ஓரத்தில் முள்மரம் புதராக இருந்தது. செங்கோடன், தன் பின்னே வரும்படி சாடை காட்டிவிட்டு, முள் மரத்தின் பின்னே ஒதுங்கினன். சுமதியும் அவனை ஒட்டி நின்றாள்.

''நான் என்னங்க பண்ண முடியும்? சோமு தாத்தா சீறி விழுறர். அவரு அந்த மண்டபத்தை விக்க மாட்டாருங்க....'' — இது ரங்கசாமி.

''விலையை அதிகமாக்கின? முப்பதாயிரம் தருவோம்.''

''பயனிருக்காதுங்க. ஐம்பதாயிரம் தந்தாகூட ஆளு இணங்கமாட்டார்.''

''அவருக்குப் பிறகு சொத்து யாருக்குப் போவும்?''

''முறைப்படி மகன் மருதப்பனுக்கு.''

''மருதப்பன் எப்படிப்பட்ட ஆளு?''

''மருதப்பன் ஒரு குடிகாரன். முப்பதாயிரம் வேண்டாம். மூவாயிரத்துக்குக்கூட வித்துப்புடுவான்.''

ஸ்ட்ரா மூலமாக இளநீரைக் கொஞ்சம் உறிஞ்சின கார்க்காரன், அண்ணாந்து வானத்தைப் பார்த்தான். பிறகு சுற்றுமுற்றும் பார்த்தான். இளநீர்க் கடைக்காரன் அவர்களைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. அவன் கொஞ்சம் குரலை இறக்கி, ''எனக்கு அந்த மண்டபம் வேணும்! அதுக்காக எவ்வளவு செலவானலும் பரவாயில்லே. என்ன செய்தாலும் பாதகமில்லே. இதோ பாரு! அந்தச் சோமு தாத்தாவை தீர்த்திடட்டுமா?'' என்று கேட்டான்.

ரங்கசாமி முகம் வெளிறி, ''தாத்தாவைக் கொல்லப் போறீங்களா?'' என்று கேட்டான். கார்க்காரன், ''ஆமாம், ஆமாம்'' என்று தலையசைத்தான்.

(தொடரும்)



## ஸ்ரீ சாரதா தேவி

ஐந்தாவது வயதிலே இராம கிருஷ்ண பரமஹம்சரைத் திருமணம் செய்து கொண்டவர் இவர். பள்ளிப் படிப்பு எதுவும் இவருக்கு இல்லை. திருமணமான பிறகு, கணவரிடமே ஞான உபதேசம் பெற்றார். துறவி போலவே கடைசி வரை வாழ்ந்து வந்தார்.

கல்கத்தாவிற்கு அருகிலுள்ள தட்சிணேஸ்வரத்திலே காளி கோயில் பூசாரியாக இருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர், எப்போதும் கடவுள் நினைவாகவே இருப்பார். அதனால் 'பைத்தியம்' என்றே பலரும் அவரைக் கேலி செய்தார்கள். அவருக்குத் திருமணம் செய்து வைத்தால், பைத்தியம் பறந்தோடி விடும் என்று அவருடைய பெற்றோர்கள் நினைத்தார்கள். பல இடங்களில் பெண் தேடி அலைந்தார்கள்.

"ஏன் இப்படி அலைய வேண்டும்? ஜயராம்பாடிக்குச் செல்லுங்கள். அங்கு இராமச்சந்திர முகர்ஜியின் வீட்டில் எனக்கென்றே ஒரு பெண் பிறந்திருக்கிறாள்" என்றார் இராமகிருஷ்ணர். அவர் சொன்னபடியே அங்கே சென்றனர்; பெண்ணைப் பார்த்தனர்; திருமணத்தை முடித்தனர்.

அந்தப் பெண்ணுக்கு வயது ஆக ஆக, அவருக்கும் பைத்தியம் (கடவுள் பைத்தியம்) பிடித்துவிட்டது!

இராமகிருஷ்ணரின் பெருமையை மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கினார்கள்: கூடவே, சாரதா தேவியின் பெருமையையும் உணர்ந்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் தங்களின் சொந்தத் தாய் போலவே அவரைக் கருதி, "அம்மா, அம்மா" என்று ஆசையோடு அழைத்தார்கள். சுவாமி விவேகானந்தரும் இவரை 'அம்மா' என்றே அழைப்பார்.



## பண்டித மாளவியா

ஓர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராயிருந்தவர், ஒரு பெரிய பல்கலைக் கழகத்தையே நிறுவினார்! ஆம், அலகாபாத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராயிருந்த இவரது பெரு முயற்சியால்தான் 'காசி இந்து பல்கலைக்கழகம்' (Benares Hindu University) நிறுவப்பட்டது. பல ஆண்டுகள் அந்தப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் இவர் இருந்தார்.

மிகச் சிறந்த தேச பக்தராக விளங்கிய இவர், மூன்று முறை தேசிய காங்கிரஸின் தலைமைப் பதவியை வகித்தார். மகாத்மா காந்தியுடன் லண்டன் சென்று வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

பரம வைதீக குடும்பத்தில் பிறந்த இவர், தீண்டாமை அடியோடு ஒழிய வேண்டுமென்று விரும்பினார். 'தீண்டத் தகாதவர்' என்று சிலரை ஒதுக்கி வைத்திருப்பது, இந்து மதத்திற்கு ஏற்பட்ட ஒரு பெரிய களங்கம் என்றும், இது போன்றவைகளுக்கு சாத்திரங்களில் ஆதாரமே கிடையாது என்றும் ஆணித்தரமாகப் பேசியும் எழுதியும் வந்தார்.


டில்லி சட்டசபையில் உறுப்பினராயிருந்த இவர், ஆங்கில அரசாங்கத்தின் அட்டூழியங்களை வன்மையாகக் கண்டித்து வந்தார். காந்திஜி உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கியதும், சட்டசபை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.


ஆசிரியர் வேலையை விட்டதும் இவர் 'இந்துஸ்தான்' என்ற பத்திரிகையின் ஆசிரியரானார். பிறகு, 'அப்யுதய' என்ற பத்திரிகையை நடத்தினார். அதன் பிறகு 'லீடர்' என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தி, விடுதலைப் போருக்கு வேகம் ஊட்டினார். பல முறை சிறை சென்றார்.

# (வி) சித்திரச் செய்திகள்

## ராட்சத கேக்

கோலாலம்பூரில் 370 அடி நீளம் உள்ள பெரிய ராட்சத கேக் ஒன்றைத் தயாரித்து மார்க்கெட்டுக்குக் கொண்டு போய் விற்றார்கள். இந்த கேக் தயாரிக்க 4000 முட்டைகள், 150 கிலோ சர்க்கரை, 100 கிலோ மாவு, 33 கிலோ சோளமாவு, 350 கிலோ கிரீம், 800 அன்னாசிப் பழங்கள் பயன்படுத்தப்பட்டன. இது ஒரு சாதனையாகக் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகிறது. இந்தக் கேக்கின் விற்பனை 'மலேசியக் குழந்தைகள் உதவி சங்க'த்திற்கு அளிக்கப்படுகிறது!






## மிக மிகச் சிறிய மீன்

உலகின் மிகச் சிறிய மீன் 'கோபி' மீன் என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால், இப்போது 'பண்டகா பிக்மி' என்னும் மீன் தான் உலகிலேயே மிகமிகச் சிறிய மீன் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் நீளம் ½ செ.மீட்டருக்கும் குறைவு! பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் இந்த மீன் கிடைக்கிறதாம். மிகப் பெரிய மீன் எது தெரியுமா? சுறா.

## அடேயப்பா! அவ்வளவு நீளமா?

சுமார் 300 கிராம் எடையுள்ள சிலந்தி நூலைக் கொண்டு, இந்த உலகத்தின் பூமத்திய ரேகை வழியே ஒரு சுற்று சுற்றிக் கொண்டு வந்து விடலாம். அப்படியானால் எவ்வளவு நீளம்? 24,902 மைல்கள்! அவ்வளவு மெலிதானது சிலந்தி நூல்!





## குழந்தை வீரன்

ஜப்பானில் மகோடா ஓசாகி என்னும் ஒரு வயதுக் குழந்தை இமயமலையின் மீது ஏறி விட்டான்! எப்படி? மலையேறும் வீரரான தன் அப்பாவின் தோளில் உட்கார்ந்து கொண்டு! குழந்தையை மலைமேல் கொண்டு போய்விட்டார் துணிச்சலான அப்பா!

# கேளுங்கள்; சொல்லுகிறோம்

* பச்சையப்பன் கல்லூரி, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி என்றெல்லாம் இருக்கின்றன. இந்தப் பச்சையப்பர் எந்த ஊரில் பிறந்தார்? அவருடைய வாரிசு யாராவது இப்போது இருக்கிறார்களா?

— எம். தனசேகரன், சென்னை — 7.



பச்சையப்ப முதலியார் பிறந்தது சென்னைக்கு அருகிலுள்ள பெரியபாளையம் என்ற ஊரில்தான். முதல் மனைவிக்குக் குழந்தை இல்லாததால் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். இரண்டாவது மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. 1794ல் பச்சையப்பர் காலமானார். அடுத்த ஆண்டிலே அவருடைய இரண்டாவது மனைவியும், அப்புறம் சில நாட்களிலே அந்தப் பெண் குழந்தையும் இறந்து விட்டனர். அதனால், வாரிசு யாரும் இல்லை.

* டிரான்சிஸ்டரைக் கண்டுபிடித்தவர் யார்?

— என். தாமோதரன், வந்தவாசி.

ஷாக்லே (Shockley) என்ற ஆங்கிலேயர்.

* மேரி கியூரி அம்மையார் எதற்காக நோபல் பரிசு பெற்றார்? எந்த ஆண்டில்?

— என். ஜெயச்சந்திரன், திருவனந்தபுரம் — 12.



கியூரி அம்மையார் ஒரு முறையல்ல; இரு முறை நோபல் பரிசு பெற்றார். 1903, 1911, ஆகிய இரு ஆண்டுகளும் இவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. ரேடியத்தை இவரும் இவர் கணவராகிய பியர் கியூரியும் சேர்ந்து கண்டு பிடித்ததற்காக முதல் தடவையும், கணவர் இறந்தபின் ரேடியத்தையும், கதிர் இயக்கத்தையும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ததற்காக இரண்டாவது தடவையும் நோபல் பரிசு பெற்றார்.

* இந்தியாவிலே படித்தவர் தொகை அதிகமாக உள்ளது எந்த மாநிலம்?

— ப. கண்ணபிரான், திருவாரூர்.

கேரளம்தான். 100க்கு 69 பேர் படித்தவர்கள்!

* 'சர்க்கஸ்' என்பது தமிழ்ச் சொல்லா? ஆங்கிலச் சொல்லா?

— ஆர். விஜய், திண்டுக்கல்.



இரண்டும் இல்லை. அது ஒரு லத்தீன் சொல். லத்தீன் மொழியில் 'சர்க்கஸ்' என்றால் 'வட்டம்,' அல்லது 'வளைவு' என்று பொருள். வட்டமான இடத்திற்குள் வித்தை காட்டப்படுவதால், அந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள்.

* என்றும் பதினாறு வயதுடைய மார்க்கண்டேயனின் தாய், தந்தை பெயர் என்ன?

— கோ. பாலன், பெரியசாமிபுரம்.

மார்க்கண்டேயனின் தந்தை பெயர் மிருகண்டு முனிவர்; தாயார் பெயர் மருத்துவதி.

* ஏரோப்ளேனால் ஆடாமல், அசையாமல் நிற்க முடியுமா?

— ம. சுவர்ணலதா, வானாடி



முடியும், தரையில் இருக்கும்போது! ஆனால், உயரப் பறக்கும்போது, ஓரிடத்தில் ஆடாமல் அசையாமல் நிற்க முடியாது. நின்றால், ஆபத்தாகவே முடியும். ஹெலிகாப்டரில்தான் அவ்வாறு நிற்க முடியும்.

* உடல் நலம் பேண வேண்டியது எல்லோருக்கும் கட்டாயம்தானா?

— இ. வை செம்பியன், சீர்காழி.

சுவர் நன்றாக இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்?

* தேன் சிட்டு என்ற பறவையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

— கே. மணிவாசகம், வேலங்குடி.

நேரில் பார்த்ததில்லை. படத்திலேதான் பார்த்திருக்கிறேன். ஆயினும், அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தேன் சிட்டு, இந்தியாவிலுள்ள பறவைகளிலேயே மிகவும் சிறியது; சிறு சிறு பூச்சிகளும் பூக்களிலுள்ள தேனும்தான் அதன் ஆகாரம். ஆண் தேன் சிட்டின் உடல் பொன் வண்டு போல மினுமினுக்கும்; பெண் சிட்டின் உடலின் மேல் பாகம் சாம்பல் பசுமையாகவும், அடிப் பாகம் மஞ்சளாகவும் இருக்கும் — என்றெல்லாம் அறிந்து கொண்டிருக்கிறேன்.

* முதன் முதலாகத் தமிழில் கலைக்களஞ்சியம் எப்போது வெளிவந்தது? அதை அரசாங்கமே வெளியிட்டதா?

— சி. பாஸ்கரன், சேலம் — 3.

முதல் முதலாகத் தமிழில் வந்த கலைக் களஞ்சியத்தின் பெயர் 'அபிதான சிந்தாமணி'. அதைத் தயாரித்து 1910 ல் வெளியிட்டவர் சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியராயிருந்த ஆ. சிங்கார வேலு முதலியார். அதில் முற்காலத்திலிருந்த அரசர்கள், புலவர்கள், வள்ளல்கள், மருத்துவம், சோதிடம், இலக்கியங்களில் வரும் கதாபாத்திரங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவை பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

* 'மோகினி ஆட்டம்' என்கிறார்களே, அதைப் பற்றிச் சொல்லுவீர்களா?

— சி. ருக்மணி, திருநெல்வேலி — 2.

இது கேரளாவில் பெண்கள் ஆடுகின்ற ஒருவகை நடனம். சதிர் போல இருக்கும். இதற்கு மேடையோ, திரையோ அவசியமில்லை. வெள்ளைச் சேலையும் வெள்ளை மேல் அங்கியும் அணிந்து கொண்டு ஆடுவார்கள். அப்போது, பழங்காலக் கேரள நகைகளை அணிவதும் உண்டு.

* இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று எங்களுக்குப் பள்ளியிலே சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். நாம் பாடுகின்ற தமிழ்த்தாய் வாழ்த்தில், 'எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே' என்று வருகிறதே. அதில் உள்ள 'இருந்த' என்பதற்குப் பதிலாக 'இருக்கின்ற' என்று இருந்தால், நன்றாக இருக்காதா?

— சி. மணிகண்டன், மதுரை — 2.




நல்ல கேள்வி. 'எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!' என்பதற்குப் பதிலாக 'எத்திசையும் புகழ்மணக்க இருந்திடுநற் றமிழணங்கே!' என்று இருந்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இந்தப் பாட்டை எழுதும்போது, தமிழ்த் தாய் வாழ்த்தாக இதை நாம் பாடுவோம் என்று எதிர் பார்த்திருப்பாரா? நிச்சயமாக எதிர்பார்த்திருக்க மாட்டார். அவர் எழுதிய பாடலைத் திருத்துவது அழகல்ல; அந்த உரிமை மற்ற எவருக்குமே கிடையாது.

* முயலை அதன் காதைப் பிடித்துத்தான் தூக்க வேண்டும் என்கிறார்களே, அது சரியா?

— இரா. பழனி, இராமவர்மபுரம்.

சரிதான். கழுத்தைப் பிடித்துத் தூக்கினால், அதற்கு வலிக்குமாம். காதைப் பிடித்துத் தூக்கினால் வலிக்காதாம்.

* கிரிக்கெட் விளையாட்டைப் பற்றித் தமிழில் தமிழ்நாட்டில் ஏதாவது பத்திரிகை வெளிவருகிறதா?

— ஏ. செலின், வடசித்தூர்.

அப்படி ஒரு பத்திரிகை வெளிவருவதாகத் தெரியவில்லை.

# குழந்தை இலக்கியப் போட்டியில் பரிசு பெற்றோர்

குழந்தை எழுத்தாளர் சங்கம் வாழ்க்கை வரலாறு, அறிவியல், தேசிய ஒருமைப்பாட்டை மையமாகக் கொண்ட நாவல், ஆக மூன்று போட்டிகளை அறிவித்தது. அப்போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற எழுத்தாளர்களை 'கோகுலம்' சார்பிலும், கோகுலம் வாசகர்கள் சார்பிலும் பாராட்டுகிறோம்.

<u>பரிசு பெற்றோர்: ஏ. வி. எம். அறக்கட்டளை</u>

முதற் பரிசு: தங்கப் பதக்கம்; 2 ஆம் பரிசு: வெள்ளிப் பதக்கம்.

## வாழ்க்கை வரலாறு.



முதற் பரிசு

அரசு மணிமேகலை, (சென்னை)
எழுதிய
'கவிதைக் கதிரவன் தாகூர்'



2 ஆம் பரிசு


'ஜானகி மணாளன்' (மன்னார்குடி)
எழுதிய
அற்புத மனிதர்: ஃபெரோஸ் காந்தி'

## அறிவியல்



முதற் பரிசு

எம். சோலையன், (காரைக்குடி)
எழுதிய
'வானிலையும் விண்வெளியும்'



2 ஆம் பரிசு

தி. பட்சிராஜன், (புதுடில்லி)
எழுதிய
'கடலும் மனித குலமும்'

## எல்லப்பா — ரங்கம்மாள் நினைவாக

தேசிய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நாவல் பரிசு




முதற் பரிசு

தங்க சிவராசன் (புதுவை)
எழுதிய
'மனம் எனும் பூஞ்சோலை'



2 ஆம் பரிசு

வி. ர. வசந்தன் (திருச்சி)
எழுதிய
'கடமை நெஞ்சம்'


காட்டினூடே அமைந்த பாதையோடு போகையில் மான்களைக் கண்ட மன்னன் துஷ்யந்தன் குறி பார்த்தான். அப்போது...
அது ஆசிரமத்து மான்! கொல்லாதீர்கள்!
துறவிகளிடம் மன்னிப்புக் கோரினான் துஷ்யந்தன்.
இது யாருடைய ஆசிரமம்?
கண்வ மகரிஷியின் ஆசிரமம். ஆனால் அவர் இப்போது தீர்த்த யாத்திரை போயிருக்கிறார்.
துறவிகள் சென்றதும் மன்னன் தேர்ப்பாகனிடம்.....
ஆசிரமத்தைப் பார்த்து வருகிறேன். அங்கு தேரில் போகக்கூடாது. நீ பாசறைக்குத் திரும்பிவிடு!
சகுந்தலை
கதை: ஆனந்தி
படம்: வினு
ஆசிரமத்தைச் சூழ்ந்த நந்தவனத்தில் கண்வரின் மகள் சகுந்தலை செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தபோது...
ஐயோ! வண்டு! வண்டு!



பயந்து போய்த் தோழியை அழைத்தாள் சகுந்தலை...
பிரியம்வதா! ஐயோ என்னைத் துரத்துகிறதே...! காப்பாற்றேன்!
பெண்ணின் அபயக் குரல் கேட்ட துஷ்யந்தன் அத்திசையில் பாய்ந்தான்..
யாரது! பெண்களைத் துரத்தி இம்சிக்கிறவன்?
சகுந்தலைக்கு வெட்கமாகப் போய்விட்டது. தோழி அனுசூயை பதில் சொன்னாள்...
ஒன்றுமில்லை ஐயா! சகுந்தலை கருவண்டு சுற்றியது கண்டு பயந்து விட்டாள்.
பூ! இவ்வளவுதானா! நல்ல வேளை!
பிரியம்வதை கேட்டாள்...
எங்கள் ஆசிரமத்துக்கு வந்த அதிதியான தாங்கள் யார்?
நான்தான்... அதாவது நான்.....
மன்னன் என்று சொன்னால் அவர்கள் மிரண்டு ஓடி விடுவார்களோ என்பதால் துஷ்யந்தன்...
துஷ்யந்த மகாராஜா எங்களை ஆசிரமங்களுக்குத் தொல்லைகள் ஏதும் இல்லாதிருக்கிறதா என்று பார்த்து வர அனுப்பினார்!
பேச்சு வளர்ந்தது...
இந்த சகுந்தலை மகரிஷி கண்வரின் புதல்வி...
கண்வர் பிரும்மச்சாரி என்று கேள்விப் பட்டிருக்கிறேனே?


தோழிகள் பிரியம்வதையும் அனசூயையும் சகுந்தலையின் கதையைக் கூறினார்கள்.
கௌசிக முனிவர் கடுமையான தவம் செய்து கொண்டிருந்தார். அதை உணர்ந்த இந்திரன்...
இந்திரன் மேனகையை அழைத்தான்....
கௌசிகனின் கடுந் தவத்தால் என் இந்திர பதவிக்கே ஆபத்து. நீ போய் அவர் தவத்தைக் கலைத்து விடு!
மேனகையின் ஆட்டமும் பாட்டும் உபசாரமும் கௌசிகன் தவத்தைக் கலைத்து விட்டன.
இருவரும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.
நாளடைவில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. மேனகை மகிழ்ந்தாள். ஆனால் கௌசிகன்...
சுவாமி! குழந்தை என்ன அழகு பார்த்தீர்களா?
ஆம். இந்த அழகு நான் தவ வாழ்க்கையை விட்டு இல்லறத்தில் வீணடித்து விட்ட நாட்களை நினைவூட்டுகிறது.
கௌசிகன் மீண்டும் தவம் புரியச் சென்று விட்டார். மேனகை....
நானும் தேவருலகு திரும்ப வேண்டும். குழந்தையை இந்த வனத்தில் விட்டுச் செல்ல வேண்டியதுதான். ஆசிரம வாசிகள் யாரேனும் பார்த்துக் காப்பாற்றுவார்கள்....


தளிர் படுக்கையில் விட்டுச் செல்லப்பட்ட குழந்தைக்கு மயில் நிழலளித்து, மான் விளையாட்டுக் காட்டியது...
அந்தப்பக்கமாகக் கண்வரும் சீடர்களும் வந்த போது...
அடடே! குழந்தை!
மயிலின் நிழலில் மயிலின் அழகுடன்!
சகுந்த பட்சி (மயில்) காத்த இந்தக் குழந்தைக்குச் சகுந்தலை என்று பெயர் சூட்டுகிறேன்!
அனசூயையும் பிரியம்வதையும் கதை கூறி முடித்தனர்...
அந்தக் குழந்தைதான் இவள்! கண்வரின் கண்ணுக்குக் கண்ணான வளர்ப்புப் புத்திரி.
இவள் அழகு தெய்வீகமானது என்று நினைத்தேன்; உண்மையாயிற்று!


பிரியம்வதை சொன்னாள்...
சகுந்தலைக்குத் தகுந்த கணவன் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே கண்வ மகரிஷி தல யாத்திரை போயிருக்கிறார்!
ஓ! அப்படியா சேதி!
அனசூயை நினைவூட்டினாள்...
நேரமாகிறது, நாங்கள் ஆசிரமத்துக்குத் திரும்ப வேண்டும்.
சரி, போய் வாருங்கள்.
அவர்கள் போகும்போது...
சகுந்தலை, முள்ளை எடுப்பது போலப் பாவனை செய்து என்னைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறாள்!
பாசறைக்குத் திரும்பிய துஷ்யந்தன் சகுந்தலையின் நினைவாகவே இருந்தான். அரண்மனை விதூஷகன் புரிந்து கொண்டான்.
ஊருக்குப் போகலாமா...?
உனக்குச் சதா அவள் நினைவு தான்.
பேரிச்சம் பழம் தின்றவன் புளியம் பழத்துக்கு ஆசைப் படலாமா? மகாராணி அரண்மனையில் காத்திருக்க ஒரு காட்டுப் பெண் மீது காதலா?


ஹூம், கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? சகுந் தலையின் அழகு பற்றி உனக்கு என்ன தெரியும்? அவள் மேனகைக் குப் பிறந்தவள்!
அச்சமயம் வந்த ரிஷி குமாரர்கள்....
அரசே! மகரிஷி கண்வர் இல்லாத துணிவில் அசுரர் தொல்லை கொடுக் கிறார்கள். எங்கள் யாகத்தைக் காக்க வேண்டும்.
நிச்சயமாக! இதோ புறப்படுகிறேன்!
யாகசாலையில்...
மன்னர் துஷ்யந்தர் யாகத்தைக் காப்பதாக உறுதி அளித்து விட்டார். ம்... ம்... மேலே ஆகட்டும்...
அக்னயே ஸ்வாஹா!....
இதைக் கேட்டுக் கொண்டிருந்தாள் சகுந்தலை. அப்போது துஷ்யந்தன் அங்கு வர...
அட, இவரா துஷ்யந்த மன்னர்!
துஷ்யந்தனால் தான் அனுப்பப் பட்டதாக அன்று நம்மிடம் சொன்னாரே!
நாம் பயந்து ஓடிவிடக் கூடாது என்ப தற்காக அப்படி சொல்லி யிருப்பார்....
சரி, சரி, யாக காரியங் களைக் கவனி.



யாகம் நல்லபடியாக முடிந்தது... சகுந்தலை நினைவாக துஷ்யந்தன் காட்டில் அலைந்தான்...
என்னால் சகுந்தலையை மறக்கவே முடியவில்லை.
அதே சமயம் ஒரு தாமரைத் தடாகக் கரையில்...
சகுந்தலா! ஏன் இப்படி சோர்வாய் இருக்கிறாய்?
மன்னரைக் கண்டதிலிருந்து எனக்கு மனமே சரியில்லை...
ஒரு புதர் மறைவில் இதைக் கேட்டுக் கொண்டிருந்த துஷ்யந்தன் வெளிப்பட்டான்.
இதோ, உன் மன்னரே வந்து விட்டார்...
நாங்கள் போகிறோம்....
துஷ்யந்த மகாராஜா அரச தர்மப்படி சகுந்தலையைக் காந்தர்வ விவாகம் செய்து கொண்டான்.
கண்ணே...
அன்பே...
ஹஸ்தினாபுரத்தை எதிரிகள் தாக்க, துஷ்யந்தன் தலைநகர் திரும்ப வேண்டியிருந்தது.
ஒரு நாளும் உன்னை மறவேன். போய் வருகிறேன்....



சகுந்தலை துஷ்யந்தன் நினைவாகவே இருந்தாள்...
கவலைப் படாதே சகுந்தலை, அரசர் உன்னை ஒரு நாளும் மறக்க மாட்டார்.
மாதங்கள் சென்றன. ஒரு நாள் துர்வாஸர் வந்தார், கண்வரின் ஆசிரமத்துக்கு...
சகுந்தலை அவரை வரவேற்கவில்லை. துர்வாஸர் கோபமடைந்து....
ஏ, பெண்ணே! நீ யாருடைய நினைவில் மூழ்கி, அதிதியை அசட்டை செய்தாயோ அவன் உன்னை மறந்து போகட்டும்!
சத்தம் கேட்டு பிரியம் வதையும் அனசூயையும் ஓடி வந்தனர்... சகுந்தலை ரிஷியை நமஸ்கரித்து...
சுவாமி! மன்னியுங்கள்.
கொடுத்த சாபத்தை நீக்க முடியாது. ஆனால் மன்னன் தந்த அடையாளம் காட்டினால் அவனுக்கு நினைவு வரும்!



தலயாத்திரை சென்றிருந்த கண்வ மகரிஷி திரும்பி வந்தார்...
சகுந்தலை எங்கே...?
தன்னை வரவேற்றவர்களில் சகுந்தலையைக் காணமல் திகைத்த கண்வர், அவளைத் தேடிச் சென்றார்.
சகுந்தலை!
அப்பா, என்னை மன்னியுங்கள்....
நடந்தவை அனைத்தையும் ஞானதிருஷ்டியால் உணர்ந்தார் கண்வர்....
பரிவுடன் சகுந்தலையை எழச் செய்து...
கவலைப்படாதே குழந்தாய்! உன்னை உன் கணவரிடம் சேர்ப்பிப்பது என் பொறுப்பு...
...அணைக்க சகுந்தலையின் மனக் கலக்கம் குறைந்தது....
இதோபார், நீ பட்டமகிஷியாக வாழப் போகிறாய்; உனக்குப் பிறக்கப்போகும் மகனால் இந்த நாடே சிறக்கும்!




சகுந்தலை நந்தவனத்தில் தான் வளர்த்த மரம் செடி, கொடிகளிடம் விடை பெற்றுக்கொண்டாள்....
வன தேவதைகள் தோன்றி...
ஆசிரமத்தில் எளிய மரவுரி அணிந்தது போல் அரண்மனையில் இருக்கமுடியுமா? இந்தா பட்டாடைகள்....
முல்லைக் கொடியே! போய் வருகிறேன்; மானே! மயிலே வரட்டுமா?
இதோ ரத்ன ஹாரங்கள், வளையல்கள், சிலம்புகள்...
இந்தக் கிரீடத்தையும் அணிந்து கொள்.... சர்வாலங்கார பூஷிதை யாகப் போய்வா!
குழந்தாய்! அன்னை கௌதமியும் இரு ரிஷிகுமாரர்களும் உன்னுடன் ஹஸ்தின புரத்துக்கு வருவார்கள். உன்னை உன் கணவரிடம் சேர்ப்பித்து விட்டுத் திரும்புவார்கள்.




பிரியம்வதை பிரியா விடை அளித்தாள்.
அனசூயை கனிவுடன் கேட்டாள்...
மோதிரம் பத்திரமாயிருக்கிறதல்லவா?
ஓ! அதை அடிக்கடி பார்த்துப் பார்த்துத் தானே நம்பிக்கை பெறுகிறேன்...
மன்னர் தந்த மோதிரத்தைக் காட்டினால் அவர் உடனே உன்னை அடையாளம் தெரிந்து கொள்வார். துர்வாஸர் அப்படித்தானே சொல்லியிருக்கிறார்!
போய் வருகிறேன்...
கணவன் வீட்டில் உத்தமி என்று பெயர் எடுக்க வேண்டும்!
ஆறுகளைக் கடந்தும் சாலைகளில் நடந்தும் ஹஸ்தினாபுரத்தை அடைந்தனர்.
அடேயப்பா! எவ்வளவு பெரிய நகரம்!
இதன் அரசி நீ தான்!
துஷ்யந்தன் அரசவையில்...
பிரபோ! கண்வ மகரிஷியின் ஆச்ரமத்திலிருந்து சிலர் வந்துள்ளனர்...
உடனே அழைத்து வா....


அரசே! மங்களம் பெருகட்டும்!
வரவேணும்! கண்வ மகரிஷி எனக்கு என்ன கட்டளையிட்டிருக்கிறார்?
'என் மகளை நீ மணந்து கொண்டதில் மகிழ்ச்சி. சகுந்தலையை ஏற்றுக்கொள்' என்று உங்களுக்குச் செய்தி அனுப்பினார்...
இவள் என் மனைவியா...? இது என்ன கதை?
மன்னவா! நீங்கள் இருவரும் காந்தர்வ விவாகம் செய்து கொண்டீர்கள்... உங்கள் குழந்தையைச் சுமந்திருக்கிறாள் சகுந்தலை...
பேஷ்! நல்ல கற்பனை!
கௌதமி சகுந்தலையின் முகத்திரையை விலக்கினாள்...
அரசன் உன் முகத்தைப் பார்க்கட்டும்.
நான் இவளைப் பார்த்ததேயில்லை!


துர்வாசரின் சாபத்தினால்தான் துஷ்யந்தன் இவ்வாறு பேசுகிறான் என்று உணர்ந்த சகுந்தலை....
மோதிரவிரலைத் துஷ்யந்தனுக்குக் காட்ட எண்ணிய சகுந்தலை திடுக்கிட்டாள்!
ஐயோ! மோதிரத்தைக் காணவில்லையே..!
நீங்கள் எனக்களித்த கணையாழியைப் பார்த்தால் உங்களுக்கு உடனே எல்லாம் நினைவுக்கு வரும்... இதோ....
பொய்கள் சொல்வதில் இந்தப் பெண்ணுக்கு உள்ள திறமை கண்டு அதிசயிக்கிறேன்!
நீதி நெறி தவறாத மாமன்னர் என்று தங்களை நம்பி நான் மோசம் போனேன்!
சகுந்தலை! நீ ஒழுக்கமுடையவளானால் உன் பதியின் வீட்டில் அடிமையாகவாவது இருக்க வேண்டும். நாங்கள் போகிறோம்!
ஏன் எனக்கு இத்தனை சோதனைகள்? பூமி! நீ வெடித்து என்னை விழுங்கி விடக் கூடாதா?
சகுந்தலையின் துயரைப் பொறுக்க முடியாது, தாய் மேனகை மயங்கிச் சாய்ந்த மகளைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாய் மறைந்தாள்...
ஆ!
இதென்ன அதிசயம்!


சகுந்தலையை மாரீச முனிவரின் ஆசிரமத்தில் விட்டுச் சென்றாள் மேனகை.
கண்மணி! போய் வருகிறேன். உன் கற்பும் உன் தந்தையின் தவமும் உன்னைக் காக்கும்!
ஹஸ்தினாபுரத்தில் ஒரு வட்டிக் கடையில்...
சாமி! இந்த மோதிரம் என்ன விலை போகும் பார்த்துச் சொல்லுங்க...
அடடே! அரசர் முத்திரை பதித்த மோதிரம்! இது உனக்கு எப்படி கிடைத்தது? நிஜத்தைச் சொல்!
நான் செம்படவன், சாமி! தூண்டில் போட்டு மீன் பிடிச்சு அரிஞ்சேன். அதன் வயித்தில் இருந்துச்சு...
வட்டிக்கடைக்காரர் மோதிரத்தையும் செம்படவனையும் ஊர்க்காவல் தலைவனிடம் ஒப்படைக்க....
நான் திருடனில்லீங்க...
அரசனிடம் மோதிரத்தைக் காட்டி உத்தரவு பெற்று வருகிறேன். அதுவரை சிறை வாசம்தான் உனக்கு!
சகுந்தலை ஆகாயமார்க்கமாக மறைந்ததை எண்ணி துஷ்யந்தன் அதிசயித்து வந்தான். அன்று ஊர்க்காவல் தலைவனிடம் மோதிரத்தை வாங்கிப் பார்த்தவன்...
சகுந்தலை! சகுந்தலை! எப்பேர்ப்பட்ட குற்றம் செய்து உனக்கு ஆறாத் துயரத்தை ஏற்படுத்தி விட்டேன்!



துஷ்யந்தனுக்கு நடந்ததெல்லாம் நினைவுக்கு வர...
ஊர்க்காவல் தலைவரே! நன்றி! இது உங்களுக்கு என் பரிசு! இது அந்தச் செம்படவனுக்கு என் அன்பளிப்பு!
நினைவிலிருந்து தான் வரைந்த சகுந்தலை ஓவியத்தைப் பார்த்து துஷ்யந்தன் துக்கத்தில் ஆழ்ந்து போக, விதூஷகன் ஆறுதலாக...
சகுந்தலையை நான் வஞ்சித்து விட்டேன். ஏன் இப்படி நடந்து கொண்டேன் என்றே புரியவில்லை!
சகுந்தலை இங்கு வரும் வழியில் ஆற்றில் இறங்கி குளித்திருப்பாள். மோதிரம் நழுவியிருக்கும். அதை ஒரு மீன் விழுங்கியிருக்கும்....
வருந்தாதீர்கள்! மீண்டும் சகுந்தலையை நிச்சயம் காண்பீர்கள்.
ஆண்டுகள் பல சென்றன. இந்திரனின் சாரதியான மாதலி துஷ்யந்தனிடம் தூது வந்தான்...
அரசே! காலநேமியுடன் யுத்தம் செய்து தேவர்களின் வெற்றிக்கு உதவ வேண்டும் என்று தேவர் தலைவன் தங்களைக் கேட்டுக் கொள்கிறார்.
இதோ புறப்படுகிறேன்... நொந்துபோன என் உள்ளம் துயரைச் சற்றேனும் மறக்க இந்த யுத்தம் உதவும்.


காலநேமியை எதிர்த்து மாபெரும் வெற்றி பெற்ற துஷ்யந்தனைப் பெருமைப் படுத்தினான் இந்திரன்.
உங்கள் ஆண்மையும் வீரமும் வாழ்க!
புஷ்பக விமானத்தில் ஹஸ்தினாபுரம் திரும்பும் போது ரதசாரதி மாதலி...
கீழே தெரிவது மரீச் முனிவர் ஆசிரமம்...
பெரியோரை வணங்காமல் போகக்கூடாது. விமானத்தை இறக்குங்கள்.
ஆசிரம எல்லையில் சிங்கக் குட்டிகளுடன் விளையாடும் பாலகனைப் பார்த்தான் துஷ்யந்தன். ஏதோ ஆசை பொங்கியது...
சிங்கக்குட்டி! வாயைத் திற! உன் பற்களை எண்ணுகிறேன்!
ரிஷி குமாரனே! மிருகங்களைத் துன்புறுத்தலாமா? விட்டு விடு!
நான் ரிஷி குமாரனில்லை, புருவம்சத்தில் பிறந்தவன்; பெயர் பரதன்! என் தந்தை யார் தெரியுமா? துஷ்யந்த மகாராஜா!
அப்படியா! என்னை உன் அம்மாவிடம் அழைத்துப் போகிறாயா?
ஓ!
சகுந்தலையும் துஷ்யந்தனும் மீண்டும் ஒன்றுசேர்ந்து மகிழ்ந்தார்கள்...
சகுந்தலை என்னை மன்னித்து விடு! இதோ மோதிரம்! தீவினை நம்மைப் பிரித்தது.
பரதன் பெரும் புகழோடு ஆண்டதால் நமது நாட்டுக்குப் "பரத கண்டம்" என்றே பெயர் ஏற்பட்டது!

# கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

**இச்சங்கத்தில் யார் சேரலாம்?**

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

**உறுப்பினர் ஆனதும்.....**

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

**பயன் என்ன?**

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

**உறுப்பினராகக் கட்டணம் உண்டா?**

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

---

**கோகுலம் சிறுவர் சங்கம்**


உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து




ஓர் ஊரில் தந்தையும் மகனும் இருந்தார்கள். தந்தை பேராசைக்காரர். அவரைவிட மிகுந்த பேராசைக்காரன் அவர் மகன்.

ஒரு முறை தந்தையும் மகனும் ஆற்றின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது ஆற்றில் கம்பளி மூட்டை போல ஒன்று மிதந்து செல்வதைத் தந்தையும் மகனும் கண்டார்கள்.

''அப்பா, ஆற்றில் கம்பளி மூட்டை ஒன்று மிதக்கிறது'' என்றான் மகன்.

''ஆற்றில் இறங்கி அதைக் கரைக்கு எடுத்து வா! நல்ல விலைக்கு விற்கலாம்!'' என்றார் தந்தை.

''ஆகட்டும் அப்பா!'' என்று சொல்லி, மைந்தன் ஆற்றில் குதித்துக் கம்பளி மூட்டையைப் பிடித்து இழுத்தான்.


கம்பளி மூட்டையோ, மகனை ஆற்றுக்கு இழுத்தது. மகன் திணறினான். வேண்டிய மட்டும் முயன்று பார்த்தான். கம்பளி மூட்டை அவனை விடவில்லை.

நிலைமையைக் கண்டு அவன் தந்தை பதறினார். ''மகனே, கம்பளி மூட்டையை விட்டு விட்டுக் கரைக்கு வா'' என்று கூறினார்.

''அப்பா, மூட்டையை விட்டுவிடத்தான் பார்க்கிறேன். ஆயினும் கம்பளி மூட்டை என்னை விட மாட்டேனென்கிறதே! என்ன செய்வேன்?'' என்று கதறினான் மைந்தன்.

அந்த மைந்தனைப் பற்றி இழுத்தது கம்பளி மூட்டை அல்ல; அது ஒரு கரடி! பேராசைப்பட்ட தந்தையும் மகனும் அதைக் கம்பளி மூட்டை என்று கருதிவிட்டார்கள்! முடிவு? கரடியிடம் அகப்பட்ட மகன் திரும்பி வரவே இல்லை!

**உப்பூர் D. அனந்தராமன்**




சர்க்கஸ் கம்பெனி ஒன்றினிலே
சாப்பிடும் வித்தை காட்டிடவே,
தக்கவர் தேவை என்று,தினத்
தாள்களில்விளம்பரம் வந்ததுவே.

தொந்தி பருத்த ஒருமனிதன்
வந்தான், வேலையில் சேர்ந்திடவே.
வந்தவ னிடத்தில் முதலாளி,
வழக்கம் போலக் கூறினரே:

"இரண்டு காட்சிகள் தினம்உண்டு
இவற்றில் ஒவ்வொரு காட்சியிலும்
விரும்பி நூறு இட்டலிகள்
விழுங்கும் வித்தையைச் செய்வாயா?

சிவராத் திரியில், வைகுண்ட
ஏகா தசியில், சிறப்பாக
இவற்றுடன் மேலும் ஒருகாட்சி
இருக்கும். மொத்தம் மூன்றாட்டம்.

இந்தக் காட்சிகள் அனைத்திலுமே
இட்டலி நூறு நூறாகத்
தின்று காட்டிட வேண்டும்நீ.
செய்வா யா?" எனக் கேட்டனரே.

"எத்தனை காட்சிகள் நடந்தாலும்,
இட்டலி தின்னும் வித்தைதனை
அத்தனை -பேரும் மெச்சிடவே
அற்புத மாகச் செய்திடுவேன்.

ஆயினும் ஒன்று கேட்கின்றேன்.
ஆட்டம் இரண்டின் நடுவினிலே,
போய்வரு வேன்என் வீட்டிற்கு
போதும் அரைமணி நேரம்" என்றான்.

"என்ன செய்வாய் அப்பொழுது?"
என்றே கேட்டார் முதலாளி.
"சென்றதும் மாலைச் சிற்றுண்டி
தின்று திரும்புவேன்!" எனஉரைத்
தான்!

# கடவுளைக் கண்டவர்கள்!



- தேவி. நாச்சியப்பன்

இரவு நேரம். அமைச்சர் கன்னத்தில் கைவைத்தபடி ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தார். சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தார். ''இப்படிச் சொன்னால்....'' என்று நினைத்தார். மறுவினாடியே, 'சேச்சே அது சரியில்லை. இப்படிச் சொல்லலாம்....' என்று எண்ணினார். அதுவும், அவருக்குத் திருப்தியாகத் தோன்றவில்லை. இப்படியே இரவு முழுவதும் கழித்தார். மறுநாள் பொழுது விடிந்துவிட்டது. இன்னும் அவருடைய கவலை தீரவில்லை. 'இன்னும் சிறிது நேரத்தில் அரசவைக்குப் போக வேண்டுமே' என்று கவலைப்பட்டார்.

''தந்தையே, ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? நான் தெரிந்து கொள்ளலாமா?'' — இப்படிக் கேட்டது அமைச்சரின் மகனாகிய அருண்மொழித் தேவன்தான்.

''நேற்று நம் அரசர் அனபாயச் சோழர் என்னைப் பார்த்து, 'மலையினும் பெரியது எது? உலகினும் பெரியது எது? கடலினும் பெரியது எது?' என்று மூன்று கேள்விகளைக் கேட்டார். நான் யோசிக்கத்தொடங்கினேன். உடனே விடை கூற முடியவில்லை.

''இவ்வினாக்களுக்கு நாளைக் காலை சபை கூடும்போது பதில் சொல்லுங்கள்'' என்று கூறினார் அரசர். 'நானும் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். விடை தெரியவில்லை. இன்று அரசவையில் இவற்றிற்குப் பதில் கூற வேண்டும். என்ன பதில் கூறுவதென்றே தெரியாததால் கவலையாக இருக்கிறேன்'' என்றார்.

அருண்மொழி, தன் தந்தையாரிடம், ''ப்பூ, இதற்குத்தான் இவ்வளவு வருத்தப்பட்டீர்களா? இந்த மூன்று கேள்விகளுக்கும் அருமையான விடைகள் திருக்குறளில் உள்ளனவே!'' என்றதும், ''என்ன! திருக்குறளிலே இந்த மூன்று கேள்விகளுக்கும் விடைகள் இருக்கின்றனவா!'' என்று வியப்போடு கேட்டார் அமைச்சர்.

''ஆம் தந்தையே, முதல் கேள்வி என்ன? மலையைவிடப் பெரியது எது? என்பதுதானே?

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்

மலையினும் மாணப் பெரிது."

"சரி, அடுத்த கேள்விக்கு விடை? உலகத்தை விடப் பெரியது எது?"

"இதோ அதற்கும் சரியான விடை —

காலத்தினாற்செய்தநன்றிசிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

"ஆஹா! சரியான விடை! சரி, மூன்றாவது கேள்வியான 'கடலினும் பெரியது எது?' என்பதற்கு....?"

"கடலினும் பெரியது, பயனை எதிர் பார்க்காமல் செய்யும் உதவிதான். திருவள்ளுவர்,

பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது

என்று கூறினார்."

இந்த விடைகளைக் கேட்ட தந்தைக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. கேள்விகளுக்குத் தக்க விடைகள் கிடைத்துவிட்டனவே என்று ஒரு பக்கம் மகிழ்ச்சி. தம் மகன் சிறந்த அறிவாளியாக இருக்கிறானே என்று மற்றொரு பக்கம் மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியுடன் அவர் அரசவை சென்றார். மன்னனின் மூன்று கேள்விகளுக்கும் பதில் கூறினார். மன்னர் மிக மகிழ்ந்து அமைச்சரைப் பாராட்டினார். உடனே அமைச்சர், "இக் கேள்விகளுக்கான பதில்களைக் கண்டு கூறியவன் என் மகன்தான்" என்று மன்னனிடம் கூறினார். மன்னர் அதைக் கேட்டு மிக ஆச்சரியப்பட்டார். உடனே அருண்மொழியை அரசவைக்கு அழைத்து வரச் சொன்னார். பரிசுப் பொருள்களை அளித்தார். பிற்காலத்தில் முதல் அமைச்சர் பதவியையும் அவருக்கே கொடுத்தார்.

அருண்மொழியின் சிவ பக்தியையும் கவிபாடும் திறமையையும் பழந் தமிழ் நூல்களை ஊன்றிப் படிக்கும் திறமையையும் கண்ட மன்னர், அவரையே ஒரு புராணம் இயற்றும்படி கேட்டுக் கொண்டார். அருண்மொழித் தேவரும் அவ்வாறே சிதம்பரம் சென்று நடராசப் பெருமானை வழிபட்டார். அப்போது 'உலகெலாம்' என்று ஆண்டவனே அடியெடுத்துக் கொடுத்தார். அதையே முதல் அடியாக வைத்து, சிவனடியார்களாகிய நாயன்மார்களைப் பற்றிப் பக்தி ததும்ப ஒரு புராணத்தை இயற்றினார். அதற்கு'த்திருத்தொண்டர் புராணம்' என்று பெயர் வைத்தார். அப்படியென்றால், அந்த அருண்மொழி யாரென்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! ஆம், அவர்தான் சேக்கிழார்!


அனபாயச் சோழன் அளவில்லா மகிழ்ச்சி அடைந்து சேக்கிழாரையும், திருத் தொண்டர் புராணத்தையும் பட்டத்து யானை மேல் ஏற்றி அதில் அவரும் ஏறிக் கொண்டு இரு கைகளாலும் சேக்கிழாருக்கு வெண் சாமரை வீசிக் கொண்டு வலம் வந்தார்.

சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தை 'பெரிய புராணம்' என்றும் அழைக்கிறோம். இந்நூலுக்கு ஒரு பெரும் சிறப்புண்டு. அது என்ன தெரியுமா? இராமாயணம், மகாபாரதம் எல்லாம் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தவை. ஆனால், பெரிய புராணமோ தமிழில் எழுதப்பட்டு, பிறகு வடமொழியில் பெயர்க்கப்பட்டது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பெரிய புராணத்தில் சேக்கிழார் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றிப் பாடியுள்ளார். நாயன்மார்கள் அனைவருமே இறைவன் திருவருளை முழுமையாகப் பெற்றவர்கள். 'கடவுளைக் கண்டவர்கள்' என்னும் தலைப்பில் சில நாயன்மார்களின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளை அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து காணலாமா?

"இப்ப பள்ளிக்கூடத்துக்கு வர்றதை நிறுத்திட்டு அப்புறமா எப்படிடா படிக்க முடியும்?"

"முதியோர் பள்ளியில் சேர்ந்து படிச்சுக்கலாமே!" — சிவம்



# பிருந்தாவனக் கதையரங்கம்

## வெளி வேஷங்கள்



க. செந்தில்குமார் (279)

அந்தப் பெரிய பங்களாவின் முன் கார்களும், ஸ்கூட்டர்களும் வந்து நின்ற வண்ணமிருந்தன. பெரிய பெரிய அதிகாரிகளும், பிரமுகர்களும் தங்களது குழந்தைகளுடன் பங்களாவிற்குள் நுழைந்தனர். பங்களா முழுவதையும் வண்ண வண்ண விளக்குகளும், பலூன்களும், தோரணங்களும் அலங்கரித்தன. நுழைவாயிலில் 'குழந்தைகள் தின நல்வரவு' என்ற வாசகம் ஜிகினாவுடன் பளபளத்தது!

இவ்வாறு பங்களா கலகலப்பாயிருந்தது. பங்களாவின் வெளியே ஒரு சிறுமி நின்று கொண்டு இருந்தாள். அவளது ஆடைகள் பல இடங்களில் கிழிந்திருந்தன. தலைமுடி எண்ணெய் இன்றி காற்றில் பறந்தது. பார்க்கவேபரிதாபமாகஇருந்தஅந்தச் சிறுமி, விழாவிற்கு வருபவர்களிடம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தாள். பசி அவள் காதை அடைத்தது. வருபவர்கள் அச்சிறுமியை அருவருப்புடன் பார்த்தனர். விழாவிற்குப் பகட்டாக வந்திருந்த சிறுமிகள், அவளைப் பார்த்து முகம் சுளித்தனர். அந்தச் சிறுமிக்கு அன்று கொண்டாடப்படும் விழா என்னவென்றே தெரியாது. அவளுக்குப் பசி ஒன்றே பிரதானமாயிருந்தது.

அந்தச் சமயத்தில் உள்ளிருந்து வந்த பிரமுகர் ஒருவர், அச்சிறுமியைப் பார்த்து முகத்தைச் சுளித்தார். தம் அருகில் நின்றிருந்த வேலையாளிடம் ஏதோ கூறினார். அந்த வேலையாள் வேகமாய் அச்சிறுமியை நோக்கி வந்தான். தன் கையில் வைத்திருந்த தடியினால் அச்சிறுமியைத் தள்ளினான். சிறுமி அப்படியே மணலில் சாய்ந்தாள். புழுதி பறந்தது. 'அம்மா' என்ற மெல்லிய கூக்குரல் அவளிடமிருந்து வெளிப்பட்டது. அவள் ஏக்கத்துடன் வேலைக்காரனைப் பார்த்தாள்.

வேலைக்காரனோ இரக்கமின்றி, ''எவ்வளவுபெரிய ஆபீசருங்கள்ளாம் வராங்க, நீ இங்க வந்து பிச்சை எடுக்கிறியே, போ அந்தண்டை'' எனக் கத்தினான்.

சிறுமி தள்ளாடியபடியே எழுந்தாள். கடந்த இரண்டு நாட்களாகச் சாப்பிடாததால் சிறுமிக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. மெதுவாக நடந்து 'காம்பவுண்ட்' அற்ற அந்தப் பங்களாவின் கொல்லைப்புறத்திற்கு வந்தாள் சிறுமி. கொல்லையில் விருந்திற்காகப் பலகாரங்கள் பெருமளவில் தயாராகிக் கொண்டிருந்தன. அவற்றின் வாசனை மூக்கைத் துளைத்தது. சிறுமியின் நாவில் நீர் சுரந்தது. சிறுமி அவற்றை ஏக்கத்துடன் பார்த்தாள்.

அச்சிறுமியை வேலைக்காரன் ஒருவன் பார்த்துவிட்டான். ''ஏ, பிச்சைக்காரக் குட்டி, என்ன இப்படிப் பார்க்கிறாய்? நாங்க அசந்த சமயம் பார்த்து திருடிக்கிட்டு ஓடலாம்னு நினைக்கிறியா?'' என்று கூறி, அவளை விரட்

டினான்.

''ஐயா, ஒரே ஒரு வடை. ரொம்பப் பசியாயிருக்கு'' என்று அவள் கெஞ்சினாள்.

''நீ வாயாலே சொன்னால் போக மாட்டாய். இதோ...'' என்று கையை ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான்.

சிறுமி கத்தக் கூட பலம் இன்றி, அங்கேயே உட்கார்ந்து விட்டாள். சிறிது நேரத்தில், அப்படியே மயங்கித் தரையில் விழுந்தாள்.

பங்களாவின் உள்ளே வண்ண விளக்கு ஒளியில் 'குழந்தைகள் தின விழா' கோலாகலமாக ஆரம்பமாகியது. அந்த ஏழைச் சிறுமியை முதலில் விரட்டச் சொன்ன அதே பிரமுகர் குழந்தைகளைக் கையமர்த்திவிட்டுப் பேச ஆரம்பித்தார்.

''குழந்தைகளே, நேரு பிறந்த இந்நாள்தான் குழந்தைகள் தினமாகும். நேரு குழந்தைகள் மீது அளவற்ற அன்பு கொண்டவர். குழந்தைகளைக் கண்டால், அவரும் ஒரு குழந்தையாகவே மாறிக் குதூகலிப்பவர். நாமும் அவரது வழியைப் பின்பற்றுவோம். குழந்தைகளே இந்நாட்டின் செல்வங்கள். நேருவைப் போல சாதி, சமயம், இனம், மொழி, நாடு என்ற வேற்றுமை பாராமல் எல்லாக் குழந்தைகளிடமும் அன்பு காட்டுவோம். ஏழை, எளிய குழந்தைகளுக்கு உதவுவோம். அவர்கள் வளமாக வாழ வழி வகுப்போம். நமது பாரதத்தின் பெருமையை எங்கும் பரவச் செய்வோம். மேலும்...''

அந்தச் சிறுமி நைந்த துணியெனச் சாலை ஓரத்தில் கிடந்தாள். இருள் எங்கும் ஆதிக்கம் செய்யத் தொடங்கியது. சிறுமியை ஒரு நாய் முகர்ந்து பார்த்துவிட்டு ஓடியது. இரவு வேளையின் ஈரமான காற்று அவளது உடலைத் தழுவிக் கொண்டு சென்றது. சிறுமி உயிரற்ற ஜடம்போல உணர்வற்றுக் கிடந்தாள். பங்களாவில் குழந்தைகள் தினக் கோலாகலங்கள் உச்சஸ்தாயியில் இருந்தன.

ஆழ்ந்த இரவு —
குளிர ஆரம்பித்தது.




இரவு மணி ஒன்பது.... வானம் இருண்டு... மின்னல் பளிச்... பளிச் என்று கண்ணைப் பறித்தது. இடி முழக்கம் காதைத் துளைத்தது. மழை தேவன் பூமா தேவியை முத்தமிட்டான்...

கொட்டும் மழையில் நனைந்து கொண்டு ஓடி வருகிறான் கண்ணன்... மனிதர்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில்... இருளின் கொடுமை, மழையின் வேகம் இவைகளின் பிடியிலிருந்து தப்புவதற்கு, கண்ணன் ஓடிய வண்ணமாக, ''இறைவா! நான் ஒதுங்குவதற்கு ஓர் இடத்தைக் காட்ட மாட்டாயா?'' என்று மனத்திற்குள் வேண்டினான்.

'கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒளியில்... சற்று தூரத்தில் மண்டபம் ஒன்று இருப்பதைக் கண்டான். மகிழ்ச்சி கொண்டான்.

வேகமாக ஓடி மண்டபத்தை அடைந்தான்... தான் அணிந்திருந்த ஆடைகள் நனைந்து தண்ணீர் சொட்டியது.

சட்டையைக் கழற்றிப் பிழிந்து உடலைத் துடைத்துக் கொண்டு, ''இறைவா, இந்த மழையில் எப்படி வீடு போய்ச் சேருவேன்?'' என்று வேதனைப்பட்டான்.

அந்த நேரத்தில் மண்டபத்தினுள் இரண்டு பேர் பேசிக் கொண்டு இருக்கும் சப்தம் கண்ணனின் காதில் விழுந்தது... உடனே கண்ணனின் செவி, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று உற்றுக் கேட்டது.

"டேய்...! மாயாண்டி... நான் தாண்டா... அந்த வீட்டுக்காரனை முதலில் அடித்தேன்..." என்ற வார்த்தை கண்ணனின் காதில் விழுந்ததும்... துடித்தான்... மனம் அலற வேண்டுமென்று எண்ணியது. ஆனால் அடக்கிக் கொண்டான்.

"நீ முதலில் அடித்தாய்.... உண்மை தான். அதற்காக உனக்கு அதிகப் பங்கு வேணுமா...? நான் கத்தியால் குத்தியதால்தானே அவன் இறந்தான்?" என அடுத்தவன் கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட கண்ணன், 'இந்தக் கொடியவர்களின் கையில் மாட்டிக் கொண்டால் நம்மையும் கொன்று விடுவார்கள்' என்று எண்ணி...... வெளியே பார்த்தான், மழை விட்டபாடில்லை...

"மழைக்குப் பயந்தால், உயிர் நமக்கு இல்லை" என மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அந்தமண்டபத்தை விட்டு தன் வீட்டை நோக்கிக் கண்ணன் ஓடினான்.

சற்றுத் தூரத்தில் ஒரு கார் இரைந்து கொண்டு வருவதைக் கண்டான்... மனத்தைத் தேற்றிக் கொண்டு, 'இந்தக் காரை நிறுத்தி, அதில் ஏறி, வீடு போய்விட வேண்டும்' என எண்ணினான். அதற்குள் கார் அவன் முன் வந்தது.

கையை நீட்டி நிறுத்தச் சொன்னான்; கார் நின்றது.

"யாரடா காரை நிறுத்தியது?" என்ற உறுமல் சத்தம் உள்ளேயிருந்து கேட்டது.

கண்ணன் நடுங்கினான். காரணம் அது ஒரு போலீஸ் வேன்...

போலீஸ்காரர்களைக் கண்டவுடன் ஓர் உணர்ச்சி உண்டானது... 'நாம் கண்ட காட்சியை இவர்களிடம் சொல்லி, இந்தக் குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுக்க வேண்டும்' என்று எண்ணினான்.

"ஐயா" என்று போலீஸ்காரர்களை அழைத்தான்.

"என்ன?" என்று கேட்டார் அதிலிருந்த இன்ஸ்பெக்டர்.


"ஐயா, அதோ இருக்கும் பாழ் மண்டபத்தில் இரண்டு கொள்ளையர்கள் இருக்கிறார்கள்" என்று கண்ணன் காவலர்களிடம் சொன்னான்.

இந்த வார்த்தையைக் கேட்ட காவலர்கள், உஷாரானார்கள். கண்ணனைக் காரில் ஏற்றிக் கொண்டு மண்டபத்தை அடைந்தார்கள்.

காரிலிருந்து இறங்கிய காவலர்கள் மண்டபத்தினுள் சென்று பார்வையிட்டனர். இரண்டு முரட்டு உருவங்கள் இருப்பதைக் கண்டு உடனே மடக்கிப் பிடித்தனர்.

அப்போதுதான் தெரிந்தது இவ்வளவு நாளாக அவர்கள் தேடிவந்த கொலைகாரர்கள்தான் அவர்கள் என்பது. போலீஸார் கண்ணனைப் பாராட்டினார்கள்.

கொலைகாரர்கள் கண்ணனை ஆச்சரியத்துடன் பார்த்தனர், 'ஆ! காட்டிக் கொடுத்தவன் நீதானா?" என்று.






# இளம்பிள்ளை வாதம்

டாக்டர்: கு. கணேசன்

டாக்டர் பக்கம்

பாடிப் பறந்து திரியும் பறவைகளின் சிறகுகளை முறித்துப் போடுவதைப் போல, ஓடி ஆடித் திரியும் பச்சிளங்குழந்தைகளின் கை, கால்களை முடக்கி, அவர்களின் வாழ்க்கையையே முடமாக்கிவிடக் கூடிய கொடுமையான நோய் — இளம் பிள்ளை வாதம்.

'போலியோமைலேட்டிஸ்' (Poliomyelitis) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்நோய், 'போலியோ வைரஸ்' எனப்படும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்க் கிருமிகளால் வரக் கூடியது.

சுமார் ஒரு வயதிலிருந்து ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கக் கூடிய இந்நோய், எல்லாக் கால கட்டங்களிலும் குழந்தைகளைத் தாக்கக்கூடியதுதான் என்றாலும், தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் ஜூன் மாதத்திற்கும் செப்டம்பர் மாதத்திற்கும் இடைப்பட்ட மாதங்களில் அதிக அளவில் பரவுவதாக மருத்துவ ஆராய்ச்சிக் குறிப்பொன்று கூறுகிறது.

இந்த இளம்பிள்ளை வாத வைரஸ் கிருமிகள் வழக்கம் போல சுகாதாரமற்ற, அசுத்தம் நிறைந்த காற்று மண்டலத்தில்தான் தோன்றுகின்றன. நோயாளியின் எச்சில், தொண்டைச் சளி, மூக்குச் சளி, மலம் ஆகியவற்றில் மில்லியன் கணக்கில் வசிக்கின்றன.

நாம் சாப்பிடும் உணவு மூலமாகவும், குடிநீர் வாயிலாகவும், ஈ, கொசு போன்றவற்றாலும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மிக எளிதில் இக்கிருமிகள் பரவிவிடக் கூடியவை.

வாய் வழியாக உணவுப் பாதைக்குள் நுழையும் இக்கிருமிகள், சிறுகுடலின் உட்சுவரில் பன்மடங்கு பெருகி, நிணநீர் ஓட்டம் மற்றும் இரத்தத்தின் வழியாக மத்திய நரம்பு மண்டலத்தைச் சென்றடைகின்றன. அங்கு கை கால்களின் தசை இயக்கத்திற்கு இன்றியமையாததாகக் கருதப்படும் தண்டுவடத்தைப் பாதித்து அதனைச் செயலிழக்கச் செய்கின்றன.

இதனால் பாதிக்கப்படும் நோயாளியின் கை, கால்களின் தசைகள் சரிவர இயங்காமல் ஊனமாகிப்போகின்றன. அது மட்டுமல்லாமல் கை, கால்களுக்கு நரம்புகளின் தூண்டுதலும் கிடைக்காமல் வாதம் உண்டாகிறது. அதோடு கை, கால்களின் வளர்ச்சியும் குன்றிவிடுகிறது.

ஆக, ஓடித்திரிந்து விளையாட வேண்டிய குழந்தை முடமாகி மூலையில் உட்கார்ந்து கொள்கிறது!

பொதுவாக, இளம்பிள்ளை வாத நோய் எந்த மாதிரியான குழந்தைக

ளுக்கு வரும் என்று நிச்சயமாகக் கூற முடியாது என்றாலும், முறையாகத் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ளாத குழந்தைகளுக்கு இந்நோய் வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை மட்டும் உறுதியுடன் கூறலாம்.

இந்நோயை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வது எப்படி என்று தானே கேட்கிறீர்கள்?

சொல்கிறேன் —

இளம்பிள்ளை வாதம் குழந்தைகளை, திடீரென்று தாக்கக் கூடிய கொடுமையான நோய். டாக்டர்களுக்கே கூட ஆரம்பத்தில் இந்நோயை இனம் கண்டு கொள்வது சிரமமாயிருக்கும். காரணம் என்னவென்றால், இளம்பிள்ளைவாத நோயின் ஆரம்பம் சாதாரண ஜலதோஷம் மாதிரிதான் இருக்கும். காய்ச்சல், தலைவலி, வாந்தி, முதுகில் வலி, கழுத்தைத் திருப்ப இயலாதபடிக்குக் கழுத்தில் வலி, தொண்டை வலி என்று முதல் இரண்டு நாட்களுக்குத் தொந்தரவு செய்யும். மூன்றாம் நாள் ஒரு கையிலோ, காலிலோ அல்லது இரண்டிலுமோ தாங்க முடியாத அளவுக்கு வலி எடுக்கும். இச்சமயத்தில் மருத்துவரை அணுகி நோயைக் கண்டறிந்து விட்டால் கவலை இல்லை. இல்லையேல், நான்காம் நாள் திடீரென்று கையோ, காலோ அல்லது இரண்டும் சேர்ந்தோ செயலிழந்து, வாதம் வந்துவிடும்! குழந்தைகளுக்கு அநேகம் பேருக்கு இந்நோயால் கால்கள்தான் பாதிக்கப் படுகின்றன.

இளம்பிள்ளை வாதம் குழந்தைகளின் கைகால்களை முழுமையாகப் பாதித்து விட்டால், பூரணமாகக் குணப்படுத்திவிட முடியும் என்று சொல்வதற்கில்லை. சிலருக்கு வைத்திய முறைகளினால் நல்ல பலன் கிடைக்கலாம்; பலருக்கு அது கிட்டாமல் போகலாம். பாதிக்கப்பட்ட கால்களில் வாத நோய் நிலையாகவே சிலருக்கு இருந்து விடும். கால் தசைகள் சூம்பிவிடக் கூடும். உடம்பின் மற்ற உறுப்புகள் வயதிற்கேற்ப வளர்ச்சி பெற்றாலும் வாத நோய் வந்த கையோ காலோ வளர்ச்சி பெறாமல் தோற்றமளிக்கலாம். இவையெல்லாம் இந்நோய்க்கே உரித்தான வேதனை தரக் கூடிய விஷயங்கள்.

"சரி டாக்டர், இளம்பிள்ளை வாதத்திற்கு வைத்தியமே கிடையாதா?" என்று நீங்கள் கேட்பது எனக்குக் கேட்கிறது; வைத்தியம் இருக்கிறது. அதையும் கொஞ்சம் சொல்கிறேன் —

— நோய் வந்த குழந்தையைத் தனிமைப்படுத்தி, பூரண ஓய்வு தருகிறார்கள்.

— காய்ச்சல், மற்றும் தசை வலிகளுக்கு வலி நிவாரண மாத்திரைகளையும், சில ஆன்டிபயாடிக் மருந்துகளையும் சேர்த்துத் தருகிறார்கள்.

— பாதிக்கப்பட்ட கை கால்களில் வெந்நீர் ஒத்தடம் தருகிறார்கள். இம்முறையினால் வலி குறைவதோடு அப்பகுதிகளில் இரத்த ஓட்டம் சீரான முறையில் இருக்க உதவுகிறது.

— இளநீர், குளூகோஸ் கரைத்த தண்ணீர், பழச்சாறுகள், பால் என்று அதிகமாக நீராகாரங்களையே உணவாகத் தருகிறார்கள்.

— தசைகளில் வலி குறைந்த பின்னர், அவற்றிற்கு முறையான பயிற்சி தருகிறார்கள். இதுதான் இளம்பிள்ளை வாத நோய்க்கு முக்கியமான வைத்திய முறை. தினமும் குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்குப் பாதிக்கப்பட்ட கை, கால் தசைகளைத் தடவிக்

சிறுவன்: ஏரியில் மூழ்கவிருந்த என்னை நீங்கதான் காப்பாத்துனீங்களாமே?

பெரியவர்: ஆமாம். அதுக்கு என்ன இப்ப?

சிறுவன்: என் சட்டைப் பையில் ஐம்பதுபைசா வச்சிருந்தேனே.. அது எங்கே சார்?

— கிரிஜா மாமி.



கொடுத்து, நீட்டி, மடக்கி, தசைகளின் இயக்கத்திற்கு வழி வகுக்கிறார்கள். இவ்வைத்திய முறைக்கு 'பிசியோ தெரபி' (Physiotherapy) என்று பெயர்.

— சிலருக்கு மின் அதிர்வு (Electrical Shock) மற்றும் வெப்ப மருத்துவம் (Heat Therapy) மூலம் நரம்புகளையும் தசைகளையும் தூண்டி அவற்றின் இயக்கத்திற்கு வழி செய்கிறார்கள்.

— இத்தனை வைத்திய முறைகளிலும் குணம் தெரியாத குழந்தைகளுக்கு செயற்கைக் காலணிகளை அணிவித்து எழுந்திருக்கவும், நடக்கவும், உட்காரவும் பயிற்சி தருகிறார்கள்.

''இந்த வேதனையெல்லாம் எதற்கு டாக்டர்? பேசாமல் இளம்பிள்ளை வாதம் வரவிடாமல் தடுக்க வழி இருந்தால் சொல்லுங்கள்; கடைப்பிடிக்கலாம்'' என்று சில புத்திசாலிக் குழந்தைகள் கேட்கிறார்களே...அவர்களுக்காக இந்தத் தடுப்பு முறைகள் —

இளம்பிள்ளை வாதம் வராமல் தடுப்பதற்காக 'சாபின்' என்ற விஞ்ஞானி ஒரு மருந்தைக் கண்டுபிடித்துள்ளார். அதைத்தான் இப்போது எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். நல்ல பலனையும் பெற்று வருகிறார்கள். அத்தடுப்பு மருந்தை எப்படிப் பயன்படுத்துவது? என்பதைச் சொல்லட்டுமா?

— குழந்தை பிறந்த மூன்றாவது மாதத்தில் 'போலியோ சொட்டு மருந்து' (Polio Drops) என்றழைக்கப்படும் இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தைக் கொடுக்கவேண்டும். பிறகு, சரியாக 30 நாட்கள் இடைவெளி விட்டு அதாவது நான்காவது மாதத்திலும் அதேமாதிரி இடைவெளியுடன் ஐந்து, ஆறு, ஏழு மாதங்களிலும் மீண்டும் அத்தடுப்பு மருந்தைக் கொடுக்க வேண்டும். பிறகு குழந்தைக்கு ஒன்றரை வயதிலும், ஐந்து வயதிலும் இதே தடுப்பு மருந்தைக் கொடுக்க வேண்டும். (பொதுவாக போலியோ சொட்டு மருந்தோடு, 'முத்தடுப்பு ஊசி' (Triple Antigen)யும் போடுவது வழக்கம்.)

— இம்மாதிரி முறையாகத் தடுப்பு



அவன் யார்?

''ரொம்ப நேரமா கவிட் காரத்தையே கேட்டு வாங்கித் தின்னுக்கிட்டிருக்காலே... அவன் உங்க பையனா சார்?''

''இல்லே.... கவி(ட்)காரப் புத்திரன்!''

— கிரிஜா மாமி.

மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி வந்துவிடுவதால், இளம்பிள்ளை வாத நோய் வருவதில்லை. எனவே, தடுப்பு மருந்தைப் பயன்படுத்தினால் பலன் நிச்சயம்.

— போலியோ வைரஸ் கிருமிகள் சளி, எச்சில், மலம் ஆகியவற்றின் மூலம் பரவுவதால் தெருக்களில் எச்சிலைத் துப்புவதையும், கண்ட இடங்களில் மூக்குச் சிந்துவதையும், பொது இடங்களில் மலம் கழிப்பதையும் தவிர்த்து, உங்கள் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்க வழி செய்ய வேண்டும். இதனால் நோய்க் கிருமிகள் வளர்வதற்கான சூழ்நிலை அமையாதல்லவா?

— உணவு தயாரிக்கும் போது சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதாலும், தயாரித்த உணவை ஈ, கொசு போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதாலும், உணவு மூலம் நோய்க் கிருமிகள் பரவுவதைத் தடுக்கலாம்.

— குழந்தைகளுக்குப் பெரும்பாலும் கையிலுள்ள அசுத்தங்கள் வாயிலாகவே நோய்க் கிருமிகள் உடலுக்குள் புகுந்து கொள்கின்றன. அதைத் தவிர்க்க அடிக்கடி கைவிரல்களையும் நகங்களையும் கழுவிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.


இம்மாதிரியான தடுப்பு முறைகளைக் கடைப்பிடித்து, தடுப்பு மருந்துகளை உபயோகித்து இளம்பிள்ளை வாத நோயினை அறவே அழித்துவிடலாம்.

# பிருந்தாவனக் கவியரங்கம்

## ஒட்டு ஒட்டுக் கேட்டதால்

ஒட்டு ஒட்டுக்
கேட்டதால் — தம்பி,
முயலின் காதும்
நீண்டதாம்.

எட்டி எட்டித்
தின்றதால் — தம்பி
ஒட்டைச்சிவிங்கி
உயர்ந்ததாம்.



கொட்டக் கொட்ட
விழித்ததால் — தம்பி
ஆந்தைக் கண்ணும்
பெருத்ததாம்.

கெட்ட பழக்கம்
இருந்திடில் — தம்பி
நாமும் அவைபோல்
மாறுவோம்.

— டி. எம். பர்வேஸ் (10,058), ஆம்பூர்.

## காட்டு மலைப்பயணம்

காட்டு மலைப்பயணம் சென்றோமே!
கவின்மிகு காட்சிகள் கண்டோமே!

பாதை அருகே பாறைதான்
பாதை அருகே கல்லுதான்
கல்லின் அருகே முள்ளுதான்
முள்ளினூடே முயலுதான்.



காட்டு மலைப்பயணம் சென்றோமே!
கவின்மிகு காட்சிகள் கண்டோமே!

பாறை மீது ஓடைதான்
ஓடை அருகே மரங்கள்தான்
மரத்தின் மேலே குயிலுதான்
குளிரில் நடுங்கும் மயிலுதான்.

காட்டு மலைப்பயணம் சென்றோமே!
கவின்மிகு காட்சிகள் கண்டோமே!
கண்டோமே — நாம் — கண்டோமே!"

— பி.வி. ராஜேந்திர சேதுபதி (14,272),
மேலூர்.

## நல்பாதை

கல்வி என்ற கடலை நோக்கிக்
கற்கச் சென்ற மாணவா,
நல்ல முத்தை எடுத்து வந்து
நாட்டுக் குதவி செய்திடு.

போர்க் களத்தில் சென்றே, எதிரி
புறத்தைக் காட்டி ஓடவே,
தீர மாகச் சண்டை செய்த
சிப்பாய், வருக, வருகவே.



துன்பம் என்ற காட்டில் சென்று
சோர்ந்து போன மக்களே,
இன்பமென்னும் கனிகள் பறிக்க
எழுச்சி பெற்று வருகவே.

நல்லோர் சென்ற பாதை தன்னை
நாமும் நாடிச் சென்றுமே
எல்லை இல்லா இன்பம் பெறுவோம்
எல்லாம் நமது உழைப்பிலே!

— வ. அருள்சாமுவேல் (11,993),
புளியங்குடி.

## எங்கள் ஊர்க் காட்சி

நாற்புறமும் மலையும்,
நயந்து பேசும் கிளியும்,

வளர்ந்தோங்கும் தென்னையும் ,
· வசந்தம் பாடும் குயிலும்,

பசுமை பரந்த வயலும்,
பறந்து போகும் அன்னமும்,

இயற்கை அன்னை கொலுவிலே
இருக்கும் இனிய காட்சியே.

எங்கள் ஊரில் கண்டது,
எல்லையில்லாக் காட்சியாம்!

— ஓ. சாரதாதேவி (3862), உசிலம்பட்டி.



## அதிசயத் தம்பி



சிரிச்ச முகத்தை மாத்த மாட்டான்
எங்களுடைய தம்பி! — பாயை
விரிக்க வைப்பேன்; தூங்க மாட்டான்,
தங்கமான தம்பி!

அடிச்சிடுவேன்; அழவே மாட்டான்
அன்புமிக்க தம்பி! — பாலைக்
கொடுத்திடுவேன்; குடிக்க மாட்டான்,
குறும்புக்காரத் தம்பி!

விளையாட்டில் சளைக்கமாட்டான்
'செல்லமான தம்பி! — அவன்
கடையிலிருந்து வாங்கி வந்த
வண்ணப் பொம்மைத் தம்பி!

— பா. வெற்றிச்செல்வம் (13,033),
திருவாரூர்.

## புது மொழிகள்

* அறம் என அள்ளிக் கொடுத்தாலும்
அளவோடு அள்ளிக் கொடு.
* ஊக்கமில்லா மாந்தருக்கு
ஏக்கமே இருள் சூழ விளையாடும்.
* பொன்நகை அணிந்திடும்
மாதர்க்குப்
புன்னகையே பெரு நிதியாம்.
* பணப் பெருமையை நாடு முன்
குணப் பெருமையை நாடு.
* ஆத்திரம் அறிவை அழிக்கும்.
பாத்திரம் பயனைக் கொடுக்கும்.

— ந. கீதா (5532), உடையார்குடி.

# கைமேல் பலன்!

**— இ. ஜே. தீன்**

'மலர்விழி சைக்கிள் மார்ட்' — என்றபோர்டுவெயிலில்பளபளத்துக் கொண்டிருந்தது.

கடையின்உள்ளேகழற்றிப்போடப் பட்டிருந்த சைக்கிள் உறுப்புக்கள், சைக்கிள் பிறப்பெடுக்கும் விதத்தை விளங்க வைத்தன.

உத்தரத்திலிருந்து தொங்கிய கம்பியில் ஒரு சைக்கிளைத் தொங்க விட்டு, அதன் நாடியைப் பிடித்து அதற்கென்ன நோய் என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தான் கேசவன்.

சைக்கிள்களை அக்கு வேறு, ஆணி வேறாகப் பிரித்து வைத்தியம் பார்ப்பதில் கேசவன் ரொம்பவும் கெட்டிக்காரன்.

கடைத் தெருவில் எத்தனையோ சைக்கிள் கடைகள் இருந்தாலும், கேசவனிடத்தில் சைக்கிளைப் பழுது பார்த்துக் கொள்ளவே எல்லோரும் விரும்பினார்கள். அதற்கு அவன் திறமைதான் காரணம்.

கேசவன் சின்ன வயதில் ஒரு சைக்கிள் கடையில் வேலைக்குச் சேர்ந்து தொழில் நுட்பங்களை நன்கு கற்றுக் கொண்டான். பின்பு,தானே சொந்தமாக ஒரு கடையை ஆரம்பித்து விட்டான்.

அவன் உழைப்பால் கிடைக்கும் வருமானம் அவன் குடும்பத்தின் தேவைகளுக்குப் போதுமானதாகவே இருந்தது.

கடையின் உள்ளே கேசவன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த போது, சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்த ஒருவர், வெளியில் நின்று மணியடித்தார். கேசவன் வேலையை நிறுத்தி விட்டு வெளியில் வந்தான்.

வந்தவர் வெளியூர்க்காரர். சைக்கிளின் பின் சக்கரத்தைச் சுட்டிக் காட்டினார்.

''வரும்போது ஒரு கல்லு குத்திடுச்சுங்க. ரெண்டு மைலா தள்ளிட்டே வர்றேன்...''

கேசவன் டியூப்பைக் கழற்றிப் பார்த்தான். பின்பு உதட்டைப் பிதுக்கினான்.

''என்னங்க?''

''டியூப் புண்ணியமில்லீங்க. அதை மாத்தினாத்தான் சரியாகும்''

''பங்சர் ஒட்டி சரிபண்ண முடியாதுங்களா?''

''ரொம்பக் கெட்டுப் போச்சுங்க. ஒண்ணும் பண்ண முடியாது...''

''நான் அவசரமா ஊருக்குப் போகணும்ங்க... ஏங்க, உங்ககிட்டே டியூப் எதுவும் இருக்குமா?''

''கொஞ்சம் இருங்க, பார்க்கறேன்,'' என்ற கேசவன் கடையின் உள்ளே சென்றான்.

''இருக்குதுங்க... பத்து ரூபாயாகும்!''


''சரிங்க... சீக்கிரமா மாட்டிக் கொடுங்க...''

வேக வேகமாக வேலையை முடித்து அவரை அனுப்பி வைத்தான் கேசவன்.

கடையின் உள்ளே நின்ற ஒரு புதிய சைக்கிள் ஒரு டியூப் இல்லாமல், மூளியாக நின்றது. வந்தவரிடம் கழற்றிய பழைய டியூப்பைச் சரிசெய்து, அந்தப் புது சைக்கிளில்மாட்டினான்'கேசவன்.

அது ஆசிரியர் குமரேசனின் சைக்கிள். அவர் சமீபத்தில்தான் புதிதாக சைக்கிள் வாங்கினார். 'கடக் கடக்' என்று வரும் சத்தத்தை நீக்குவதற்காக இன்று காலையில்தான் கேசவனிடம் கொடுத்தார்.

மாலையில் வந்த குமரேசனிடம், 'இனிமேல் அந்தச் சத்தம் வராது. சரி பண்ணிட்டேன்'' என்று சொல்லி, அவரிடம் சைக்கிளை ஒப்படைத்தான்




கேசவன்.

அன்று இரவு கேசவன் வீடு திரும்பியபோது, வீடு வழக்கத்திற்கு மாறாக இருந்தது. அவன் ஒரே குழந்தையான மலர்விழி தகிக்கும் காய்ச்சலால் துடித்துக் கொண்டிருந்தாள்,

''உங்களைத்தாங்க எதிர்பார்த்துட்டிருக்கேன். சீக்கிரமா டாக்டர்கிட்டே கொண்டு போய்க் காட்டணுங்க. எனக்குப் பயமா இருக்குங்க...'' என்று பதறினாள் அவன் மனைவி பத்மாவதி.

''மணி பத்துக்கு மேலாயிடுச்சே. இனிமேல் பஸ்ஸும் கிடையாது. இந்த ராத்திரி நேரத்துலே நாலு மைல் நடந்தா போக முடியும்?'' என்ற கேசவன் செய்வதறியாது கையைப் பிசைந்தான்.

''இப்படி யோசிச்சா எப்படிங்க? சீக்கிரமா ஒரு சைக்கிளையாச்சும் எடுத்துட்டு வாங்க...'' என்று பத்மாவதி அவசரப்படுத்தினாள்.

கேசவன் கடையை நோக்கி நடந்தான்.

கடையில் ஒரு சைக்கிளும் ஒழுங்காயில்லை. நன்றாக இருந்த வண்டிகளையெல்லாம் கடைசிக் காட்சி சினிமாப் பார்க்க எடுத்துப் போய் விட்டார்கள்.

என்ன செய்வது என்று குழம்பிய கேசவன், ஆசிரியர் குமரேசனின் வீட்டை நோக்கி நடந்தான்.


அவரிடம் விஷயத்தைச் சொன்னதும் உடனே தம் சைக்கிளை எடுத்துக் கொடுத்து விட்டார் —

குழந்தையை வைத்துக் கொண்டு, அவன் மனைவி பின்னால் உட்கார்ந்திருக்க, கேசவன் வேகமாக சைக்கிளை மிதித்தான். அந்த இருட்டான சாலையில் ஒளியைப் பாய்ச்சியபடி சைக்கிள் வேகமாக முன்னேறியது.

ஊரைத் தாண்டிக் கொஞ்ச தூரம் போனதும் 'புஸ்ஸ்' என்ற சத்தத்துடன் சைக்கிள் நின்றுவிட்டது. இறங்கிப் பார்த்த கேசவன் அதிர்ச்சியடைந்தான். பின் சக்கரத்து டியூப் அவுட்!

காலையில், தான் செய்த தவறான செயல் இப்படிக் கைமேல் பலன் தருமென்று கேசவன் எண்ணவேயில்லை.

# பிருந்தாவனம்



## புரிஞ்சுது!

"அப்பா, பலாச் சுளைக்கு வேர்க்கு துன்னுதானே அந்தப் பாட்டி வீசிக் கிட்டிருக்கிறு?"

"இல்லேடா. பலாச்சுளை மேலே ஈ மொய்க்குமில்லே. அதுக்குத்தான்."


"ஓ! ஈக்கு வேர்க்காமே இருக்கவா! புரிஞ்சுது. புரிஞ்சுது."

— என். செல்வம் (13,285).

## ஓர் எழுத்துப் பெயர்கள்


பறக்கும் எழுத்து — ஈ
சுமக்கும் எழுத்து — பை
வாசனை எழுத்து — பூ
குடிக்கும் எழுத்து — டீ
சுடும் எழுத்து — தீ

— வே. விஜயகிருஷ்ணன் (10741)
திருச்சி — 4.



## விடை என்ன?

1. நான்கு கால்களிலும் முட்டி போடக் கூடிய மிருகம் எது?
2. OIL இதைத் திருப்பிப் போட்டால் என்ன வரும்?
3. பிறந்தவுடன் இரண்டு வயதாகும் மிருகம் எது?
4. தன் பெயரைச் சொல்லத் தெரிந்த பறவை எது?
5. தமிழ்நாட்டில் உயரமான கோபுரம் எது?



விடை: 1. யானை; 2. 710; 3. ரேஸ் குதிரை; 4. காக்கா; 5. திருவண்ணாமலைக் கோபுரம் — 217 அடி.

— ப. தினேஷ்குமார் (3321),
சென்னை — 7.

## ஒன்றில் இரண்டு!



மேலே கண்ட தாடிக்காரர் படத்திலே இன்னொரு படமும் உள்ளது.

நன்றாக உற்றுப் பாருங்கள்.

படத்திலுள்ள தலைமுடி, தாடி இரண்டை மட்டும் பாருங்கள். ஒரு பெண் குனிந்துதுடைப்பத்தால்பெருக்குவது தெரியும்.

— த. அன்புசெழியன் (12,226), ஆம்பூர்.



## நீள வாக்கியம்!

உலகில் இதுவரை எழுதப்பட்ட மிக நீள வாக்கியம் எது தெரியுமா? விக்டர் ஹ்யூகோ என்ற பிரெஞ்சு நாவலாசிரியர் எழுதிய 'லே மிசரபிள்' (ஏழை படும்பாடு) என்ற நாவலில் உள்ள வாக்கியம்தான் அது. 823 வார்த்தைகள், 93 அரைப் புள்ளிகள், 51 முக்கால் புள்ளிகள் அந்த வாக்கியத்தில் அடங்கியுள்ளன.

— எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14.



## ஒளிந்திருக்கும் ஊர்கள்

கீழ்க்கண்ட வாக்கியங்களில் ஒளிந்திருக்கும் ஊர்களைக் கண்டுபிடியுங்கள்.

1. பாவம், அந்த ஊமை சூர்யா!
2. முந்திரி புராண காலத்திலிருந்தே நம் நாட்டில் உள்ளது.
3. கலா கூர்மையான புத்தி உடையவள்.
4. பூவின் நார் வேணியின் தலையில் சுற்றிக் கொண்டது.
5. காசிம் லாகவமாகக் குழியில் விழுந்தவனை எடுத்தான்.

விடை: 1. மைசூர், 2. திரிபுரா, 3. லாகூர், 4. நார்வே, 5. சிம்லா.

— பா. சத்யா (9163), செங்கற்பட்டு.

## எண்களில் ஊர்கள்!

திருநெல்வேலி மாவட்டத்தில் எண்கள் வரிசையில் ஊர்களின் பெயர்கள் அமைந்துள்ளன. அவை:



ஒண்ணுங்குடி
இரட்டைக்குளம்
மூன்றடைப்பு
நான்குநேரி
ஐந்து வீடு
ஆறுமுகநேரி
ஏழூர் மூக்கு
எட்டையாபுரம்
ஒன்பதாம் கட்டளை
பத்தமடை


— ப. தேவேந்திரகுமார் (1418), சென்னை—7.

## குறளில் குறும்பு!

திருக்குறளில் 'குறும்பு' என்ற சொல் வரும் ஒரு குறள் உள்ளது. அது என்ன என்று தெரியுமா?

பல் குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. (735)

— பழ. சாந்தி (5939), இராயவரம்.




# தைப்பாவை



திருப்பாவை, திருவெம்பாவை போன்ற நூல்கள் இருப்பதுபோல், தைப்பாவை என்ற ஒரு கவிதை நூலும் தமிழில் இருக்கிறது. அதை எழுதியு வர் யார் தெரியுமா? முத்தையா என்ற இயற் பெயரை உடைய கவியரசு கண்ணதாசன்தான்!

— ம. தனலட்சுமி, (5458), சூரமங்கலம்.




# பூகோள வண்ணாத்திப் பூச்சி

சீனுவில் காணப்படும் ஒருவகை வண்ணத்துப் பூச்சியை 'பூகோள வண்ணாத்திப் பூச்சி' என்றும் 'உலகப் பட வண்ணாத்திப் பூச்சி' (Map Butterfly) என்றும் அழைக்கிறார்கள். காரணம், அதன் இருபுறமுமுள்ள சிறகுகளில் பூமியில் உள்ள காட்சிகள் பல தெரிகின்றனவாம்.

— எஸ். செந்தில்குமார் (13,978), கோவை.

# இரட்டைப் பிள்ளையார்

சமீபத்தில் நானும் என் உறவினர்களும் திருச்செந்தூருக்கு டாக்ஸியில் போய்க் கொண்டிருந்தோம். கூடன்



குளம் என்ற ஊரிலிருந்து சில மைல் கல் தொலைவில் 'சிரட்டைப் பிள்ளையார் கோயில்' என்று ஒரு கோயில் உள்ளது. அங்கு இறங்கி அந்தப் பிள்ளையாருக்கு ஒரு தேங்காய் அடித்துவிட்டுத் திரும்பும்பொழுது ஒருவர் எங்களை அழைத்து, ''தேங்காய்ப் பருப்பை எடுத்துவிட்டு, சிரட்டையை (கொட்டாங்கச்சியை) இங்கே போட்டுவிட்டுப் போங்கள்'' என்றார்.

''ஏன்?'' என்று கேட்டபொழுது,


''இந்தப் பிள்ளையாருக்கு 'சிரட்டைப் பிள்ளையார்' என்ற பெயர் வந்ததே, அதனால்தான்!'' என்றார். உடனே, நாங்கள் சிரட்டையை மட்டும் பிள்ளையாருக்குக் கொடுத்துவிட்டு வந்தோம்.

— அ. இரவீந்திரன் (12761), குஞ்சன்விளை.

# அற்புதச் சிற்பம்

சேலம் அருகே உள்ள தாரமங்கலத்தில் சிற்பக் கலைக்குப் புகழ்பெற்ற கைலாசநாதர் கோயில் இருக்கிறது. அங்கே சிற்பங்களில் இராமர் மறைந்திருந்து வாலி மேல் அம்பு எய்யும் சிற்பம் சிறப்பானது.


இராமர் சிற்பத்திலிருந்து பார்த்தால் வாலி சிற்பம் தெரியும். ஆனால், வாலி சிற்பத்திலிருந்து பார்த்தால் இராமர் சிற்பம் தெரியாது! இராமா



யணத்தில் வரும் காட்சியை இங்கு அழகாக வடிக்கப்பட்டுள்ளது.

— ராக. சௌ. கருணாகரன் (883), சேலம்–1.

## கால்(ா) இல்லாத பழமொழிகள்




சிறு துரும்பும் பல் குத்த உதவும்
நீருள்ள மட்டும் மீன் துள்ளும்
தன் கையே தனக்கு உதவி
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

— கே. நரசிம்மன் (7,378), ஒசூர்.

## பிறக்கும் போதே பற்கள்!

பிறக்கும்போதேபற்களுடன்பிறந்தவர்கள் யார் யார் தெரியுமா?



நெப்போலியன்
மூன்றாவது ரிச்சர்ட்
பதின்மூன்றாம் லூயி

— ஆம்பூர் த. அன்புசெழியன் (12226), ஆம்பூர்.

## மாவட்டத் தலைநகரங்கள்

கீழே சில மாவட்டங்களின் பெயர்களும் அவற்றின் தலைநகர்களும் உள்ளன. ஆனால் அவை மாறி இருக்கின்றன. சரிப்படுத்துங்கள், பார்க்கலாம்.

1. பெரியார் மாவட்டம் — சிவகங்கை
2. அண்ணா மாவட்டம் — தூத்துக்குடி



3. காமராஜர் மாவட்டம் — திண்டுக்கல்
4. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் — ஈரோடு
5. வ.உ.சிதம்பரனார் மாவட்டம் — விருது நகர்.

விடை: 1=4; 2=3; 3=5; 4=1; 5=2.

— இரா. சங்கர் (4671), சிதம்பரபுரம்.

## —ட்டை



அதோ பாரடா மொட்டை — அவன்
உயரமோ மிகவும் குட்டை — அவன்
அணிவதோ நைலான் சட்டை — கையில்
தேர்வில் எழுத அட்டை — ஆனால்
வாங்குவதோ கோழி முட்டை!

— கே.வி. பிச்சைமணி (10332), விசலூர்.


# சித்திரப் புதிர்! 16

ஆழி

ரஷ்யாவில், உலகப்பிரசித்திப் பெற்ற இந்தக் கட்டடம் இருக்கும் இடத்தின் பெயர் என்ன?


1





இது எந்த மதத்தின் சின்னம்?

2





3

இந்த ஆறு படங்களில் ஒன்று மட்டும் மாறுபட்டது. அது என்ன?

இது எந்த தேசத்து நடனம்?

4





5

இதில் எத்தனை சதுரங்கள் இருக்கின்றன?

விடை: வேறு பக்கம்

டென்மார்க் தேசக் கதை

# ஊசி இலை மரம்



மூலம்: ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்
தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

வெகு காலத்திற்கு முன்னால் காட்டில் ஒரு சின்ன ஊசி இலை மரம் இருந்தது. அது பச்சைப் பசேலென்று பார்ப்பதற்கு அழகாக இருந்தது. சூரிய வெளிச்சமும், சுத்தமான காற்றும் அதற்கு நிறையக் கிடைத்தன. அதைச் சுற்றிலும் அதன் பெரிய நண்பர்களான பலவிதமான மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. தனக்குக் கிடைத்த வசதிகளைக் கொண்டு அது திருப்தி அடையவில்லை. மற்றவர்களைப் போலவே தானும் ஒரு பெரிய மரமாக விரைவில் வளர வேண்டும் என்று அது ஆசைப்பட்டது.

காட்டுக்கு அருகில் சில குடிசைகள் இருந்தன. அங்கு வசித்த குழந்தைகள் பழம் பறிப்பதற்காகச் சில சமயங்களில் காட்டுக்கு வந்தனர். விளையாடிவிட்டு அந்தச் சின்ன மரத்தருகே உட்கார்ந்து கொண்டு பழங்களைப் பங்கு போட்டுச் சாப்பிட்டனர். ''இந்தச் சின்ன ஊசி இலை மரம் எவ்வளவு அழகாக இருக்கிறது!'' என்று அதைப்பாராட்டினர். அவர்களுடைய பாராட்டு அந்த மரத்திற்குப் பிடிக்கவில்லை. தன்னை ஒரு 'சின்ன மரம்' என்று மற்றவர்கள் சொல்லுவதை அது விரும்பவில்லை.

ஒரு வயது ஆயிற்று. இரண்டு வயது ஆயிற்று. ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக அது உயர்ந்து வளர்ந்தது. கிளைகளின் எண்ணிக்கையைக் கொண்டே ஊசி இலை மரங்களின் வயதைச் சாதாரணமாகச் சொல்லி விடலாம்.

''மற்ற மரங்களைப் போலவே நானும் உயரமாக வளர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என் கிளைகளை நாலா பக்கங்களிலும் பரப்புவேன். இந்தப் பரந்த உலகை வியந்து நோக்குவேன். பறவைகள் என் கிளைகளிலும் கூடு கட்டி ஆனந்தமாக வாழும். மெல்லிய பூங்காற்று வீசும் போது நானும் கம்பீரமாக என் தலையைச் சற்று சாய்ப்பேன்,'' என்று அந்த மரம் எண்ணியது. சூரிய ஒளியையும், வானப் பறவைகளையும், தவழும் மேகங்களையும் கண்டு அது சந்தோஷப்படவில்லை. மாறாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது.

குளிர்காலத்தில் பனி தரையை மூடிப் பளபளத்தது. அப்போது முயல்கள் குதித்துக் கொண்டு வந்தன. ஒரே தாவலில் சில முயல்கள் அந்தச் சின்ன மரத்தை அலட்சியமாகத் தாண்டிச் சென்றன. அப்போது அதற்கு

ரொம்பக் கோபம் வந்தது.

மூன்று வயது ஆனதும், அந்த மரம் இன்னும் கொஞ்சம் உயரமாக வளர்ந்தது. முயல்களால் அதைத் தாண்ட முடியவில்லை. ஆகவே அவை அதைச் சுற்றிக் கொண்டு சென்றன. அப்போதுதான் அந்த மரத்திற்குக் கொஞ்சம் நிம்மதி பிறந்தது. ''வயது ஆவதும், வளருவதும்தான் இந்த உலகில் ஓர் அழகான விஷயம்,'' என்று அந்த மரம் எண்ணியது.

இலை உதிர்காலம் வந்தது. விறகு வெட்டிகள் சிலர் காட்டிற்கு வந்தனர். பெரிய மரங்கள் சிலவற்றை வெட்டினர். இது ஆண்டுதோறும் நடக்கும் வழக்கமான நிகழ்ச்சிதான். தான் இப்போது சிறிதாக இல்லாததால், அந்த மரம் பயந்தது. பெரிய மரங்களெல்லாம் 'தடால்' என்ற சப்தத்தோடு முறிந்து மண்ணில் விழுவதைக் கண்டதும், அதற்கு உடல் நடுங்கியது. கிளைகளெல்லாம் கழிக்கப்பட்டு, வெறுமையாகி அவை நீண்டு கிடந்தன. அடையாளமே தெரியவில்லை. மரங்களை வண்டிகளில் ஏற்றியதும், குதிரைகள் அவற்றைக் காட்டினின்றும் இழுத்துச் சென்றன. ''அவற்றை எங்கே இழுத்துப் போகிறார்கள்? என்ன செய்வார்கள்?'' என்று அந்த ஊசியிலை மரம் அதிசயித்தது.

வசந்த காலம் வந்தது. குருவிகளும், நாரைகளும் வந்தன. அவற்றைப் பார்த்து, ''அந்தப் பெரிய மரங்களை எங்கே எடுத்துப் போகிறார்கள்? உங்களுக்குத் தெரியுமா?'' என்று அந்த மரம் கேட்டது. ''தெரியாது,'' என்று குருவிகள் கூறின. ஆனால் ஒரு நாரை, ''எனக்குத் தெரியும். நான் எகிப்திலிருந்து இங்கே பறந்து வரும்போது வழியில் உயர்ந்த கம்பங்களை உடைய பல மரக்கலங்களைக் கண்டேன். அவை ஊசி இலையின் மணம் வீசின. அவற்றைப் பார்த்தால் உனக்குப் பெருமையாக இருக்கும். அவ்வளவு கம்பீரமாகத் தோற்றம் அளித்தன,'' என்று சொல்லியது.

''நானும் பெரியவனாகி அந்தப் பரந்த கடலின் மீது பறக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது! கடல் என்பது எப்படி இருக்கும்?'' — மரம் கேட்டது.

''அதைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை,'' என்று சொல்லிவிட்டு நாரை பறந்தது.

''இது உன் இளமைப் பருவம்; சந்தோஷமாக இரு!'' என்றது சூரியன். காற்று மரத்தை முத்தமிட்டது. பனி அதன் மீது தன் கண்ணீரைச் சொரிந்தது. ஆனால், அந்த ஊசி இலை மரம் அவற்றைப் புரிந்து கொள்ளவே இல்லை.

கிறிஸ்துமஸ் பண்டிகை வந்தது. அநேக சிறிய மரங்கள் வெட்டப்பட்டன. அவை பார்வைக்கு அழகாக இருந்தனவே தவிர, அந்த ஊசி இலை மரத்தை விட மூத்தவை அல்ல. அவற்றின் கிளைகள் கழிக்கப்படவில்லை. வண்டிகளில் அவை கவனமாக ஏற்றப்பட்டன. குதிரைகள் அவற்றைக் காட்டினின்றும் இழுத்துச் சென்றன.

''அவைகள் என்னை விடச் சின்னவைதான். வழக்கம் போலக் கிளைகளும் வெட்டப்படவில்லை. அவற்றை எங்கே எடுத்துப் போகிறார்கள்?'' என்று மரம் முணுமுணுத்தது.

''எங்களுக்குத் தெரியும்,'' என்று குருவிகள் கூச்சலிட்டன.

''காட்டின் எல்லையில் இருக்கும் ஊருக்கு நாங்கள் போயிருக்கிறோம். அங்குள்ள இல்லங்களின் ஜன்னல் வழியாக நோக்கியிருக்கிறோம். செல்வச் செழிப்புமிக்க கூடங்களின் மையத்தில் அந்த மரங்களை வைத்திருக்கக் கண்டோம். கனிகளும், இனிப்புகளும், பொம்மைகளும் கிளைகளில் அழகாகத் தொங்கின. நூற்றுக் கணக்கான தீபங்களால் அந்த மரங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன,'' என்று அவை கூறின். அதைக் கேட்டதும் ஊசி இலை மரத்தின் உடல் சிலிர்த்தது. ''அப்புறம் என்ன செய்வார்கள்?'' என்று ஆர்வத்தோடு கேட்டது.

''அது ஓர் அழகான காட்சி. அதற்கு மேல் நாங்கள் பார்க்கவில்லை.''

''ஆ! என்றைக்காவது ஒருநாள் நானும் அந்த ஒளிமயமான கூடத்திற்குப் போவேன்! கடல் பயணத்தை விட அது இன்பமாக இருக்குமோ? சீக்கிரமாகக் கிறிஸ்துமஸ் வராதா?



சென்ற ஆண்டு கொண்டு செல்லப்பட்ட மரங்களைப் போல நானும் உயரமாக இருக்கிறேன். என் கிளைகளும் விரிந்து படர்ந்துள்ளன. குதிரை வண்டியில் போக எனக்கு எவ்வளவு ஆசையாக இருக்கிறது! அந்த வளமான இல்லங்களைப் பார்க்க என் மனம் துடிக்கிறது. அந்த ஒளிமயமான விழாவிற்குப் பிறகு — அதைவிட உயர்ந்த ஏதோ ஒன்று இருக்க வேண்டும். அது என்ன? என்ன? கொள்ளை ஆசை குவிந்து என் மனத்தை அலைக்கழிக்கிறதே! என்ன செய்வதென்று எனக்குத் தோன்றவில்லையே?'' என்ற எண்ணங்களின் இன்பச் சூழலில் அந்த மரம் திக்குமுக்காடியது.

''எங்களை எண்ணிச் சந்தோஷப்படு! உன் இளமையை எண்ணிச் சந்தோஷப்படு!'' என்று சூரிய ஒளியும், காற்றும் சொல்லின. ஆனால் மரம் அப்படிச் சந்தோஷப்படவில்லை.

அது வளர்ந்து கொண்டே போயிற்று. குளிர்காலத்திலும், கோடை காலத்திலும் அது பசுமையாகக் காட்சி தந்தது. ''எவ்வளவு அழகான மரம்!'' என்று மக்கள் அதைப் புகழ்ந்தனர். அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை வந்ததும், அந்த ஊசி இலை மரம்தான் முதலில் வெட்டப்பட்டது!

கோடரி ஆழமாகப் பதிந்தது. பெருமூச்சு விட்டுக் கொண்டே மரம் மண்ணில் சாய்ந்தது. தான் பிறந்த இடத்தை விட்டுப் போகிறோமே என்ற வருத்தம் முதன் முறையாக அதைக் கவ்வியது. தோழமை மரங்களையும், சுற்றியுள்ள புதர்களையும், பூக்களையும், பறவைகளையும் தன்னால்

இனிமேல் பார்க்க முடியாது என்பதை அது உணர்ந்தது. அந்த எண்ணமே அதற்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. மற்ற மரங்களுடன் அதுவும் வண்டியில் ஏற்றப்பட்டது. குதிரைகள் அவற்றை இழுத்துச் சென்றன.

சிறிது நேரங்கழித்துத் தோட்டமும், புல்வெளியும் சூழ்ந்த ஒரு பெரிய மாளிகையின் வாசலில் அது இறக்கப்பட்டது. பணியாளர்கள் அதை வரவேற்பு அறைக்குச் சுமந்து சென்றனர். அறையின் மையத்தில் மணல் நிறைந்த ஒரு தொட்டியில் அது வைக்கப்பட்டது. அறையின் வளத்தையும், வனப்பையும் கண்டு மரம் அதிசயித்தது.

தனக்கு வந்த அதிர்ஷ்டத்தை எண்ணி மரம் மெய்சிலிர்த்தது. மாளிகையிலிருந்த பெண்களும், பணியாளர்களும் தோரணங்களாலும், பொம்மைகளாலும் மரத்தை அலங்கரித்தனர். பழங்களையும், இனிப்புக்களையும், கேக்குகளையும் கிளைகளில் கட்டினர். சின்னச் சின்ன அழகிய மெழுகுத் திரிகளைக் கிளைகளில் பொருத்தினர். பளபளக்கும் ஒரு பெரிய நட்சத்திரத்தை மரத்தின் உச்சியில் வைத்தனர். அதுவரையில் மரத்திற்கு அத்தகைய அனுபவங்கள் நேர்ந்ததே இல்லை. மகிழ்ச்சியின் மொத்த

எப்படி இருந்தது?

'திருக்குறள்' சொற்பொழிவு கேட்கப் போனியே, எப்படியடா இருந்தது?

சொற்பொழிவாளருடைய 'திருக்குரல்'தான் சரியில்லே!

— டி. எல். ரெட்டி.




உருவமாக அது திகழ்ந்தது!

''இன்று மாலை மரம் எப்படி ஜொலிக்கப் போகிறது தெரியுமா? அதுவரையில் பொறுத்திருங்கள்!'' என்று குழந்தைகளிடம் ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டிருந்தனர்.


''ஓ! அந்த மாலை வேளை சீக்கிரம் வராதா? மெழுகுத் திரிகளைச் சீக்கிரம் ஏற்ற மாட்டார்களா?... அப்புறம் என்ன ஆகும்? என்னைப் பார்த்து ரசிப்பதற்காகக் காட்டிலுள்ள மரங்களெல்லாம் ஒருவேளை இங்கு வருமா? ஜன்னல் வழியாக அந்தக் குருவிகள் எட்டிப் பார்க்குமா? அழகிய ஆபரணங்களை எல்லாம் அணிந்து ஆண்டு முழுதும் நான் இந்த அறையில் அப்படியேவேரூன்றிநிற்பேனு...?'' என்று பல கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டே மரம் பொறுமையில்லாமல் தவித்தது.

எதிர்நோக்கிய மாலை வேளை வந்தது. மெழுகுத்திரிகள் ஏற்றப்பட்டன. மரம் ஒளிப் பிழம்பாகத் திகழ்ந்தது. அந்த ஒளி வெள்ளத்தில் மரம் வாயடைத்து நின்றது.

திடீரென அறைக் கதவுகள் திறந்தன. மடைதிறந்த வெள்ளம் போல், மழலைப் பட்டாளம் ஒன்று உள்ளே பாய்ந்தது. பெரியவர்கள் அமைதியாகப் பின்னல் வந்தனர்.

அந்தக் குழந்தைகள் அலங்கரிக்கப்பட்ட மரத்தைப் பார்த்துக் கொண்டு ஒரு கணம் அமைதியாக நின்றனர். மறுகணம் சந்தோஷ மிகுதியால் அவர்கள் 'ஓ'வென்று கூக்குரலிட்டனர். அவர்களுடைய கூக்குரலை அறை எதிரொலித்தது. தங்களுக்குப் பிடித்தமான பரிசைப் பறித்துக் கொண்டே குழந்தைகள் மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கூத்தாடினர். 'குழந்தைகள் என்ன செய்கிறார்கள்? அடுத்த நிகழ்ச்சி என்ன?' என்று மரம் யோசித்தது.

மெழுகுத் திரிகள் எரிந்து, எரிந்து உயரம் குறைந்து போனதும் அணைக்கப்பட்டன. மரத்திலிருந்து பரிசுப் பொருள்களை எடுத்துக் கொள்ளக் குழந்தைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. புயலைப் போல அவர்கள் பாய்ந்தனர். மரத்தைச் சூறையாடி



# சிட்டுக்குருவி

—கொ. மா. கோதண்டம்

கோலி போன்ற தலையிலே
குறுகு றுக்கும் கண்களாம்.
நெல்லு போன்ற மூக்குடன்
நெளிந்து இரையைக் கொத்துமாம்.

கருமை யோடு வெண்மையும்
கலந்த நிறத்தில் சிறகுகள்
அருமைப் பட்டுப் போலவே
அமைந்த சின்னச் சிற்றுடல்.

குச்சுக் குச்சுக் கால்களாம்.
கொஞ்சம் நீண்ட வாலுமாம்.
பச்சைக் குழந்தை போலவே
பார்க்கத் தூண்டும் அழகுதான்!

சிட்டுக் குருவி தினமுமே
தேடிச் சேர்த்த செத்தையால்
கட்டும் கூடு அற்புதம்!
காணக் காண வியப்புதான்!

எங்கும் பறந்து போகுமாம்.
இனிய முறையில் வாழுமாம்.
இங்கு எனக்கும் சிறகுகள்
இருந்தால் நானும் பறக்கலாம்.

---

ன்ர். அந்தத் தாக்குதலால் சில கிளைகள் முறிந்து விழுந்தன. தங்களுக்குப் பிடித்த பொம்மைகளை எடுத்துக்கொண்டு குழந்தைகள் விளையாடுவதற்காக அந்த அறையை விட்டு, வெளியேறினர். பிறகு, வேறு யாரும் அந்த மரத்தை லட்சியம் செய்யவே இல்லை.

சிறிது நேரங்கழித்துக் குழந்தைகள் ஒரு முதியவரை அந்த மரத்திற்கு அருகில் இழுத்து வந்தனர். எல்லோரும் அந்த மரத்தின் அடியில் உட்கார்ந்தனர். ''கதை சொல்லு! கதை சொல்லு!'' என்று குழந்தைகள் அவரை வற்புறுத்தினர்.

''சரி, கதை சொல்லுகிறேன். கேளுங்கள். இந்த மரமும் கேட்கட்டும். உங்களுக்கு என்ன கதை வேண்டும்? ஓர் அழகான ஏழைச் சிறுமியைப் பற்றிய கதையா? அல்லது மாடியிலிருந்து கீழே விழுந்தாலும், கடைசியில் அரசகுமாரியை மணந்து கொண்ட ஒரு சாதாரணச் சிறுவனின் கதையா ...?'' என்று அவர் கேட்டார்.

சிலர், ''சிறுமியின் கதை!'' என்றனர்; சிலர் ''சிறுவனின் கதை!'' என்றனர். ஒரே கூச்சல்; குழப்பம். கடைசியில் அவர் அந்த ஏழைச் சிறுவனின் கதையைச் சொன்னார். குழந்தைகளெல்லாம் குதூகலமாகக் கையைத் தட்டி அந்தக் கதையை ரசித்தனர்.

மரம் அசையாமல் நின்று கதையைக் கேட்டது — ''கதையில் வரும் சிறுவனைப் போல எனக்கும் அதிர்ஷ்டம் அடிக்கலாம். படிக்கட்டுகளிலிருந்து, கீழே விழுந்தாலும், கடைசியில் ஓர் அரசகுமாரியை நானும் கல்யாணம் செய்து கொள்ளலாம்! யார் கண்டது?'' என்று அது எண்ணியது. பளபளக்கும் பட்டையை உடைய ஒரு காட்டு மரம் அதற்கு நினைவு வந்தது. மரத்தின் கற்பனையில் அந்தக் காட்டு மரம் ஓர் அரசகுமாரியாகக் காட்சி அளித்தது. மேலும் ''ஒளிவிளக்குகளாலும், பொம்மைகளாலும் மறுபடியும் என்னை அலங்கரிப்பார்கள். குழந்தைகள் ஓடிவருவார்கள். அந்த முதியவரும் வருவார். கதை சொல்லுவார். கேட்கலாம்!'' என்று மரம் ஓர் இனிய கற்பனையில் மூழ்கியது.

மாற்றுங்கள்

"கோயிலுக்குப் பக்கத்திலே சாராயக் கடையைத் திறந்தது சரியில்லையாம். ஒருத்தரு எழுதியிருக்கிறாரு."

"அதுக்கு என்ன பண்ணணுமாம்?"

"வேறே இடத்துக்குக் கோயிலே மாத்தச் சொல்றாரு!"

— எல். லட்சுமிநாராயணன்.



மறுநாள் காலை. பணியாளர்கள் அறைக்குள் நுழைந்தனர். "இப்போது என்னை அலங்கரிக்கப் போகிறார்கள்," என்று எண்ணி மரம் மனம் மகிழ்ந்தது. ஆனால், அவர்கள் அதைப் பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டு படிக்கட்டு வழியாக மேலே ஏறினர். மாடியிலிருந்த ஓர் இருட்டு அறைக்குள் அதைப் போட்டுவிட்டுச் சென்றனர்.

"என்னை ஏன் இங்கே அழைத்து வந்திருக்கின்றனர்? இதற்கு என்ன அர்த்தம்?" என்று சுவரில் சாய்ந்தவாறே அது சிந்தித்தது. சிந்திப்பதற்கு அதற்கு நிறையப் பொழுது இருந்தது.

நாட்கள் நகர்ந்தன. யாருமே அதைப் பார்க்கவில்லை. எல்லோரும் அதை மறந்துவிட்டனரோ என்று தோன்றியது. "இப்போது குளிர் காலம். பூமியைப் பனி மூடியிருக்கிறது. குளிர் காலத்திற்குப் பிறகு மறுபடியும் என்னைத் தோட்டத்தில் நடுவார்கள். இந்த மாளிகை வாசிகள் உண்மையிலேயே நல்லவர்கள்: குளிர்காலம் என்பதற்காக எனக்கு ஒரு கூரை கொடுத்திருக்கிறார்களே! ஆனால் இந்த அறைதான் இருட்டாகவும்,தனிமையாகவும் இருக்கிறது. இந்தத் தனிமையைப் போக்க ஒரு முயலாவது துணைக்கு வந்தால் நன்றாக இருக்கும். முன்பெல்லாம் முயல்கள் என்னைத் தாண்டிச் சென்றால், எனக்கு எவ்வளவு கோபம் வரும்? இப்போது அதே முயல்கள் துணைக்கு வராதா? என்று ஏங்குகிறேனே — என்ன ஆச்சரியம்!" என்று மரம் சிந்தித்தது.

"கீச்! கீச்!" அறையின் வளையிலிருந்து ஒரு சுண்டெலி எட்டிப் பார்த்துக் கத்தியது. உடனே இன்னொரு சுண்டெலி வந்தது. இரண்டும் அந்த மரத்தை முகர்ந்து பார்த்தன. பிறகு, அவை அந்த மரத்தின் கிளைகளில் ஏறி, இறங்கி, ஓடி விளையாடின. "இப்போது ரொம்பக் குளிருகிறது. ஆனால் மற்றபடி இந்த அறைதான் சுகம் — இல்லையா, முதிய மரமே?" என்று ஒரு சுண்டெலி கேட்டது.

"நான் ஒன்றும் முதியவன் இல்லை — என்னைவிடப் பெரிய மரங்கள் பல இருக்கின்றன," என்றுமரம்பதிலளித்தது.

"நீ எங்கிருந்து வருகிறாய்? எது உலகிலேயே மிக அழகான இடம்? நீ எப்போதாவது அங்கு போயிருக்கிறாயா? அங்கு பால், ரொட்டி, வெண்ணெய், இறைச்சி ஆகியவை தாராளமாகக் கிடைக்குமா?" — சுண்டெலிகள் மடமடவென்று கேட்டன.

"அப்படி ஓர் இடம் இருப்பது எனக்குத் தெரியாது. ஆனால் சூரிய ஒளியில் பறவைகள் பாடும் காட்டைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்" என்று தொடங்கித் தன்னுடைய இளமைப் பருவத்தைப் பற்றி மரம் பேசியது. சுண்டெலிகளுக்கு அந்த விஷயமெல்லாம் தெரியவே தெரியாது. ஆகவே, அவை அந்தப் பேச்சை ஆவலோடு கேட்டன.

"ஓ,நீ எவ்வளவு இடங்களைப் பார்த்திருக்கிறாய்? எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கிறாய்?" என்று சுண்டெலிகள் கூறின

"அது மட்டும் இல்லை. கிறிஸ்துமஸ் தினத்திற்கு முந்திய நாள் நான் இங்கு கொண்டு வரப்பட்டேன். என்னை ஆடம்பரமாக அலங்காரம் செய்தார்கள். குழந்தைகளுக்கும் எனக்கும் சேர்த்து ஒரு முதியவர் கதை சொன்னார்,"என்று ஆரம்பித்து, சுண்டெலி

களுக்கு அந்தக் கதையைச் சொல்லியது மரம்.

"ஓ, முதிய மரமே! நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலி!" என்று சுண்டெலிகள் வியந்து கூறின.

"நான் ஒன்றும் முதியவன் இல்லை. இந்தக் குளிர் காலத்தில்தான் என்னைக் காட்டிலிருந்து இங்கே எடுத்து வந்தார்கள், தெரியுமா?" என்று மரம் சற்றுக் கோபமாகக் கூறியது.

அடுத்த நாள் அந்தச் சுண்டெலிகள் இரண்டு பெரிய எலிகளை அழைத்து வந்தன. பெரிய எலிகளுக்கு மரம் சொன்ன கதைகள் எதுவும் பிடிக்கவில்லை. அதை அறிந்ததும், சுண்டெலிகளுக்கும் மரத்தின் கதைகளில் சுவாரசியம் குறைந்தது. அப்புறம் அந்த எலிகள் வரவே இல்லை. பேச்சுத் துணைக்கு யாரும் இல்லாமல் மரம் தனிமையிலும், இருட்டிலும் தவித்தது.

ஒருநாள் சில வேலை ஆட்கள் வந்தனர். இருட்டு அறையிலிருந்த மரத்தைப் படிக்கட்டுகளின் வழியாகக் கீழே இழுத்துச் சென்றனர். தோட்டத்து வெயிலில் ஒரு மூலையில் அதைப் போட்டனர்.

"இப்போது எனக்கு நல்ல காலம் பிறக்கிறது!" என்று சந்தோஷமாகச் சொல்லிக் கொண்டே அது கிளைகளை விரித்தது. ஆனால் பசுமையாக இருந்த அதன் இலைகள் எல்லாம் பழுத்து மஞ்சளாக மாறி இருந்தன. முட்களும், குப்பைகளும் நிறைந்த ஒரு மூலையில் அது தரையில் கிடந்தது. ஆனால் அதன் உச்சியில் கட்டப்பட்டிருந்த காகித நட்சத்திரம் மட்டும் சூரிய ஒளிபட்டுப் பளபளத்தது.

கிறிஸ்துமஸ் அன்று மரத்தைச் சுற்றி வந்து கொட்டம் அடித்தார்களே, அந்தக் குழந்தைகள் இப்போது தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அந்த மரத்தை மறுபடியும் பார்த்ததும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "அழகே இல்லாத இந்தப் பழைய மரத்திற்கு நட்சத்திரம் எதற்கு?" என்று சொல்லிக் கொண்டே ஒரு சிறுவன் ஓடி வந்தான். பளபளக்கும் அந்த நட்சத்திரத்தைப் பிய்த்து எடுத்தான். கிளைகளின் மேல் வேகமாக ஓடி, அவற்றை மிதித்தான். அவன் பாதம் பட்டதுமே, கிளைகள் மளமளவென்ற சப்தத்தோடு முறிந்தன.

| சித்திரப் புதிர் — 16 |
| --- |
| விடை: |
| 1. செஞ்சதுக்கம் |
| 2. புத்தமதம் |
| 3. உ. மணி (மற்றவை இசைக் கருவிகள்) |
| 4. ஸ்ரீலங்கா. |
| 5. 40 சதுரங்கள். |

அந்த மரம் தன்னைச் சுற்றியிருந்த பசுமையான தோட்டத்தை ஒரு முறை பார்த்தது. பிறகு தன்னையே பார்த்துக் கொண்டது — "அந்த இருட்டு மாடி அறையிலேயே இன்னும் கொஞ்ச நாட்களுக்கு நிம்மதியாக இருந்திருக்கலாமே!" என்று நினைத்தது. காட்டில் கழித்த தன்னுடைய இளமைப் பருவமும், சந்தோஷமான கிறிஸ்துமஸ் விழாவும், ஆவலுடன் கதை கேட்ட அந்தச் சுண்டெலிகளின் முகங்களும் மரத்தின் மனத்திரையில் மாறி மாறி வந்தன. "கிடைத்ததை வைத்துக் கொண்டு நான் சந்தோஷமாக இருந்திருக்க வேண்டும்... உம்... எல்லாம் முடிந்த பிறகு, அந்தப் பழைய கதையெல்லாம் எதற்கு?" என்று சோகப் பெருமூச்சுவிட்டு அது தன்னைத்தானே தேற்றிக் கொண்டது.

தோட்டக்காரனின் பையன் அந்த மரத்தைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டினான். சமையலுக்காக மூட்டப்பட்டிருந்த அடுப்பில் ஒவ்வொரு மரத் துண்டாக வைத்தான். மரம் பெருமூச்சு விட்டது. ஒவ்வொரு மூச்சும் ஒரு வெடிச் சப்தம் போல வெளியே கேட்டது.

சிறுவர்கள் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர். கிறிஸ்துமஸ் பண்டிகையன்று மரம் பெருமையோடு அணிந்து கொண்டிருந்த அந்த மின்னும் நட்சத்திரத்தை ஒரு சிறுவன் கழுத்தில் மாலையாக அணிந்து கொண்டிருந்தான்.

Hans Christian Anderson எழுதிய The Fir Tree என்ற கதையின் சுருக்கமே இது.

# உருவகக் கதை

—மலையமான்



## கரடியின் சந்தேகம்

நடை பயின்றுகொண்டிருந்த கரடிக் குட்டியின் மீது ஏதோ ஒன்று விழுந்தது. கீழே குனிந்து அதைப் பார்த்தது. அந்தப் பொருள் பச்சை நிறமாக இருந்தது. ஏதோ ஒரு பெரிய பூச்சியாகத்தான் இருக்கும். தன்னைத் தாக்குவதற்காகத்தான் தன்மேல் விழுந்திருக்க வேண்டும் என்ற முடிவு அதற்கு ஏற்பட்டது. அது பறந்து ஓடிவிடாதபடி மிகவும் விழிப்பாக இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து 'லபக்' என்று அந்தப் பூச்சியை மூடிப் பிடித்தது. அது எங்கு கடித்து விடுமோ என்ற ஒரு பயம் இருக்கவும் மெதுவாக அந்தப் பூச்சியைப் பார்த்தது. அதற்குக் கால்களோ சிறகோ ஒன்றுமே காணோம்! அது ஒரு காய்!

அது ஒரு காய் என்பதை ஆராய்ந்து கண்டுபிடித்ததும் அதை யார் தன் மேல் எறிந்தவர் என்ற ஆராய்ச்சியில் மூழ்கியது. எதிரே சில குரங்குகள் செல்வதைக் கண்டதும், 'அவைதாம் குரங்குத்தனமாக என் மேல் இந்தக் காயை எறிந்திருக்குமோ!' என்ற எண்ணம் எழுந்தது. அந்த ஆய்வு முடிவதற்குள் புதருக்குள் இருந்து ஒரு முயல் எட்டிப் பார்த்தது.

'ஒரு வேளை இந்த முயல் என்மேல் காயை எறிந்துவிட்டு நான் என்ன செய்கிறேன் என்பதைக் கவனிக்கவே எட்டிப் பார்க்கிறது' என்று அது சிந்திக்கலாயிற்று.

தன் எதிரே வட்டமிட்டுக் கொண்டிருந்த பருந்து கண்ணில் பட்டதும் அது வீசியிருக்கலாமோ என்ற சந்தேகம் முளைத்தது.

குரங்கு, முயல், பருந்து இம்மூன்றில் எது குற்றவாளி என்ற முடிவுக்கு வருவதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒவ்வொன்றின் சார்பாகக் காரணங்களைச் சேகரிப்பதற்குள் மற்றொரு காய் அதன்மேல் விழுந்தது. இரண்டு காய்களும் ஒன்று போலிருந்தன. ஆத்திரம் அடைந்த அது இம்முறை எப்படியும் எறிந்தவனைப் பிடித்துவிட வேண்டும் என்று எண்ணித் தீப்பிழம்பு போன்ற கண்களால் மேலே பார்த்தது. நிறையக் காய்கள் கொண்ட மரம் மேலே இருப்பதைக் கண்டது. காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்த அந்தக் காய்களும் தன்மேல் விழுந்த காய்களும் ஒன்றுபோலக் காணப்படவே, தன் சந்தேக ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு நடையைத் தொடர்ந்தது.

# திரும்பிவந்த கடிதம்

'லென்ஸ்'



"இந்தப் பெட்டிக்கு உயிர் இருந்தால் நிச்சயம் இந்நேரம் ஓடிப் போயிருக்கும். ஏண்டா இப்படிப் பண்றீங்க?" என்று உரக்க முனகிக் கொண்டே தபால் பெட்டிக்குள்ளிருந்து, தபால், கல், குப்பைகள் இவற்றைத் தரம் பிரித்துத் தபாலை மட்டும் எடுத்துப் பையில் போட்டுக் கொண்டிருந்தார் கண்ணுசாமி.

அந்தத் தபால் பெட்டி அந்தத் தெருவுக்கு வந்து நாலைந்து மாதம் இருக்கும். தினமும் கண்ணுசாமி தபால் பெட்டியைத் திறக்க வரும் போது, தபாலை மட்டும் பிரித்தெடுப்பது அவர் வேலையாகப் போய் விட்டது.

கண்ணுசாமியின் தலை அந்தப் பக்கம் சென்று மறைந்ததும், சேகர், கிரி, ரமேஷ், கண்ணன் குழு 'கொல்' லென்ற சிரிப்புடன் வெளியே வந்தது.

"ஏண்டா கண்ணு! நாம எத்தனை நாளைக்குத்தான் கல்லு, மண்ணை மட்டும் பெட்டிக்குள்ளே போடறது? வேறே புதுமையா ஏதாவது செய்யலாமே!" என்று ஆரம்பித்தான் சேகர்.

"டேய்! எனக்கு ஐடியா வர்ற மாதிரி இருக்கு!" என்று மண்டையைத் தட்டிக் காண்பித்த கிரி, ஏதோ சொல்ல மீண்டும், 'கொல்'லென்ற சிரிப்புடன் அந்தக் கோஷ்டி இடம் மாறியது!

* * *

"ஏண்டாப்பா! கண்டிப்பா வேலை கிடைச்சுடுமா?" என்று அடிக்கடி வரதனிடம் கேட்டுப் பாட்டி சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டிருந்தாள்.

"கிடைச்சுடும் பாட்டி! நம்ம கஷ்ட காலம் விடிஞ்சுடும். பேங்கிலிருந்து 'வேலையை ஒத்துக்கறியா'ன்னு கேட்டு வந்த லெட்டருக்குப் பதில் போட்டுப் பத்து நாளாச்சு. அநேகமா அவங்ககிட்டேயிருந்து உத்தரவு வரும்" என்று சொன்னான் வரதன்.

வரதன், கிரியின் அண்ணன். சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்டிருந்த வரதனும், கிரியும் அம்மாவுடன் பாட்டி வீட்டில் தங்கிப் படித்து வந்தார்கள்.

வருஷாவருஷம் கிரியின் அண்ணன் எழுதும் 'பாங்கு'ப் பரீட்சைகள் கஜினி முகம்மதுவையே கிண்டல் பண்ணுவது போல இருந்தன.

இப்போதுதான் எல்லாம் கைகூடி, வரதனுக்கு, 'வேலையை ஒப்புக் கொள்வதாக இருந்தால் பத்து நாட்களில் இக்கடிதத்தில் கையெழுத்துப் போட்டு அனுப்பவும்' என்று ஒரு

## என்ன வித்தியாசம்?



"வாழைப்பழத் தோலுக்கும், சீப்புக்கும் என்ன வித்தியாசம்?"

"அது (வாழை பழத்தோல்) காலை வாரிவிடும். இது (சீப்பு) தலையை வாரி விடும்.

— எஸ். தினகர்

கடிதம் வந்தது. அதற்கும் அவன் பதில் போட்டு விட்டான்.

வரதனுக்கு வேலை கிடைத்தால், அவர்கள் வீட்டில் வறுமை நீங்கும். கிரியையும் நன்றாகப் படிக்க வைக்கலாம்...

"சார் போஸ்ட் — தபால்காரர் வேலப்பன் சைக்கிளை 'ஸ்டாண்டு' போட்டு நிறுத்தி விட்டு, வாசல் படியில் நின்று உள்ளே எட்டிப் பார்த்தார்.

"என்ன அண்ணே, ஏதாச்சும் கடிதம் இருக்குதா?" என்று நெருங்கினான், வரதன்.

"வெளியூரிலிருந்து ஒண்ணுமில்ல. ரிடர்ன் லெட்டர் ஆபீசிலிருந்துதான் ஏதோ வந்திருக்குதுப்பா. இதோ பாரு!" கவ்ரைக் கையில் கொடுத்து விட்டு வேலப்பன் அடுத்த வீட்டை நோக்கி நடந்தார்.

வரதன் கடிதத்தைப் பிரித்ததும் அதிர்ச்சி காத்திருந்தது! பாதி எரிந்த கவர் உள்ளே இருந்தது. அவனுடைய முகவரி மட்டுமே தெளிவாகத் தெரிந்த அவனுடைய ஒப்புதல் கடிதம்! ரிடர்ன்ட் லெட்டர் ஆபீசிலிருந்து அவனுக்கே திரும்பி வந்திருந்தது!

"என்னடா இது கடுதாசு?" பாட்டி வீட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டாள்.

"பாட்டி" வரதனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. "பாங்கிலிருந்து வந்த லெட்டருக்குப் பதில் போட்ட லெட்டர் பாட்டி இது! அவங்க கையிலே கிடைக்காமே எனக்கே திரும்பி வந்திடுச்சு!"

"அப்போ வேலே...?"

"போன வாரமே 'கெடு' முடிஞ்சு போச்சே! இந்த லெட்டர் அவங்க கையிலே கிடைக்காததனாலே எனக்கு அந்த வேலையிலே விருப்பமில்லேன்னு நெனச்சு, எனக்கு உத்தரவு அனுப்ப மாட்டாங்க பாட்டி..." — குரல் கம்மியது வரதனுக்கு.

"அது சரிடா! கடுதாசு ஏன உனக்கே திரும்பி வந்திருக்கு?" என்றாள் பாட்டி. பாதி எரிந்து போய் 'அனுப்புனர்' விலாசம் மட்டுமே தெரிந்த அந்தக் கடிதத்தைக் காட்டினான் வரதன்.

"எப்படிடா இது?... எங்க போஸ்ட் பண்ணினே?" என்று பாட்டி கேட்டுக் கொண்டிருக்கும் போதே கிரியும் உள்ளே நுழைந்தான்.

அண்ணனும் பாட்டியும் பேசிக் கொண்டிருந்த விதத்திலிருந்து, ஏதோ தவறு ஏற்பட்டிருக்கிறது என்று புரிந்து கொண்டான். மேலும் பேசிக் கொண்டிருந்த வரதனைக் கவனித்தான். "நம்ப தெருவிலே இருக்கிற பெட்டியிலேதான் பாட்டி போஸ்ட் பண்ணினேன். எப்படிக் கடிதம் எரிந்து போச்சுன்னு தெரியலியே!" என்று வரதன் புலம்பினான். கிரிக்குப் புரிந்தது. "பாட்டி! அண்ணா! என்னை மன்னிச்சிடுங்க! நானும் என் ஃபிரண்டுகளும், தபால்பெட்டிக்குள்ளே பத்து நாள் முன்னாலே பட்டாசு கொளுத்திப் போட்டோம்..." என்று நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் சொன்னான் கிரி, அழுது கொண்டே.

"கிரி! நீ கொளுத்தினது பட்டாசு இல்லேடா! நம்ம எதிர்காலத்தையே கொளுத்திட்டியேடா!" என்று கிரியை அடிக்கக் கையை ஓங்கினான் வரதன்.



# கோகுலம்
## சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)


4050 எஸ். ராமசாமி, S/o. Dr. சிவானந்தம், வெங்கடேச காலனி, பொள்ளாச்சி.
4051 அ. மகேஷ்குமார், 1040/16, திருவொற்றியூர், சென்னை — 19.
4052 கே. கிருஷ்ணமூர்த்தி, 72, கொச மடத் தெரு, திருவண்ணாமலை — 1.
4053 டி. ரமேஷ், பிளாட் எண் 23, லட்சுமிநகர், பொழிச்சலூர், சென்னை — 74.
4054 கே. அருண், 38, கர்ண கொல்லை தெற்கு தெரு, கும்பகோணம்.
4055 டி. ரமா, கே 26, மந்தாரக்குப்பம் காலனி, நெய்வேலி — 2.
4056 ஜெய. பொன்முடி, திருவள்ளுவர் வீதி, வடசிறுவளூர், வெள்ளிமேடு பேட்டை அஞ்சல், திண்டிவனம் — 604 207.
4057 எஸ். சத்தியமூர்த்தி, 36, பாரதியார் தெரு, செங்கற்பட்டு.
4058 கே. எம். கீதா, 18, பார்த்தசாரதி நகர் 2 வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை—88.
4059 அ. ச. குமுதவல்லி, 10 F, ரேஸ் கோர்ஸ், ஹவுஸிங் யூனிட், கோவை — 18.
4060 **S. Kumarasan, 46, Wesline Block, Coromandel Post, K. G. F.**
4061 அ. அனிதா, த/பெ. பூங்குருநல், 'தென்றலகம்' பூலாம்பட்டி—637 107.
4062 எஸ். ஜெயந்தி, 28, ஏகாம்பர முதலி தெரு, வேதாச்சல நகர், செங்கற்பட்டு
4063 எஸ். சுகந்தி, 28, ஏகாம்பர முதலி தெரு, வேதாச்சல நகர், செங்கற்பட்டு
4064 ச. ஜெயகிருஷ்ணமூர்த்தி, S/o. ஏ. சந்தானம், மூர்த்தி காப்பி ஒர்க்ஸ், திருவண்ணாமலை
4065 ச. வித்தியா சங்கரி, D/o. ஏ. சந்தானம், மூர்த்தி காப்பி ஒர்க்ஸ், திருவண்ணாமலை
4066 டி. முருகானந்த், 68 B, காமராசர் நகர் நெசவாளர் காலனி, அம்மாப் பேட்டை—636014.
4067 ஆர். பொன்னம்மாள், 4244, தெற்கு மூன்றும் வீதி, புதுக்கோட்டை.
4068 கெ. கெஜலக்ஷ்மி, 42, கென்னூர் பெரியசாலை, சென்னை—23.
4069 மு. பாபு, 1, லட்சுமண நகர், 2 வது வீதி, காந்திபுரம், கோவை—12.
4070 எஸ். பார்த்தசாரதி, 2/76, அக்ரஹாரம், சூலமங்கலம்—614 206
4071 ஜெ. ஜெயகிருஷ்ணன், 384 காசி முனியப்பன் கோவில் தெரு, சேலம்
4072 எஸ்.பி. இந்துமதி, 1089 E, மாயூரநாதசாமி கோயில் தெரு, பஞ்சு மார்க்கெட், இராஜபாளையம்
4073 எஸ்.பி. பூமாதேவன், S/o. எஸ்.பி. ஷண்முகம், அண்ணாசாலை, மயிலாடுதுறை—2
4074 ஜி. நந்தகோபால், 23, கிருஷ்ணன் கோயில் தெரு, ஆடுதுறை—612 101
4075 சுதர்சன், பாண்டியன் இல்லம், நரங்கியபட்டு, கீரம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்
4076 ஆர். கார்த்திகேயன், 5/48, தங்கசாலை வீதி, புன்செய்புளியம்பட்டி, பெரியார் மாவட்டம்
4077 எல். சௌந்திரராஜன், 14, மேலவெளி, திருப்பனந்தாள்—632 504
4078 எஸ். ரகு, பிளாட் எண்: 79, டான்ஸி நகர், வேளச்சேரி, சென்னை—42.
4079 க. பாலகணேசன், 20, ராமகிருஷ்ணாபுரம் தெரு, பொள்ளாச்சி
4080 ஐ. செந்தில்குமார், 163, செங்கம் ரோடு, திருவண்ணாமலை
4081 என். ஆர். பிரபா, 3, வெங்கடேச நகர், கடலூர்—2.
4082 பா. செல்வம், 3/1066, ராஜாராம் மடத் தெரு, தஞ்சை
4083 கே. ராஜசேகரன், 16, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை—1
4084 என். பாபு, 67/B, காட்டுகொல்லை தெரு, கும்மிடிப்பூண்டி—601 201
4085 து. விஜயராகவன், 16 A, மேட்டுத் தெரு, திருவிழுந்தூர், மயிலாடுதுறை—609001
4086 எம்.ஏ. பூபதி ராஜா, 23, திரு.வி.க. ரோடு, அம்மாப்பேட்டை, சேலம்—636 003.
4087 அ. சுனிதா, 29, முராரி வரதய்யர் தெரு, சேலம்—1
4088 நா. வெங்கடேஸ்வரன், 4, குமாரசுவாமி கோயில் தெரு, திருப்பத்தூர். (வ.ஆ.) 635 601
4089 க. நாராயணி, 3/3, இரண்டாம் நிலைக் குடியிருப்பு, தெர்மல் நகர், தூத்துக்குடி—6
4090 வே. உமா, 147, சூளைமேடு ஹைரோடு, கோடம்பாக்கம், சென்னை—94.
4091 டி. அனந்தநாயகி, 3/36, வீரபத்திரசாமி கோயில் தெரு, பாண்டிச்சேரி—8.
4092 டி. அம்புஜம், 3/36, வீரபத்திரசாமி கோயில் தெரு, பாண்டிச்சேரி—8

4093 தே. முத்துக்குமார், 1A, தென்கரை வீதி, கோட்டுச்சேரி—609 609. (காரைக்கால்)
4094 ப. பன்னீர் செல்வம், பிளாட் எண் 45B, கருணாநிதி மூன்றாவது தெரு, கோட்டூர், சென்னை—85
4095 பா. ராஜாமணிவண்ணன், 20, வ.உ.சி. தெரு, ஆரணி—632 301.
4096 வெ. லதா, 28, ரயில்வே பீடர் ரோடு, விருதுநகர்
4097 வெ. சிவசுப்பிரமணியன், 28, ரயில்வே பீடர் ரோடு, விருதுநகர்
4098 ச. இராஜேந்திர பிரபு, 21, நாடார் கிழக்குத் தெரு, 2வது சந்து, சாத்தூர்
4099 ஆர். அமுதா, D/o. எம்.பி. இராமசாமி, புக்குளம் எக்ககுடி போஸ்ட், (இராமநாத புரம் மாவட்டம்)
4100 அ. நாராயணன், S/o. ஆதிமூலம், ஆசிரியர், கீழ்செருவாய், திட்டக்குடி தாலுகா.
4101 த. செந்தில்குமார், 23A, அமெரிக்கன் மிஷன் சர்ச் சந்து, டி.பி.கே. ரோடு, மதுரை.
4102 த. அகிலாண்டேஸ்வரி, D/o. கே. தங்கவேல், புளியம்பட்டி ரோடு, காந்திபுரம் நம்பியூர்—638 458.
4103 ர. ரமா, 30, பிளவர்ஸ் லேன், ஜகந்நாத நகர், அரும்பாக்கம், சென்னை—106.
4104 எஸ். ஸ்கந்தகுமார், 36, அனுமார் கோவில் படித்துறை, சிம்மக்கல் ரோடு, மதுரை—1
4105 கே. ஆர். வெங்கடேஷ், இராமாபுரம், நிம்மேலி அஞ்சல், சீர்காழி தாலுகா
4106 க. சிவசங்கரி, D/o. கனகசபாபதி பிள்ளை, தெக்கூர், ஆரல்வாய்மொழி—629 301
4107 கே. ஜெயந்தி, D/o. சி. கிருஷ்ணசாமி, நங்கவள்ளி போஸ்ட், சேலம் மாவட்டம்.
4108 எம். குகன கைலாசம், 2/135, ஈஸ்வரன் கோயில் தெரு, சென்னை—103.
4109 ரம்யா ராமநாதன், 70, லாயிட்ஸ் ரோடு, சென்னை—14
4110 கோ. சுதா, 36/2, அமீருதின் ஸ்டோர், அரபிக்குளத் தெரு, திருச்சி—2.
4111 சி. உமா, 30/2, அமீருதின் ஸ்டோர், அரபிக்குளத் தெரு, திருச்சி—2.
4112 கி. ஆனந்த், 7, அப்பாவு கிராமணி தெரு, இரண்டாவது சந்து, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை—28
4113 என். இளங்கோ, S/o. கே. நடேசன், மாணம்பட்டி அஞ்சல், தர்மபுரி மாவட்டம்.
4114 ஆர். தயாளன், 2F, 42A சர்ச் காலனி, மேட்டூர் அணை—1.
4115 வெ. விஸ்வேஸ்வரன், 8/48, தெற்குத் தெரு, கீழாம்பூர்—627 418.
4116 ஜி. முருகதாசன், 47, சங்கரவிநாயகர் கோவில் தெரு, புல்லங்குடி—627 855
4117 பா. சத்யகணேஷ், 11, பாலாஜி நகர், அனங்காபுத்தூர், சென்னை—70.
4118 என். ராகவன், F42/4, ரயில்வே குவார்ட்டர்ஸ், பொன்மலை, திருச்சி—4.
4119 ஜி. பாலகுரு (பாங்க் ஆப் தமிழ்நாடு எதிரில்) அல்லூர் போஸ்ட், திருச்சி மாவட்டம்
4120 நா. நிர்மலா, 6/120, கிருஷ்ணர் கோவில் வீதி, ராமநாதபுரம், கோவை—45
4121 சி. செந்தில்குமார், S/o. சி. சின்னசாமி, வெங்கிட்டாபுரம்—641 062.
4122 த. காந்திமதி, S/o. என். தண்டபாணி, சோதிடர், புதுத்தோட்டம் பல்லடம் ரோடு, திருப்பூர்
4123 கே.எம். பக்தரனந்தன், 4, ஏ.எஸ்.டி.புரம், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி
4124 மகாதேவுடு, 3, ஜெயநகர் 5வது தெரு, அரும்பாக்கம், சென்னை—106.
4125 கே. செல்வராஜ், 14/7—1, மகாதேவபுரம் மேட்டுப்பாளையம்—641 305
4126 பி. ஜெயந்தி, 13, தெற்குமட விளாகம், கரூர்—639 001
4127 கே. நரசிம்மன், 15பி, நைனன் தெரு, அபிராமபுரம், சென்னை—18.
4128 ஆ. செந்தில்குமார், 56F 1/4, ரயில்வே பீடர் ரோடு L.M.W. பிரிவு, கோவை—20.
4129 ர. பாரதி மோகன், B 35, பாலன் நகர், பீளமேடு, கோவை—4.
4130 எம். பாலாஜி, 92, தெய்வநாயகம் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்—2
4131 டி. அனுராதா, 39, ராமர் தெரு, ஆத்தூர் போஸ்ட், சேலம் மாவட்டம்.
4132 இரா. ராஜு, C 23, மதராஸ் சாலை, வட்டம்—8, நெய்வேலி—டி
4133 இரா. திவாகரன், 67, நடுத் தெரு, கழுகுமலை, திருநெல்வேலி மாவட்டம்
4134 ஆர். சங்கரேஸ்வரி, 67 நடுத் தெரு, கழுகுமலை, திருநெல்வேலி மாவட்டம்
4135 ந. இரா. பிரியாநல்லி, 45/2, இலட்சுமிநாயக்கன்பட்டி, (அ.நி.) —626 551.
4136 கே.எஸ். அருள், 5, பச்சையப்பன் பள்ளி தெரு, சிதம்பரம்
4137 பி. சுதா, 9, மகாதன தெரு, மயிலாடுதுறை—609 001
4138 வி. தர்மேஷ், 65A, தேரு நகர், மதுரை—625 003
4139 எஸ். ஆதிநாராயணன், 356, கீழ 4ம் வீதி, புதுக்கோட்டை
4140 அ. இளங்கோவன், 30, சென்ன கிருஷ்ண செட்டித் தெரு, சேலம்—2
4141 சி. சங்கீதா, 19, பாபு முதலி தெரு, வெள்ளாள தேனாம்பேட்டை, சென்னை—86
4142 எல். சுசீலா, D/o. பி. லட்சுமிநாராயணன், தியாகவல்லி (P.O.) கடலூர் தாலுகா
4143 எஸ். சண்முகநாதன், எருமைகுளம், இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம்
4144 பி. சுவாமிநாதன், 39A, மகாதன தெரு, மயிலாடுதுறை
4145 கே. வெங்கடேசன், 10, எம்.ஜி.கே.ஸ்கொயர் குறிச்சி, சுந்தராபுரம், கோவை—24
4146 கே. பிரபா, 13, காளிதாஸ் ரோடு, ராம்நகர், கோவை—9
4147 க. செந்தில்பாவை, 111 பாவை இல்லம், 8வது வீதி, காந்திபுரம், கோவை—12
4148 கே. ஸ்ரீதர், Dr S.R. சர்மா, மெடிகல் ஆபீஸர், 129D, காந்தி ரோடு, திருத்தணி

(இன்னும் வரும்)

# இரு மொழிகளில் பழமொழிகள்
# PARALLEL PROVERBS

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
Youthful impression lasts through life.



அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
The face is the index of the mind.

அஞ்சிலே வளையாதது ஐம்பதில் வளையுமா?
A young twig is easier twisted than an old tree.

அடாது செய்பவர் படாது படுவர்.
Evil begetteth evil.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
Make hay while the Sun shines.



இன்றைக்கென்பதும் நாளைக்கென்பதும் இல்லையென்பதற்கு அடையாளம்.
Tomorrow comes never.

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டும்.
One lie makes many.

ஒற்றுமையே பலம்.

Union is strength.

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு.

After dinner sit a while.

கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

He who has an art has everywhere a part.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.
A good horse often wants a good spur.



கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.
There is many a slip between the cup and the lip.

நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்.

Evil Communications corrupt good manners.

நிறைகுடம் தளும்பாது.

Deep rivers move in silence.


பேசப் போனாயோ, சாகப் போனாயோ?

A fool's tongue is long enough to cut his own throat.


நன்றாய் முடிவதெல்லாம் நன்றே.

All is well that ends well.

தொகுத்தவர்: அன்புப் பழம் நீ.



இரு திருடர்கள்
ஓவியர்-ராஜு : கதை : மு.சிவாஜி
ஒரு காட்டில் வசித்த பிராணிகள் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தன.
விளைந்த தானியங்கள், கிழங்குகளில் ஒரு பகுதியை பிராணிகள், தானியச் சேமிப்பு நிறுவனத்தில் சேமித்து வைத்தன.
நரி, எலிமட்டும் விவசாயம் செய்யாமல் பிறரை ஏமாற்றுவதிலேயே குறியாக இருந்தன.
எலித்தம்பி! பக்கத்து ஊரில் கடும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது தானியச் சேமிப்புக் கிடங்கிலுள்ள பயிர்களைத் திருடி அதை நாம் அந்த ஊரில் விற்கலாம்.
நல்ல யோசனை
அன்று இரவு நரியும், எலியும் தானியக்கிடங்கை நோக்கிச் சென்றன.
ஒரு முயல் காவல் காத்துக்கொண்டு நிற்கிறது. அதை அடித்துப்போடு.
முயலை அடித்துப்போட்டு விட்டு, நரி தானியக் கிடங்கின் உள்ளே நுழைந்தது.
நான் கிழங்குகளைத் திருடுகிறேன். நீ, தானியங்களைத் திருடு.
திருடிய கிழங்கு, தானியங்களை நரியும், எலியும் இன்னொரு குகையில் ஒளித்து வைத்தன.
தானியச்சேமிப்பு நிறுவனத்தின் காவலாளி முயல் இறந்துவிட்டதால் குற்றவாளியை யாராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை.
குரங்கு, குருவி, மான் போன்றவை நற்பணிமன்றம் நடத்தி வந்தன.
நண்பர்களே! முயலைக்கொன்றவனை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.


அதற்கு எங்கள் உயிரையும் தரத்தயார்.
கொலைகாரனைத்தேடி குருவி அலைந்து கொண்டிருந்தபோது..
அட! இங்கே தானியங்கள் சிதறியிருக்கே
குருவி குகைக்குள் நுழைந்தது. அங்கே நரியும், எலியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டது.
இங்குள்ள தானியங்களையும் கிழங்குகளையும் உடனே அப்புறப் படுத்துவோம்.
என் நண்பர்களிடம் இதைச் சொல்லப் போகிறேன்.
கொலையாளி நாம் தான் என்று தெரிந்து விடப்போகி-றது. உடனே கிளம்பு...
முயலைக்கொன்ற-வனை நான் கண்டு பிடிச்சிட்டேன். என் கூட நீங்க வாங்க.
மானை போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு குரங்கு, குருவியுடன் சென்றது.
அதோ பாரு..! நரியும், எலியும் திருடு போன தானியமூட்டைகளை வண்டியில் ஏற்றுகின்றன.
முயலைக்கொன்றவர்கள் இவர்களே தான் இவர்களைச் சும்மா விடக்கூடாது.
அதோ போலீஸ் வந்து விட்டது
முயலைக் கொன்று விட்டு தானியங்களைத் திருடிய பாவிகள் இவர்களேதான்... இவர்களைக்கைது செய்யுங்கள்.
திருட்டுப்பயல்களே! வாங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு


# உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



ம. ரவி.- 15261 .




எஸ். ஆனந்த். -10192



சிவ. வசந்த். - 13229



ஆர். ரஜனிகாந்த். - 14486




ஆர். காமாட்சி.- 2149




R. கோபிநாதன்.- 10732

# கடற்சங்கு

வி.ர.வசந்தன்



இருள் இன்னும் நன்ருக விலகாத அந்த அதிகாலையிலேயே முத்து எழுந்து விட்டான். தோளில் ஒரு சிறு துணிப்பையைப் போட்டுக் கொண்டு கடற்கரையை நோக்கி விரைந்தான். சீறிச் சீறிப் பாய்ந்து வந்து அவன் கால்களை நனைத்துவிட்டுத் திரும்பிய அலைகளை அவன் கண்கள் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தன.

நொப்பும், நுரையுமாக ஸோவென்று எழுந்து அவன் முழங்கால்களைத் தொட்டுச் சென்ற அலையில் வெள்ளையாகத் தெரிந்த அந்தப் பொருள் அவன் கவனத்தைக் கவர்ந்தது. பாய்ந்தோடி அதை எடுத்தான். அது ஒரு கடற்சங்கு!

ஒழுங்கற்ற வடிவத்தோடு, கூர் முனைகளும், திண்டுகளுமாக இருந்த அந்தச் சங்கை இப்படியும் அப்படியுமாகப் பார்த்தான். அது ஒரு பாறையாக அவன் கற்பனையில் உருவெடுத்தது. அதைத் தன் பைக்குள் பத்திரப் படுத்திக் கொண்டான்.

அவன் கால்கள், அலைகளில் பரபரவென்று ஓடி விதவிதமான சங்குகளையும், சிப்பிகளையும் சேகரிப்பதில் முனைந்தன.

சற்று நேரத்துக்குப்பின், முத்து தன் தோளில் கிடந்த பையிலிருந்து சங்குகளையும் சிப்பிகளையும் மணலில் கொட்டிவிட்டு அவற்றின் அருகில் அமர்ந்தான்.

பின் ஒவ்வொன்ருகக் கையில் எடுத்துப் பார்த்தான். அவன் மனம் இன்று என்னென்ன வகையில் எல்லாம் அந்தச் சங்குகளை கலைப் பொருட்களாக மாற்றலாம் என்று திட்டமிட்டது.

'இதோ இந்தச் சங்கை ஒரு பாறை போல் வைத்து அதன் மீது கடற்பறவையொன்று அமர்ந்திருப்பதுபோல் செய்யலாம்; அல்லது ஒரு கடற்செடி பாறையில் படர்ந்திருப்பதுபோல் செய்யலாம்; இந்தப் பெரிய சிப்பியைப் படகாக வைத்து அதில் ஒரு மனிதன் உட்கார்ந்திருப்பதுபோல் செய்தால்.... சே, வேண்டாம், இன்னும் புதுமையாகச் செய்ய வேண்டும்...'

அவன் கற்பனையை ஓட விட்டான். என்னென்ன செய்ய வேண்டும் என்று முடிவானதும் அதற்குத் தேவையான சங்குகளையும், சிப்பிகளையும் எடுத்துத் தனியே வைத்தான்.

சில மாதங்களுக்கு முன்பு முத்துவின் தகப்பனுர் ஒருநாள் மீன் பிடிப்பதற்காகச் சென்றபோது, கடலில்

வீசிய புயலில் சிக்கி மரணமடைந்தார். வருமானமில்லாமல் அவன் குடும்பம் திண்டாடியது. அம்மா மீன் விற்று அதில் கிடைக்கும் சொற்பப் பணம் சாப்பாட்டிற்கே போதாது. இந்நிலையில் முத்து பள்ளிக் கூடத்திற்குப் போய்ப் படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

ஒருநாள் அவன் வீட்டின் மூலையில் கிடந்த சங்குகளையும், சிப்பிகளையும் சேர்த்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தபோது, அவை ஒரு மனிதன் தன் தோளில் பாரத்தைச் சுமந்து நிற்பதைப் போல் அவன் கற்பனையில் தோற்றமளித்தது. அவன் மனத்தில் பளிச்சென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. இதை கோந்தினால் ஒட்டி, ஒரு பொம்மையாகச் செய்து, கடைகளில் விற்பதைப் போல் விற்றால் என்ன?

தன் எண்ணத்தை உடனே செயலாக்கினான். அந்தச் சங்குகளை மெல்லிய கம்பியினாலும், கோந்தினாலும் இணைத்து ஓர் அழகிய கலைப் பொருளாக உருவாக்கினான். அது அவனுக்கே பிடித்திருந்தது. புதுமையாகவும் தோன்றியது. அன்று மாலை கடற்கரையில் காற்று வாங்க வந்த மக்களிடம் கொண்டு சென்றபோது ஒருவர் அதை மூன்று ரூபாய் என்று வாங்கிக் கொண்டார். அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அன்றிலிருந்து காலையில் விதவிதமான சங்குகளைப் பொறுக்கிவந்து தன் கற்பனையில் அதற்குப் புதுவிதமான வடிவங்களைக் கொடுப்பான்; பின், அதைக் கலை நயம் மிக்க பொருட்களாக வடிவமைத்து மாலையில் கடற்கரையில் விற்பான். அவன் செய்கிற பொருட்கள் தினமும் புதிது புதிதாக இருந்ததால் உடனுக்குடன் விற்றுவிடும். சில நாட்களில் பதினைந்து இருபது ரூபாய்கள்கூட சம்பாதித்து விடுவான். சில அயல்நாட்டுக்காரர்கள் கூட அவன் பொருட்களை வாங்கிச் செல்வதில் அவனுக்கு மிகுந்த பெருமை!

இரவில் தான் சம்பாதித்து வந்த பணத்தை அப்படியே அம்மாவிடம் கொடுத்துவிடுவான். அது அவளுக்கு மிகுந்த உதவியாக இருந்ததோடல்லாமல் முத்து மேற்கொண்டு படிக்கவும் வழி செய்தது.

காலை மணி ஐந்து. மணலில் உட்கார்ந்து இன்று என்ன புதுமையாகச் செய்யலாம் என்று சிந்தித்த முத்துவின் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது.

'நான்கு பெரிய சிப்பிகளை இணைத்து அதனுள் வரிசையாகச் சிறு சிப்பிகளை ஒட்டிவிட்டால், அது ஒரு பெரிய பூவாகக் காட்சியளிக்கும். அதன் நடுவில் ஒரு கடற்கன்னி அமர்ந்திருப்பதைப் போல் செய்தால் என்ன?'

கடற்கன்னியின் உடலை அமைப்பதற்குத் தேவையான வளைந்த சங்குகள் அவனிடம் இல்லை. அவன் எழுந்து அலையில் அது போன்ற சங்குகளைத் தேடலானான்.


அப்போது, "யாரது சங்கு பொறுக்கிறது....?" என்ற அதிகாரக் குரல் இருட்டுக்குள்ளிருந்து கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினான் அவன். இருள் இன்னும் பிரியாத அந்த நேரத்தில் தன்னை நோக்கி ஒருவர் வேகமாக வருவதைப் பார்த்தான்.

அவனருகே வந்த அவர், "டேய் தம்பி, இப்படியெல்லாம் இங்கே சங்கு பொறுக்கக் கூடாது, தெரியுமா?"

"இந்தக் காலம் மாதிரியா? அந்தக் காலத்திலே ரூபாய்க்கு 16 படி அரிசி கிடைக்கும்!"

"அப்படீன்னு இந்தக் காலத்துக்கு ஏன் வந்தீங்க, தாத்தா?"

— சிவம்





என்றார் அதட்டலாக.

ஒன்றும் புரியாதவனாக, ''ஏன் ஐயா....?'' என்று பரிதாபமாக விழித்தான் முத்து.

''இந்தக் கடற்கரையில் சங்கு எடுக்கிற உரிமையை நான் அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்கு எடுத்திருக்கிறேன். இனி, இதுவெல்லாம் எனக்குத்தான் சொந்தம்'' என்றார்.

சற்று நேரம் அமைதியாக நின்ற முத்து, மெதுவாகச் சென்று, தான் சிரமப்பட்டு இவ்வளவு நேரமும் பொறுக்கிய சங்குகள் அத்தனையும் எடுத்து வந்து அவரிடம் ஒப்படைத்தான்.

''ஐயா, இதுவெல்லாம் உங்களுக்குச் சொந்தமானதுன்னு எனக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தா எடுத்திருக்க மாட்டேன்'' என்றான். அவன் கண்களில் கண்ணீர் ததும்பி இருந்தது.

முத்துவின் செய்கை அவருக்கு மிகுந்த வியப்பை அளித்தது. இது போன்ற சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் பொறுக்கிய சங்கோடு ஓடிப் போவது தான் வழக்கம். அதற்கு மாறாக அவன் திருப்பிக் கொடுத்த நேர்மை அவர் நெஞ்சைத் தொட்டது.

''தம்பி, இந்தச் சங்குகளையெல்லாம் எடுத்துட்டு போய் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டார்.

அவன் தனது தகப்பனார் மரணமடைந்த பிறகு இப்படிச் சங்குகளைப் பொறுக்கி, கலைப் பொருட்களாகச் செய்து விற்பதையும், அது தன் படிப்பிற்கும், வீட்டிற்கும் மிகுந்த உதவியாக இருப்பதையும் குரல் நடுங்கக் கூறினான்.

அதை எல்லாம் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த அவர், முத்துவின் தன்னம்பிக்கையையும் தளராத முயற்சியையும் நேர்மையையும் எண்ணி தனக்குள் வியந்தார். அவனிடம், ''நீ செய்து வச்சிருக்கிற அந்தக் கலைப்பொருட்களை எல்லாம் நான் பார்க்கலாமா?'' என்று தயங்கியவாறு கேட்டார்.

''ஓ! தாராளமா.... இதோ எடுத்துட்டு வர்றேன்'' என்று தன் குடிசையை நோக்கி ஓடிய முத்து, அடுத்த சில நிமிடங்களில் தான் விற்பதற்காகச் செய்து வைத்திருந்த சிலவற்றை எடுத்துவந்து அவரிடம் காட்டினான்.

அவற்றையெல்லாம் உற்றுப் பார்த்த அவர் கண்கள் வியப்பால் மலர்ந்தன. ஒவ்வொன்றும் வித்தியாசமாய், புதுமுறையில் கற்பனை வளத்

தோடு அமைந்திருந்தது. முத்துவின் திறமையைக் கண்டு வியக்க, அவர், அவன் தோளை அன்புடன் பற்றினார்.

''தம்பி, இந்தக் கடற்கரையில் உள்ள கண்டகளுக்கு, சங்கால் பொருட்களைச் செய்து தருவது எங்கள் தொழிற்கூடத்திலிருந்துதான். ஒரே மாதிரியானவற்றைச் செய்து செய்து எங்களுக்கே அலுத்துப் போச்சு. நீ செய்திருக்கிறதெல்லாம் ரொம்ப வித்தியாசமா இருக்கு. இவை ஒவ்வொன்றையும் பதினாஞ்சு ரூபாய்ன்னு வாங்கிக்கறேன். அது உன்னோட படிப்புக்கு உதவியா இருக்கும். இனிமேல் நீ கடற்கரையிலே போய் விக்க வேண்டியதில்லை. எங்கிட்டேயே வித்துடலாம். ஒவ்வொண்ணுக்கும் பதினைஞ்சு ரூபா. ஆனால், புதுசு புதுசா இருக்கணும்... என்ன சொல்றே?'' என்று கேட்டார் அவர்.


'ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய்!' முத்து வாய் பேச முடியாமல் நின்றான்.

''ஏன் தம்பி, உனக்கு இதுலே விருப்பமில்லையா?'' என்று கேட்டார் அவர்.

''ஓ, தினமும் புதுசு புதுசா செய்துட்டு வருகிறேன், ஐயா.... என்னாலே நிச்சயமா முடியும்'' என்று தன் நம்பிக்கையோடு பதில் சொன்னான்.

கடல் விளிம்பில் சூரியன் மெல்ல மேலெழுந்து கடல் நீரை பளபளவென்று ஆக்கிக் கொண்டிருந்தது.

முத்து தன் கண்களில் துளிர்த்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துவிட்டு அவருக்கு நன்றி கூறினான். பின், தன் அன்னையிடம் அதைத் தெரிவிக்க, தன் குடிசையை நோக்கிக் குதித்தோடினான்.



# விளையாட்டாக ஒரு கல்



பூதலூர் முத்து

கவண் வைத்துக் கல் அடிப்பதில் கிருஷ்ணமூர்த்திக்குக் கொள்ளை ஆசை.

அவன் ஆறும் வகுப்பு மாணவன். பாடப்புத்தகத்தை விட கவண் கட்டையை அவன் பத்திரமாக வைத்திருந்தான்.

'Y' வடிவத்தில் மரக்கவை வெட்டி அதை அளவாகச் சீவி, இடைவெளி அளவைப் பார்த்து... அவனுடைய இழுப்புச் சக்திக்கேற்ற நீளம் கொண்ட ஒரு 'ரப்பர் பெல்ட்'டை

அதில் இறுக்கமாகக் கட்டிக் கவண் தயாரித்து வைத்திருந்தான்.

மொட்டை மாடியில் போய் நின்று கொண்டு, அருகில் உள்ள மாந்தோப்பை நோட்டம் விடுவான். அதில் ஒரு மரத்தில் கிளிகள் 'கீ...கீ...' என்று ஒலியெழுப்பிக் கொண்டு கூட்டம் கூடும்.

சற்று நேரத்தில் அவை கலவரத்தோடு குரல் எழுப்பிக் கொண்டு அங்குமிங்குமாய்ப் பறக்கும். கால் ஒடிந்து கண்ணில் அடிபட்டு ஒன்றிரண்டு கிளிகள் கீழே விழும்.

உடனே அவன் மாடியிலிருந்து 'தடதட'வென்று கீழிறங்கி மாந்தோப்பை நோக்கி ஓடுவான். அடிபட்ட கிளிகளை எடுத்து வைத்துக் கொண்டு நண்பர்களிடம் காட்டித் தன் பிரதாபத்தை விளக்குவான்.

அவனுக்குப் பிராணிகளிடம் பாசமும் இல்லை; எதையும் எடுத்துக் கொண்டு போய் வளர்க்கும் நோக்கமும் இல்லை. உயிர்களுக்குத் தொல்லை கொடுப்பதில், அவை அலறித் துடிப்பதைப் பார்க்கையில் அவனுக்கு ஓர் அலாதியான மகிழ்ச்சி ஏற்படும்.

''இது கண்ணில் அடிபட்டது... இது காலில் அடிபட்டது... யாருக்குடா இதெல்லாம் வேணும்?'' என்று கேட்பான். அவற்றைக் கேட்கிறவர்களுக்குக் கொடுத்து விடுவான்.

கையில் வைத்திருக்கும் போதே அவை உயிருக்குப் போராடுவது போலத் தெரிந்தால் சாலையோரத்தில் அல்லது குப்பைகளில் அவற்றைத் தூக்கி எறிந்து விடுவான்.

பள்ளி விடுமுறை நாட்களில் ஏரிக் கரைக்குப் போவான். பனைமரங்களில் உட்கார்ந்திருக்கும் பல வகையான குருவிகளைப் பார்ப்பான். அடுத்த நிமிடம் அவனுடைய கவண் கட்டையை உயர்த்தி... கல்லை வைத்து... பலம் கொண்ட வரைக்கும் ரப்பரை இழுத்து விடுவான்... கல் 'விருட்'டென்று சீறிப் பாயும்; ஒரு குருவியாவது அலறிக் கொண்டு கீழே விழும்.

தெருவில் ஆடு மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்தால் அவற்றின் நெற்றியில் படும்படி குறிவைத்துக் கல்லை அடிப்பான்; அடி பொறுக்க முடியாமல் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு, அவை ஓடுவதைப் பார்த்து ரசிப்பான். அவற்றைஓட்டிக்கொண்டு வருபவனுடைய பார்வையில் படாமல் தப்பிவிடுவான்.

ஒரு தடவை ஒரு வயதான அம்மாள் தண்ணீர்ப் பானையைத் தலையில் வைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தாள். ஒரு சிறு கல்லை எடுத்துக் கவண் கட்டையில் வைத்துப் பறக்க விட்டான். அது விருட்டென்று பறந்து ஓர் ஓட்டையை ஏற்படுத்த, தண்ணீர் பீய்ச்சி அடித்தது. கல் எந்தத் திசையிலிருந்து வந்தது என்று கிழவி சுற்றும் முற்றும் பார்த்தாள். அவன் ஒளிந்து கொண்டான்.

''கட்டையிலே போக.... எந்தக் கேடு கெட்ட சனியனோ இப்படி அநியாயம் பண்ணிடுச்சே... புதுப் பானை வாங்கக் காசுக்கு நான் எங்கே போவேன்...?'' என்று புலம்பிக் கொண்டே நனைந்த உடம்போடு, ஓட்டையை விரலால் அடைத்தபடி தடுமாற்றத்தோடு நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

இப்படிக் கவண் கல் விட்டுப் பலரையும் துன்புறுத்திக் கொண்டிருந்தான்.

அவன் செய்வதை அவன் வீட்டில் யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி இரகசியமாகச் செய்து கொண்டிருந்தான். இரவு வந்ததும் அவனுடைய பெட்டிக்கு அடியில் யாருக்கும் தெரியாதபடி கவண் கட்டை மறைந்து கொள்ளும்.

இப்போது ஒரு வாரமாய் அவனுடைய தொழிலில் இன்னும் ஒருபடி 'மேலே' போய்விட்டான். சாலையில் போகும் பஸ்கள் மீது... பக்கவாட்டுத் தகரத்தில் கல் அடிப்பது இப்போது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவன் வீட்டுக்கு எதிரே ஒரு பஸ் நிறுத்தம் இருந்தது. பஸ்கள் நின்று விட்டுப் புறப்படும் நேரத்தில், கல் பறந்து வந்து 'டொங்' என்று விழும். அதற்குள் ஓட்டுநர் வேகம் எடுத்து விடுவதால்... அதற்காக நிறுத்தி விசாரித்துக் கொண்டிருப்பதில்லை. பஸ்ஸுக்குள்ளேயே ஓட்டுநரும் நடத்துநரும் வசைபாடுவார்கள். அதோடு



சரி.

அவன் கவலைப்படாமல் கல்விட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய அப்பா எப்போதாவதுதான் வீட்டிலிருப்பார். மற்ற நேரங்களில் கழனிக்குப் போய்விடுவார். அம்மா வீட்டின் பின் பகுதியில் வேலையாக இருப்பாள். அது அவனுக்கு வசதியாக இருந்தது.

"அதோ ஒரு பையன் அந்தத் திண்ணையிலே நின்னுக்கிட்டுக் கவண் வச்சுக் கல் அடிக்கிறான் பாருங்க... பஸ்ஸில விழுந்து சத்தம் கேட்டுது பார்த்தீங்களா...? பிள்ளைங்களோட புத்தி எவ்வளவு மோசமாப் போகுது பார்த்தீங்களா...?'' என்றார் பஸ்ஸில் பயணம் செய்த ஒருவர்.

* * *

பஸ் அந்த நிறுத்தத்தில் வந்து நின்றது.

கிருஷ்ணமூர்த்தி சுற்றும்முற்றும் பார்த்தான். அவன் வீட்டை விட்டுச் சற்றுத் தூரத்தில் இருந்தது விழுப்புரம் பகுதிக்குச் செல்கின்றவர்கள் ஏறுகின்ற பஸ் நிறுத்தம். அங்கு நின்றவர்கள் யாரும் இவனைக் கவனிக்கவில்லை. எதிரே இருந்த பஸ் நிறுத்தத்தில் புதுவைப் பகுதிக்குச் செல்கின்றவர்களைப் பற்றிக் கவலையில்லை. அவர்களைத் தான் பஸ் மறைத்துக் கொண்டு நிற்குமே...

இரண்டு பேர் ஏறியவுடன்

**கோகுலம்**
**சிறுவர் சங்க**
**15001-வது உறுப்பினர்**



**அ. முகமது இக்பால்**
**திருச்சி**

நடத்துநர் 'விசில்' கொடுக்கவே பஸ் சீறிக் கொண்டு வேகமாகப் புறப்பட்டது.

''டொங்...'' — முதலில் வந்த கல் பஸ் 'பாடி'யில் பட்டுக் கீழே விழுந்து உருண்டது.

எல்லோரும் திகைப்போடு சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டிருந்த போது — கண் இமைக்கும் நேரத்தில் இரண்டாவது கல் பறந்து வந்தது.

இந்தத் தடவை 'பாடி'யில் படவில்லை. பக்கவாட்டில் கம்பி இடைவெளியில் புகுந்து, பின் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு பையனின் நெற்றிப் பொட்டைத் தாக்கிவிட்டது. காயம் ஏற்பட்டு ரத்தம் வரத் தொடங்கியது.

''ஐயோ அம்மா... உயிர் போகுதே...'' என்று அலறினான் அந்தப் பையன்.

அவன் கூக்குரல் கேட்டதும், புறப்பட்டு ஓடிய பஸ் நின்றது.

மயக்கமடைந்திருந்த அந்தப் பையனைத் தூக்கிக் கொண்டு பஸ்ஸிலிருந்து இருவர் இறங்கினார்கள்.

அவர்கள் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் அவன் பயந்து ஓடிப் பெட்டிக்கு அடியில் கவண் கட்டையை வைத்துவிட்டுக் கூடத்தைத் தாண்டிச் சமையற்கட்டு வழியாகக் கொல்லைப்புறத்தை அடைந்து வேலியில் இருந்த படலைத் திறந்து கொண்டு தூரத்தில் இருந்த மோட்டார்க் கொட்டகையை நோக்கிப் போய் அங்கிருந்த கட்டிலில் படுத்துக் கொண்டான்.

விழுப்புரத்திலிருந்து புதுவைக்குப் போய்க் கொண்டிருந்த கண்ணன் என்பவன்தான் அடிபட்ட பையன். அவன் கிருஷ்ணமூர்த்தியின் மாமா பையன்!

''உங்க வீட்டுக்கு எதிரே இருக்கிற பஸ் ஸ்டாப்பில் பஸ் நின்னுட்டுப் புறப்பட்டுது. யாரோ ஒரு போக்கிரிப் பையன் பஸ்ஸைப் பார்த்துக் கவண் வைச்சுக் கல்லை அடிச்சிட்டான்... அது நம்ம கண்ணனின் நெத்திப்பொட்டில பட்டுடுச்சு... பாண்டிக்குப் போயிட்டுத் திரும்ப வரும்போது இங்கே வரலாம்னு இருந்தேன்... போகும்போதே இறங்கும்படி ஆயிடுச்சு...'' என்றார் கண்ணனின் தந்தை சிவராமன்.

பக்கத்துத் தெருவில் இருந்த டாக்டருக்கு ஆள் அனுப்பிவிட்டு... 'பஸ்ஸில வலது பக்கமாக் கல் விழுந்திருக்கு... அப்பமன்னு நம்ம வீட்டுக்கிட்டே இருந்துதான் கல் போயிருக்கணும்... யார் அந்த அயோக்கியப் பயல்னு தெரியலியே...'' என்ற சிந்தனையிலேயே இருந்தார் கிருஷ்ணமூர்த்தியின் தந்தை தணிகாசலம்.

* * *

''டேய், கிருஷ்ணமூர்த்தி, என்னடா ஒண்ணுந் தெரியாதவன் மாதிரி இங்கே வந்து படுத்துக்கிட்டு இருக்கே... உங்க அப்பா உங்க வீட்டுப்பக்கமா எந்தப் பையன் போனாலும் 'தோலை உறிச்சிடுவேன்... பஸ்ஸிலே கவண் கட்டை வைச்சுக் கல் அடிச்சவன் யாருடா''ன்னு கேட்டுத் தொல்லைப்படுத்தறாரு...'' என்றான் கோபால்.

''ஏண்டா என்ன விஷயம்?''

''உன்னோட மாமா பையன் அந்தப் பஸ்ஸிலே வந்தானாம்... இன்னைக்குப் பாண்டியிலே மெடிகல் காலேஜ் நுழைவுத் தேர்வு எழுதறதுக்காக வந்

தானும்...''

''அவனுக்கு என்ன ஆச்சுடா?'' என்று திகைப்போடு கேட்டான் அவன்.

''நீ வீட்ட கவண் கல் பஸ்ஸுக்குள்ள போயி அவன் நெத்திப் பொட்டுல பட்டிடுச்சாம்... ரத்தம் வந்து மயக்கம் போட்டுக் கிடக்கான்...'' என்றான் கோபால்.

''ஐயோ... இப்படி ஆவுமனு நினைக்கவே இல்லைடா கோபால்...'' என்றவன் மறுவிநாடி, ''நான்தான் அடிச்சவன்னு அப்பாகிட்டே சொல்லிட்டீங்களா?'' என்று நடுங்கிக் கொண்டே கேட்டான்.

''நாங்க ஏண்டா சொல்றோம்... மரியாதையா நீயே போய் உங்கப்பா கிட்டே ஒத்துக்க...''


தன்னால் துன்பத்துக்கு உள்ளான கண்ணனுக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லையே என்று பதற்றத்தோடு இருந்தான் கிருஷ்ணமூர்த்தி.

கண்ணனைப் பார்க்கப் போய், கிருஷ்ணமூர்த்திதான் இவ்வளவுக்கும் காரணம் என்று கண்டுபிடித்து விட்டால்...! அதை நினைத்த போது அவனுக்கு மிகவும் அச்சமாக இருந்தது.

''கிருஷ்ணமூர்த்தி! நீ இவ்வளவு நாளா செஞ்சுக்கிட்டிருந்த காரியத்தைப் பெருமையானதா நினைச்சுக்கிட்டிருந்தே. சொல்லிக்கிட்டு இருந்தே... பெருமையானதா இருந்தா எல்லோருக்கும் தெரியும்படி செய்ய வேண்டியதுதானே...? தப்பா இருந்ததுனாலேதானே வீட்டுக்குத் தெரியாமல் திருடன் மாதிரி ஒளிஞ்சுக்கிட்டு செஞ்சுக்கிட்டிருந்தே... வாயில்லாத உயிருங்களை அடிச்சுத் துன்புறுத்தினே... ஏழை பாழைங்க பானைகளை உடைச்சே... சாமான்களைத் தட்டிவிட்டே... சோறு கொட்டிப் போனா கூட சந்தோஷப் பட்டே...

உன்னோட செயல்ல உள்ள தீமை இன்னைக்கு உனக்குத் தெரிஞ்சு போச்சுன்னு நினைக்கறேன். இனிமே மறுபடி அதைச் செய்யாதே... கவண் கட்டையை எடுத்துக்கிட்டு வந்து ஏரியிலே வீசி எறிஞ்சுடு... வா இப்போ வீட்டுக்குப் போகலாம்... இனிமே அந்தத் தப்பைச் செய்யறதில்லேன்னு முடிவுக்கு வந்திட்டேல்ல? அதுவே வீட்டுக்குப் போகும் தெம்பை உனக்குக் கொடுக்கும்'' என்றான் கோபால்.

''இனிமேல் நான் அந்த வழிக்கே போக மாட்டேன்... இப்போ நான் கண்ணனைப் பார்த்தாகணும்... என்னோட விஷயம் அப்பாவுக்குத் தெரிஞ்சு அவர் அடிச்சாலும் பரவாயில்லே... கண்ணன், இன்னைக்கு நல்ல படியா பரீட்சையை எழுதணும்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான் கிருஷ்ணமூர்த்தி.




குழந்தையைத் தூக்கிப் போட்டு யாரோ விளையாடுகிறார்கள்.

# தெரியுமா சேதி!


விமலன்

நத்தையில் ஆண், பெண் என பாகுபாடின்றி எல்லாம் ஒன்றே.





நீலநிறத்தைக் கண்டால் ஈக்களுக்குப் பிடிக்காது.





தேனை உறிஞ்சி, கால்கள் மூலம் ருசி அறியக்கூடிய அமைப்பைப் பெற்றுள்ளது வண்ணத்துப் பூச்சி.



எறும்புகளுக்கு கேட்கும் சக்தி அறவேயில்லை.

முதலைகளுக்கு கண் இமைகள் இன்மையால் தூங்கும்போது கூட கண் திறந்தே இருக்கும்.






# பாட்டியின் போட்டோ

—ந. இரவிப்பிரகாஷ்

திண்ணையிலே மழலைப் பட்டாளங்களின் அட்டகாசம்! 'ஓ'வென்ற இரைச்சல் காதைப் பிளந்தது.

லட்சுமிப் பாட்டிக்குத் தினசரி இது ஒரு தலைவேதனை. அந்தத் தெருவிலேயே லட்சுமிப் பாட்டியின் வீட்டுத் திண்ணை தான் பெரிய திண்ணை. அதில் தான் தினசரி சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டதும், தெருப் பிள்ளைகள் மொத்தமும் கூடிக் கொண்டு கும்மாளம் போடும்.

பாட்டிக்குத் தொண்ணூறு வயசு. கண்கள் இடுங்கிப் போயிருந்தன. முகத்தில் மடிப்பு மடிப்பாய்ச் சுருக்கங்கள். பற்கள் மொத்தமும் கொட்டிப் போய், முகவாய்க்கட்டை மூக்கை வந்து தொட்டது. ரொம்ப காலமாக, கற்கள் பதித்த கனமான தோடு அணிந்திருந்ததால், பாட்டியின் காதுத் துவாரம் பெரிதாகிப் போய் புத்தர் காது மாதிரி தொங்கியது.

இந்த நிலையிலிருந்த பாட்டி, பிள்ளைகளின் கண்களுக்குக் கேலிப் பொருளாகிவிட்டாள். அவளின் திட்டல்கள் எல்லாம் அக்குழந்தைகளுக்கு லட்சியமில்லாது போய் விட்டன. பாட்டி மாதிரியே நடந்து, பாட்டி மாதிரியே பேசிக் கிண்டல் செய்வது வேடிக்கையாயிருந்தது அவர்களுக்கு.

"ஏந்தா பசங்களா! ஏந்தா இப்பதி என்னைப் பாதாப் பதுத்தி பம்பதமா ஆத்ததீங்க! கத்தைய எதுத்து வந்து அதிச்சேன்னா தெதியுமா?" என்று பாட்டி திட்டினால், குழந்தைகள் கொஞ்சமும் பயப்படாமல், "ஐயையே! என்ன பாட்டி! உனக்குப் பேசவே தெரியலே! குட்டிப் பாப்பா மாதிரி உளரறே!" என்று கேலி பேசு

# வாயில்லா ஜீவனா?

இவர்: ஐயோ பாவம்! வாயில்லா ஜீவன் இந்த ஆட்டைப் போட்டு இந்த அடி அடிக்கிறீங்களே, ஏன்?

அவர்: இதுவா வாயில்லா ஜீவன்? இந்தப் பையனிடம் ஏப்ரலுக்கு அடுத்த மாசத்தின் பேர் என்னன்னு கேட்டுக்கிட்டு இருக்கும்போது இது மே'னு கத்துது!

— கடலூர் கன்னியப்பன்



வார்கள்.

"ஐயையே! தொள்ளைக் காது, பொக்கை வாய்..." என்று பாட்டியைச் சுற்றிச் சுற்றி வந்து கைகொட்டிச் சிரிப்பார்கள். பாட்டி பேசுவது போலப் பேசிக் கேலியும் செய்வார்கள்.

பாட்டிக்கு இதெல்லாம் ரொம்ப வேதனையாக இருந்தது.

அதே தெருவிலிருந்த பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவரிடம் தன் மன வேதனையை ஒருநாள் பாட்டி கூறினாள். "பாட்டி, கவலைப்படாதே. இந்தக் குழந்தைகளை நான் கண்டிக்கிறேன். இனி அவர்கள் அவ்விதம் செய்ய மாட்டார்கள்" என்று பாட்டிக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனார், அந்த ஆசிரியர்.

பள்ளிக்கூடத்தில், அந்த ஆசிரியர் ஓர் அழகான சிறுமியின் போட்டோவைக் காட்டி, "இதைவிட அழகான போட்டோ உங்களில் யாரிடத்திலாவது இருக்கிறதா?" என்று கேட்டார். எல்லாப் பிள்ளைகளும் அவர் கையிலிருந்த போட்டோவைப் பார்த்தார்கள்.

அதில் ஒரு சிறுமி, மிகவும் அழகாக, இரட்டைச் சடை போட்டுக் கொண்டு காதுகளில் வளையங்கள் அணிந்து கொண்டு கண்களுக்கு மையிட்டுக் கொண்டு, தலை நிறையப் பூ வைத்துக் கொண்டு, பளபள வென்று கவுன் அணிந்து கொண்டு, தன் முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்தபடி இருந்தாள்.

அந்தப் படத்தைப் பார்த்தார்கள். பிறகு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். யாருமே அந்தப் போட்டோவிலிருந்த சிறுமியை விட அழகானவர்கள் இல்லை. யாரிடத்திலும் அதைவிட அழகான போட்டோ இல்லை.

ஆசிரியர் பேச ஆரம்பித்தார்.

"குழந்தைகளே! இது யாருடைய போட்டோ தெரியுமா? நீங்கள் தினமும் யாரைக் கேலி பேசியும், பழித்தும் வருகிறீர்களோ, அந்தப் பாட்டியின் போட்டோதான் இது. பாட்டி சிறியவயதில் எவ்வளவு அழகாக இருந்திருக்கிறாள்! உங்களில் எத்தனை பேர்கள் இந்த மாதிரி அழகாய் இருக்கிறீர்கள்? பாட்டியைப் போல் நாமும் ஒரு காலத்தில் கிழவிகளாகவும் கிழவர்களாகவும் ஆகத்தான் போகிறோம். அப்போது நாமெல்லாம் எப்படி எப்படி இருப்போமோ? பாட்டியைப் பொக்கை வாய் என்று கிண்டல் பண்ணுகிறாயே உமா, படத்தில் பார்; பாட்டிக்கு முத்துப் போன்ற பற்கள். ஆனால், உனக்குப் பற்கள் எடுப்பாக வெளியே தெரியும்படி இருக்கிறது. அதனால், எப்போதும் நாம் நம்மை மறந்துவிட்டுப் பிறரையே பழித்துப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. மகிழ்ச்சியாகப் பேசி நட்புக் கொள்ளுதல்தான் நன்மை தரும். ஆகையால், இனி நீங்களெல்லாம் பிறரைப் பழித்துக் கேலி பேசாமல் நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" என்று அறிவுரை வழங்கினார்.

அன்று முதல் பாட்டியை யாரும் கேலி செய்வதே இல்லை. பாட்டியின் வேதனை பறந்தோடி விட்டது!

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

*Editorial Office:* 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034 (Phone: 473389)

*Administrative Office:* Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)



# மதன் மோகன் மாளவியா

தோற்றம்: 25-12-1861 மறைவு: 1946

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka



# அன்னை ஸ்ரீ சாரதாதேவி

தோற்றம்: 22-12-1853 மறைவு: 20-7-1920